


# தமிழ்நாடு இபேப்பர்.காம்




www. tamilnaduepaper.com

CHENNAI | Volume- 3 | Issue:278 | 23-04-2026 | வியாழக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

23.04.2026 சித்திரை 10
வியாழக்கிழமை

சூரிய உதயம் 6.00

திதி:
சப்தமி

நட்சத்திரம்:
திருவாதிரை அ.கா 3.02

யோகம் :
அமிர்த யோகம்.

சந்திராஷ்டமம் :
அனுஷம்

நல்ல நேரம்
கா 10.30 – 12.00

இராகு காலம்
ம 1.30 – 3.00

எமகண்டம்
கா 6.00 – 7.30

குளிகை
கா 9.00 – 10.30

சிறப்பு :
முகூர்த்த நாள். கச்சியப்ப முனிவர் குருபூஜை, முதலியாண்டார் திருநட்சத்திரம், வாஸ்துநாள். உ.வே. சாமிநாத ஐயர் நினைவு நாள்.

வழிபாடு :
காரிய சித்தி மாலை பாடி வழிபடுதல். வாஸ்து பூஜை செய்ய நல்ல நேரம்

*திதி,
நட்சத்திரம் (முடியும் நேரம் கணிக்கப்பட்டுள்ளது)

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# தமிழக சட்டமன்ற தேர்தல்: இன்று 234 தொகுதிகளில் வாக்குப்பதிவு



சென்னை, ஏப்.23

தமிழக சட்டமன்ற தேர்தல் இன்று (வியாழன்) நடைபெற உள்ளது. இதையடுத்து மொத்தமுள்ள 234 தொகுதிகளில் 4,023 வேட்பாளர்கள் களத்தில் நிற்கின்றனர்.

தி.மு.க., அ.தி.மு.க., நாம் தமிழர், த.வெ.க. என 4 முனை போட்டி நிலவுகிறது. இந்த தேர்தலில் வெற்றி வாகை சூடுவதற்காக ஒவ்வொரு கட்சி களும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டன. தற்போது கோடையின் வெப்பம் அதிகமாக இருந்தாலும், தலைவர்கள்-வேட்பாளர்களின் பிரசாரங்கள் அதனை விட அனல் கக்கியது.

நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் 4,023 தகுதியுள்ள வேட்பாளர்கள் களத்தில் போட்டியிடுகின்றனர். அவர்களில் 3,579 பேர் ஆண்கள், 443 பேர் பெண்கள், ஒருவர் மூன்றாம் பாலினத்தவராகும்.

தமிழகத்தின் மொத்த வாக்காளர் எண்ணிக்கை தற்போது 5 கோடியே 73 லட்சத்து 43 ஆயிரத்து 291 ஆகும். அவர்களில் 2 கோடியே 80 லட்சத்து 30 ஆயிரத்து 658 பேர் ஆண்கள், 2 கோடியே 93 லட்சத்து 4 ஆயிரத்து 905 பேர் பெண்கள், 7,728 பேர் மூன்றாம் பாலினத்தவராகும்.

வாக்காளர் பட்டியல் தொடர்பான எஸ்.ஐ.ஆர். பணிகள் நிறைவடைந்த நிலையில், சுமார் 40 லட்சம் வாக்காளர்கள் பெயர்கள் நீக்கப்பட்டன. எனவே, ஏற்கனவே வாக்களித்து வருபவர்களே இந்த முறை வாக்களித்தாலும், தமிழகத்தின் வாக்கு சதவீதம் 85-ஐ தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தலை சுதந்திரமாக நடத்த தமிழகத்திற்கு 326 தேர்தல் பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் அனுப்பி வைத்துள்ளது. அவர்களில் 136 பேர் பொதுப்பார்வையாளர்கள், 40 பேர் போலீஸ் பார்வையாளர்கள், 150 பேர் செலவினப்பார்வையாளர்கள். இந்த தேர்தல் காலகட்டத்தில் பறக்கும் படையினரால் ரூ.1,200 கோடி மதிப்புள்ள பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

300 கம்பெனி துணை ராணுவத்தினரும், 1.20 லட்சம் தமிழக போலீசாரும் தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தேர்தல் பணிகளுக்காக 3.60 லட்சம் அரசு ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மொத்தமுள்ள 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகளில், வாக்குப்பதிவு எந்திரங்கள், வாக்கை உறுதி செய்யும் 'விவிபாட்' எந்திரங்கள், கட்டுப்பாட்டு எந்திரம் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. இந்த எந்திரங்கள் அனைத்தும் இன்று (புதன்கிழமை) காலை முதல் அந்தந்த வாக்குச் சாவடிகளுக்கு கொண்டு செல்லப்பட உள்ளன. இதற்காக தேர்தல் நடத்தும் அதிகாரியின் அலுவலகத்தில் இருந்து வாக்குப்பதிவு எந்திரங்கள், விவிபாட், கட்டுப்பாட்டு எந்திரங்கள் பாதுகாப்பாக வாகனங்களில் எடுத்துச்செல்லப்படுகின்றன.

அவை அதற்கான வாக்குச்சாவடிகளில் இன்று நிறுவப்படும். அந்தப் பணியை பெல் நிறுவன பொறியாளர்கள் மேற்கொள்வார்கள். அந்த வகையில் தமிழகத்தின் அனைத்து 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகளுக்கும் இந்த எந்திரங்கள் கொண்டு செல்லப்பட்டு நிறுவப்பட்டுவிடும்.

சிசிடிவி கண்காணிப்பு: ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கு உள்ளேயும், வெளியேயும் சிசிடிவி வைக்கப்பட்டிருக்கும். அங்கு நடக்கும் வாக்குப்பதிவை நேரடியாக கண்காணிக்க 3 வகை கட்டுப்பாட்டு அறைகளை தேர்தல் கமிஷன் அமைத்துள்ளது. அதன்படி, தலைமை தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரி, தேர்தல் நடத்தும் அதிகாரி ஆகியோரின் கட்டுப்பாட்டில் வரும் வகையில் அவை அமைக்கப்பட்டுள்ளன.

## வாக்களிக்க 12 ஆவணங்களை அடையாளமாக காட்டலாம்

ஒருவேளை வாக்காளர் அடையாள அட்டை இல்லாவிட்டாலும் ஆதார் உள்ளிட்ட 12 மாற்று ஆவணங்களைக் காட்டி வாக்களிக்கலாம்.

அதன் விவரம் பின்வருமாறு:-

1.ஆதார் அட்டை

2.புகைப்படத்துடன் கூடிய வங்கி அல்லது தபால் கணக்குப் புத்தகங்கள்

3.மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அடையாள அட்டை

4.தொழிலாளர் நல அமைச்சகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு அட்டை அல்லது ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டு அட்டை

5.ஓட்டுனர் உரிமம்

6.பான் கார்டு

7.தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட திறனட்டை

8. பாஸ்போர்ட்டு

9. புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம்

10. மத்திய அல்லது மாநில அரசுகள் அல்லது பொதுத்துறை நிறுவனங்கள் அல்லது வரையறுக்கப்பட்ட பொது நிறுனங்களின் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள்

11. நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற அல்லது சட்டமேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை

12. மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட தனித்துவமான ஊனமுற்றோர் அடையாள அட்டை. ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை பயன்படுத்தி வாக்களிக்க லாம். பூத் சிலிப் என்ற வாக்காளர் தகவல் சீட்டு, வாக்களிப்பதற்கு செல்லத்தக்கதல்ல. வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாவிட்டால், இவற்றில் எந்த ஆவணத்தை வைத்தும் வாக்களிக்க முடியாது.

## சென்னையில் வெய்யில் கொளுத்தும்! எச்சரிக்கை



சென்னை, ஏப்.23:

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டிருக்கும் தகவலில், இன்று சென்னையில் வெய்யில் மற்றும் புழுக்கம் அதிகமாக காணப்படலாம். எனவே, வாக்காளர்கள் வரிசையில் அதிக நேரம் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டால் அதற்கு ஏற்ப தயாராக செல்ல வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

அதாவது, காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை சென்னையில் வெப்பம் அதிகமாக இருக்கும். வாக்களிக்க 10 மணிக்கு மேல் வாக்குச்சாவடி செல்வோர் கையில் தொப்பி, குடை மற்றும் கண்கண்ணாடி கொணடு செல்வது நல்லது.

தண்ணீர் பாட்டில் நிச்சயம் எடுத்துச் செல்லவும். உடல்நிலை சற்று களைப்பாக இருப்பவர்கள் ஓஆர்எஸ் மருந்து கலந்த தண்ணீரை எடுத்துச் செல்லலாம்.

வயதான மக்கள் வாக்களிக்கச் செல்லும்போது நிச்சயம் உடன் ஒருவரை உதவிக்கு அழைத்துச் செல்லவும்.

வாக்குச்சாவடிகளில் முதியவர்களுக்கான வசதிகளைப் பயன்படுத்தி பாதுகாப்பாக வாக்களிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## 'பிரதமர் மோடியை 'பயங்கரவாதி' என கூறிய கார்கே மீது நடவடிக்கை எடுப்பீர்' - தேர்தல் ஆணையத்திடம் பாஜக முறையீடு



புதுடெல்லி, ஏப்.23:

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு சென்னையில் நேற்று (ஏப்.21) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, "பெரியார், அம்பேத்கர், அண்ணாதுரை, காமராஜர், கருணாநிதி போன்ற திராவிடத் தலைவர்களுக்கு எதிரானது அதிமுக - பாஜக கூட்டணி.

அண்ணாதுரையின் பெயரை வைத்துக்கொண்டு அதிமுக எப்படி பிரதமர் மோடியுடன் கைகோக்க முடியும்? அவர் ஒரு பயங்கரவாதி" என தெரிவித்திருந்தார்.

அவரது இந்தக் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள பாஜகவின் மூத்த தலைவர்களான நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு, சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் ஆகியோர் இந்திய தேர்தல் ஆணையத்தில் புகார் அளித்துள்ளனர். 'கார்கேவின் இந்தக் கருத்து தேசத்துக்கு இழைக்கப்பட்ட பெரும் அவமானம். இது நாகரிகத்தின் அனைத்து எல்லைகளையும் மீறிவிட்டது. இப்படி பேசுவதை தேர்தலுக்கு முன்பாக இயல்பாக்கக் கூடாது. அவர் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பாக அமித் ஷா வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "காங்கிரஸ் கட்சி தனது நடத்தையில் நாள்தோறும் புதிய தரம் தாழ்ந்த நிலையை எட்டி வருகிறது. பொது விவாதங்களின் தரத்தை வீழ்ச்சியடையச் செய்வதில் அது தனது சொந்த சாதனையை தொடர்ந்து முறியடித்து வருகிறது.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பொது ஒழுக்கத்தின் அனைத்து நெறிமுறைகளையும் மீறி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை பயங்கரவாதி என அழைத்ததன் மூலம், நாட்டுக்கே அவமானத்தை ஏற்படுத்தி உள்ளார்.

நாட்டின் முதன்மைத் தலைவருக்கு இழைக்கப்பட்ட இந்த அவமதிப்பு, அவரை நேசித்து ஆதரிக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு இழைக்கப்பட்ட அவமதிப்பாகும்.

கடந்த 12 ஆண்டுகளில் தீவிரவாதத்தை முழுமையாகக் கட்டுப்படுத்திய மோடியைப் போன்ற ஒரு தலைவரை பயங்கரவாதி என்று அழைப்பது மிகவும் கண்டிக்கத்தக்க செயலாகும் என்று தெரிவித்துள்ளார்

## சட்டமன்ற தேர்தல்: வாக்குப் பதிவு நேரம் அறிவிப்பு

சென்னை, ஏப்.23:

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேர விவரங்கள் இதோ, காலை 7:00 மணி முதல் மாலை 6:00 மணி வரை. மாலை 6 மணிக்கு வரிசையில் நிற்பவர்களுக்கு டோக்கன் வழங்கப்பட்டு, அனைவரும் வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




## ரூ.1,262 கோடி மதிப்பில் தங்கம், பணம் பறிமுதல்: அர்ச்சனா பட்நாயக்



சென்னை, ஏப்.23:

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் (ஏப்.23) ஒரே கட்டமாக நடைபெற உள்ள நிலையில், தேர்தலை ஒட்டி மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகள் தொடர்பாக அர்ச்சனா பட்நாயக் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறுகையில், "தமிழகத்தில் தேர்தல் பணியில் உள்ள அரசு ஊழியர்கள் இன்று வரை தபால் ஓட்டுக்களை போட முடியும். இதுவரை 4,18,541 வாக்குகள் போடப்பட்டுள்ளன.

தமிழகத்தில் 33,133 இடங்களில் மொத்தம் 75,064 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 249 மாதிரி வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெண் பணியாளர்கள் நடத்தும் வாக்குச்சாவடிகள் 325 ஆக உள்ளது, இளைஞர்கள் மட்டுமே நடத்தும் வாக்குச்சாவடிகள் 79 ஆக உள்ளது. 5,949 வாக்குச்சாடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளன.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்காக 1,06,418 வாக்குச்சாவடி இயந்திரங்கள் கையிருப்பில் உள்ளன. இதேபோல், 75,064 கட்டுப்பாட்டு கருவிகளும், 75,064 விவி பேட் கருவிகளும் கையிருப்பில் உள்ளன. தேர்தல் பணிக்கு போதிய அளவு இயந்திரங்கள் கையிருப்பில் உள்ளன. வாக்குச்சாவடி இயந்திரங்கள் மற்றும் கன்ட்ரோல் யூனிட் ஆகியவற்றை பொருத்தவரை 20 சதவீதம் அளவுக்கு கூடுதலாக உள்ளன. விவிபேட் 30 சதவீதம் அளவுக்கு கூடுதலாக கையிருப்பில் உள்ளது.

வாக்குப்பதிவு மையங்களில் 3 லட்சத்து 60 ஆயிரத்து 68 அதிகாரிகள் பணியில் இருப்பார்கள். பாதுகாப்புப் பணிகளில் மொத்தம் 83,875 காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். கால் சென்டர் (எண் - 1950), மீடியா கண்காணிப்பு, செலவு கண்காணிப்பு, வாக்குப்பதிவு கண்காணிப்பு என மொத்தம் 4 கட்டுப்பாட்டு அறைகள் முழு வீச்சில் செயல்பட்டு வருகின்றன. தேர்தலை ஒட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்பு பணிகள் காரணமாக இதுவரை ரூ.1,262 கோடி மதிப்பில் தங்கம், மதுபானங்கள், பரிசுப் பொருட்கள், ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்றார்.



# திருக்குறள் குறள்-598

உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னுஞ் செருக்கு



ஊக்கம் இல்லாதவர்
இவ்வுலகில் யாம் வண்மை
உடையேம் என்றுத்
தம்மைத் தான் எண்ணி
மகிழும் மகிழ்ச்சியை
அடையமாடடார்.

## சிந்திக்க ஒரு நொடி



மனிதனுக்கு எதில் ஆர்வம்
இருக்கின்றதோ அதற்கு
அவனுக்கு நேரம்
கிடைக்கும்....

எதில் ஆர்வம்
இல்லையோ அதற்கு
அவன் நேரமில்லை என்று
சொல்வதே சாக்கு....

**உஷா முத்துராமன்**

## நம்பெருமாள் பூச்சாற்று கோடை உற்சவம்



ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில். நம்பெருமாள் பூச்சாற்று கோடை உற்சவம் 2026 முதல் நாள் மணல் வெளியில் பூச்சாற்றுதல் சேவை.

## ராமானுஜர் திருஅவதார உற்சவம்



காஞ்சி ஸ்ரீ வரதன் சன்னதி ஸ்வாமி ராமானுஜர் திருஅவதார உற்சவம் பத்தாம் திருநாள் காலை திவ்ய சேவை.

## ஆதிசங்கரர் பூஜை சிறப்பு வழிபாடு



கடலூர் மாவட்டம் விருத்தாச்சலம் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் சத்திரத்தில் ஆதிசங்கரர் ஜெயந்தி விழாவை முன்னிட்டு ஆதிசங்கரருடைய படம் வைத்து,அம்மனை அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பக்தி பாடல்களை பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன்,மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு ஆதிசங்கரரை வேண்டி அருள் பெற்றனர். மகிளா விபாக் சார்பில் பூஜைகள் வெகு சிறப்பாக நடைபெற்றது. அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

# உக்கல் மடாவளம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயிலில் ஸ்ரீஜெகத்குரு ஆதிசங்கரர் குருபூஜை பெருவிழா: 108 வலம்புரி சங்குடன் நடைபெற்ற கனகதாரா பூஜையில் திரளான பக்தர்கள் பங்கேற்பு

**செய்யாறு ஏப். 23:**

செய்யாறு அடுத்த உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயிலில் ஸ்ரீ ஜெகத்குரு ஆதிசங்கர குருபூஜை பெருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது.



திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அடுத்த உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயிலில் ஸ்ரீ ஆதிசங்கரர் குரு பூஜை பெரு விழா நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

இருபதாம் தேதி மாலை 6 மணிக்கு மங்கள கணபதி ஹோமத்துடன் ஸ்ரீஆதிசங்கரர் ஜெயந்தி பூஜை ஆரம்பமானது. மாலை 6 15 மணிக்கு இரண்டாம் கால பூஜையும் ஸ்ரீ ஜெகத்குரு ஹேம லோகன ஹோமமும் நடைபெற்றது.

நேற்று முன்தினம் காலை 7 மணிக்கு யாகசாலை பூஜையும் காலை 9 மணிக்கு 108 வலம்புரி சங்குடன் கனகதாரா வேத மங்கள பூஜையும் ஆலய குரு ஸ்ரீ சங்கர் குருஜியால் நடத்தப்பட்டது . நிகழ்வில் பால சந்நியாசி லோகேஸ்வர சரஸ்வதி சுவாமிகள் கலந்து கொண்டார்.

காலை 10 மணிக்கு மங்கள மகா தீப ஆராதனை நடைபெற்றது. பின்னர் பக்தர்களுக்கும், பொதுமக்களுக்கும் அறுசுவை விருந்து வழங்கப்பட்டது. திரளான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

# உலக பூமி தினத்தையொட்டி ’புவியை நேசி’ உரையரங்கம்

**வந்தவாசி, ஏப் 23:**

உலகபூமி தினத்தையொட்டி இன்று வந்தவாசி ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையத்தில் புவியை நேசி...! உரையரங்கம் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன் தலைமை தாங்கினார்.



ஆசிரியர் மகாவீர் வரவேற்றார். ஸ்ரீவெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி முதுகலை ஆசிரியர் எம்.எஸ்.கார்த்திகேயன் முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக, ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் சு.அசோக் குமார் பங்கேற்று, புவி வெப்பமடைதல் காரணமாக பல்வேறு பேரிடர்களை நாம் சந்தித்து வருகிறோம்.

குறிப்பாக சாலை விரிவாக்கம் காரணமாக பல்வேறு மரங்கள் நம் கண் முன்னே அழிக்கப்படுகின்றன. எனவே சுற்றுச்சூழல் பாதுகாக்க அனைவரும் மரக்கன்றுகளை நட்டு தூய தேசம் காப்போம் என்று வலியுறுத்தினார்.

சமூக ஆர்வலர் டாக்டர் ம.சுரேஷ்பாபு வாழ்த்துரை வழங்கினார். பூமி தின பேச்சு மற்றும் ஓவியப் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. மேலும் பங்கேற்ற மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. இறுதியில் ஆக்ஸ்போர்டு ஸ்போக்கன் இங்கிலீஷ் மைய நிர்வாகி கு.சதானந்தன் நன்றி கூறினார்.

# சித்திரை பிரம்மோற்சவம் 2-ஆம் நாள் உற்சவம்

**திருவண்ணாமலை, ஏப்.23:**

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் சித்திரை பிரம்மோற்சவத்தை முன்னிட்டு பஞ்ச மூர்த்திகள் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், பிரசாதம் நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.



ஏராளமான பக்தர்கள் பூஜையில் கலந்து கொண்டு வேண்டி அருள் பெற்றனர். இரவு சுவாமி,அம்மன் மாட வீதி உலா மங்கள வாத்தியங்களுடன் நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் மாடவீதி உலாவில் கொண்டு வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# உலக புத்தக தினம் - 2026

மக்களிடையே வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக யுனெஸ்கோ சார்பில் உலக புத்தக தினம் கொண்டாடப்படுகிறது.



புத்தக வாசிப்பால் கிடைக்கும் அளவற்ற மகிழ்ச்சியை குழந்தை பருவத்திலேயே ஏற்படுத்தினால் எழுத்து மீதான ஆர்வம் தூண்டப்பட்டு அவர்களின் எழுத்துகளை பின்னாளில் பிரசுரிக்கவும் உதவும் என நம்பப்படுகிறது.

புத்தகம் வாசிப்பதன் மூலம் மனிதர்களுக்கு ஏராளமான நன்மைகள், கல்வி அறிவு, புரிதல், தெளிவு கிடைக்கிறது. மனிதர்களை புதிய உலகத்துக்கு புத்தகங்கள் அழைத்து செல்கின்றன.

உலக புத்தக தினம் 1995 -ஆம் ஆண்டு ஏப்ரல் 23 ஆம் தேதி முதன் முதலாக கொண்டாடப்பட்டது. உலகம் முழுவதும் மக்கள் புத்தகம் வாசிப்பு பழக்கத்தை தற்போது மேம்படுத்தி வருகிறார்கள். வாசிப்பின் சக்தியை மக்கள் அடையாளம் காண இந்த நாள் ஒரு வாய்ப்பாக அமைகிறது.

உலகம் முழுவதும் உள்ள எழுத்தாளர்களின் சிறந்த படைப்புகளை கவுரவிக்கும் விதமாக உலக புத்தக தினம் யுனெஸ்கோ சார்பில் கடைபிடிக்கப்படுகிறது. இதன் மூலம் வாசிப்பு மீதான காதல், எழுத்து மீதான ஆர்வம், மொழிப்பெயர்ப்பு,ஆகியவற்றை ஊக்கப்படுத்துவது இதன் நோக்கம்.

ஒரு மனிதனுக்கு புத்தகம் சிறந்த தோழன் ஆக உள்ளது. உலகின் சிறந்த எழுத்தாளர்களான வில்லியம் சேக்ஸ்பியர், பிரபல ஸ்பானிஷ் வரலாற்று ஆசிரியர் இன்கா கார்சிலாசோ டி லா வேகா ஆகியோரின் நினைவு நாளாக இது அமைந்துள்ளது.

புத்தக வாசிப்பு விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கத்தில் யுனெஸ்கோ, சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு இலக்கிய பரிசுகளையும் வழங்கி வருகிறது.

இந்த தினத்தில் புத்தகங்களை நன்கொடையாக வழங்குங்கள். நூலகங்கள், பள்ளிகள் அல்லது தொண்டு நிறுவனங்களுக்கு புத்தகங்களை நன்கொடையாக கொடுங்கள். புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை உருவாக்க நண்பர்கள், உறவினர்களுக்கு உதவிடுங்கள்.



புத்தகங்களை வாசிப்போம்..!

மனிதர்களை நேசிப்போம்..!!

**தொகுப்பு: பா. சீனிவாசன், வந்தவாசி.**

# தங்கபல்லக்கு



ஸ்ரீ உடையவர் திருநக்ஷத்ர உத்ஸவ சாத்துமறை தங்கபல்லக்கு திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோவில் சென்னை,

# அட்ஷய திருதியை கருட ஸேவை



தஞ்சாவூர் மகர்நோம்புச்சாவடி V.P.கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் சித்திரை திருவிழாவில் முதல் திருவிவான (20.04.2026) திங்கட்கிழமை அட்ஷய திருதியை முன்னிட்டு காலை சுவாமி கருட ஸேவையில் எழுந்தருளி நம் ஸௌராட்ஷ்ட்ர சமூக வீதிகளில் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். திருவிழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், அட்ஷய திருதியை கருட ஸேவை குழு, ஸ்ரீ ராமானுஜர் ஸேவை குழு மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர். செய்தி: T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்

## வாக்குச் சாவடிகளில் பணிபுரியவுள்ள அலுவலர்களுக்கு பணி ஒதுக்கீடு



**திருவண்ணாமலை, ஏப்.23:**

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு கீழ்பென்னாத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாக்குச் சாவடிகளில் பணிபுரியவுள்ள அலுவலர்களுக்கு பணி ஒதுக்கீட்டு ஆணையை வழங்கி, தேர்தல் தொடர்பான பொருட்களை வாக்குச்சாவடி மையங்களுக்கு வழங்கினார்.

வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர் அஞ்சல் வாக்கு செலுத்துவதை திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ.ப. அவர்கள் இப் பணிகளை ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை




**திருவண்ணாமலை ஏப். 23:**

தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு திருவண்ணாமலை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வாக்குச்சாவடி மையங்களுக்கான அனுப்ப வேண்டிய தேர்தல் தொடர்பான பொருட்களை மற்றும் வாக்குப்பதிவு இயந்திரங்களை மண்டல வாரியாக அனுப்பும் பணியை திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ.ப. அவர்கள் கொடி அசைத்து தொடங்கி வைத்தார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை



# 2026 தேர்தல் கொண்டாட்டம்

## தேர்தல் களப்பணியில்...

### "எத்தனை கேஜ்ரிவால், ராகுல் வந்தாலும் தமிழகத்தில் என்டிஏ வெற்றியைத் தடுக்க முடியாது" - தமிழிசை



"தமிழகத்துக்கு எத்தனை அரவிந்த் கேஜ்ரிவால்கள், ராகுல்கள் வந்தாலும், தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றியைத் தடுக்க முடியாது" என பாஜக மூத்த தலைவர் தமிழிசை கூறியுள்ளார்.

மயிலாப்பூர் சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வரும் தமிழிசை இன்று செய்தியாளர்களிடம் கூறியது: "நாங்கள் ஓட்டுக் கேட்டு மட்டும் செல்லவில்லை. அந்தந்தப் பகுதியில் உள்ள பிரச்சினைகளை குறித்து வைத்துள்ளோம். வெற்றி பெற்ற நூறு நாட்களில் அப்பகுதி மக்களின் அடைப்படை தேவைகளை பூர்த்தி செய்வோம். மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க தயாராக இருக்கிறேன்.

பல இடங்களை தண்ணீர் பிரச்சினை இருக்கிறது. இவை அனைத்தும் சரி செய்யப்படும். எத்தனையோ தேர்தல்களை நான் சந்தித்துவிட்டேன். நாங்களும் கட்சியுடன் சேர்ந்து வளர்ந்து வருகிறோம். தற்போது எனக்கு மயிலாப்பூர் மக்கள் வாக்களிக்க வேண்டும். மீனவ பெண்களுக்கு தனி திட்டம் வைத்துள்ளேன். திமுகவின் கவுன்டவுன் ஆரம்பித்துவிட்டது.

தமிழகத்துக்கு எத்தனை அரவிந்த கேஜ்ரிவால்கள், ராகுல்கள் வந்தாலும், தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றியைத் தடுக்க முடியாது. அமித் ஷாவின் ரோடு ஷோ நல்ல விதமாக அமைந்தது" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## விசில் அடிப்போரை தியேட்டருக்கு அனுப்புங்கள்: திருமாவளவன் பேச்சு

"விசில் அடிப்பவர்களைத் திரையரங்குகளுக்கு அனுப் புங்கள். சினிமா மோகத்தில் மயங்குபவர்கள் சிறுத்தைகள் அல்ல" என விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்தார்.

தேர்தல் பிரச்சாரத்தின் இறுதி நாளான நேற்று விசிக தலைவர் திருமாவளவன் காட்டுமன்னார்கோவில் தொகுதி குமராட்சி பகுதியில் விசிக வேட்பாளர் ஜோதிமணிக்கு ஆதரவாக வாக்குச் சேகரித்தார்.

அப்போது அவர் பேசியதாவது: இன்றுள்ள அதிமுக ஜெயலலிதாவின் அதிமுக அல்ல. அது மோடியின் அதி முக. அதேபோல் அன்புமணி தலைமையிலான பாமக-வும் மோடியின் பாமக தான். நீங்கள் பாமக-வுக்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் நேரடியாக பாஜக-வுக்கே செல்லும்.

சாதி உணர்வைத் தூண்டி உங்களிடம் ஓட்டு வாங் குபவர்களிடம் ஏமாறாதீர்கள். விசில் அடிப்பவர்களைத் திரையரங்குகளுக்கு அனுப்புங்கள். சினிமா மோகத்தில் மயங்குபவர்கள் சிறுத்தைகள் அல்ல. விஜய்க்குப் போடும் ஓட்டு பாஜக-வுக்குப் போடுவதாகவே அர்த்தம். திமுக-வை பலவீனப்படுத்தவே அவர் களமிறக்கப்பட்டுள்ளார்.

இதன் பின்னணியில் மோடி மற்றும் அமித் ஷா ஆகியோரின் மூளை செயல்படுகிறது. காட்டுமன்னார்கோவில் சிறுத்தைகளின் தாய்மடி என்பதை நிரூபிக்கும் வகையில், ஜோதிமணியை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுங்கள். இவ்வாறு அவர் பேசினார்.

## விருத்தாசலத்தில் வீடு வாங்குவேன்: பிரேமலதா உறுதி

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் விருத்தாசலம் தொகுதியில் போட்டியிடும் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா, நேற்று தனது பிரச்சாரத்தை விருத்தாசலம் விருத்தகிரீஸ்வரர் கோயில் முன்பு நிறைவு செய்தார்.

அப்போது பேசிய பிரேமலதா, "விருத்தகிரீஸ்வரர் அருளால் இத்தொகுதியில் நான் வெற்றி பெறுவேன். திமுக கூட்டணி அமோக வெற்றி பெறும். நான் வெற்றி பெற்றதும் ஒவ்வொரு கிராமத்திலும் வீதி வீதியாக சென்று மக்களைச் சந்திந்து நன்றி கூறுவேன். கேப்டன் விட்டுச் சென்ற பணிகளை தொடர்ந்து செய்வேன்.

'விருத்தாசலத்தை மாவட்டமாக்க வேண்டும்' என்பது இத்தொகுதி மக்களின் கோரிக்கையாக உள்ளது. அதை நிச்சயம் நிறைவேற்றுவேன்.

நான் விருத்தாசலத்தில் வீடு வாங்கி இங்கே தங்கி, விருத்தாசலத்தின் மகளாக இருப்பேன். தமிழகத்திலேயே முன்மாதிரி தொகுதியாக விருத்தாசலத்தை மாற்றிக் காட்டுவேன்.

தேமுதிக திமுக கூட்டணியில் இணைந்தவுடன் பல்வேறு விமர்சனங்கள் மூலம் திமுக கூட்டணியில் சலசலப்பை உருவாக்கலாம், குழப்பத்தை ஏற்படுத்தலாம் என எதிர்க் கூட்டணியில் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டனர். விசிக தலைவர் திருமாவளவன் தான் அனைவரையும் ஒருங் கிணைத்து, அவற்றையெல்லாம் சரி செய்திருக்கிறார்" என்று தெரிவித்தார்.

## உங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றிடுங்கள்! - முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிவு

தமிழக சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று (ஏப்ரல் 23) நடைபெற உள்ளது. சட்டமன்ற தேர்தலுக்கான பிரசாரம் ஓய்ந்தது.

இந்த நிலையில் ஏப்ரல் 23 - தமிழ்நாட்டு வாக்காளப் பெருமக்கள் உங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றிடுங்கள் என்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிவிட்டு, வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த வீடியோவில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

என்னுயிர் மக்களே! நம் தமிழ்நாட்டோட எதிர்காலத்தை நீங்கள் எழுதப் போற நாள்.



உங்களை யாராலும் ஏமாற்ற முடியாது. உங்களுக்கு தெரியும். எது உண்மை, எது பொய். எது நடிப்பு, எது உழைப்பு. யார் நரி, யார் சிங்கம். அடிமைத்தனம் எது, தைரியம் எது. எல்லாமே உங்களுக்கு நல்லாவே தெரியும். இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொருத்தருக்கும் ஒரு கடமை இருக்கு. என்னை நம்பி இந்த நாட்டை என்னிடம் கொடுத்தீர்கள். 5 வருஷத்தில் எத்தனையோ துறைகளில் தமிழ்நாட்டை முதலிடத்துக்கு நாம் ஒன்றாக கொண்டு வந்திருக்கிறோம்.

நாம் வீழ்த்தின எதிரிகளின் சதிகளை எண்ண ஆரம்பித்தால், அதற்குள் தேர்தல் முடிவே வந்து விடும். நம் திட்டங்களை, அதனால் விளைந்த நன்மைகளை பட்டியலிட ஆரம்பித்தால் அடுத்த தேர்தலே வந்து விடும். எனக்கு நீங்கள் கொடுத்த கடமையை என்னால் முடிந்த வரைக்கும் சரிவர செய்து விட்டேன். உங்களுடைய கடமை அதை நீங்களும் சரிவர செய்ய வேண்டும். அடுத்த 5 வருஷத்துக்கு இதுவரைக்கும் யாரும் காணாத ஒரு பெரிய கனவோடு காத்திருக்கிறேன். இனி நம் போட்டி டெல்லியோடு மட்டும் இருக்காது. தெற்காசியாவில் எல்லா துறைகளிலும் முதல் மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றி காட்டுவேன். மண், மொழி, மானம் மூன்றையும் காப்பாற்ற மூச்சிருக்கும் வரை போராடுவேன். வாக்களிப்பீர் உதயசூரியன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களின் சின்னங்களுக்கு. தமிழ்நாடு வாக்களிக்கும்! தமிழ்நாடு வெல்லும்! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## சொந்தத் தொகுதியில் தோற்றுவிடுவோம் என்று விசில் சின்னத்தை திருடியவர்கள்: விஜய் சூசகம்



சொந்தத் தொகுதியிலேயே தோற்றுவிடுவோம் என்று பயந்து, எடப்பாடி தொகுதியில் விசில் சின்னத்தை திருடியவர்களுக்கு என்று அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமியை மறைமுகமாக தாக்கிப் பேசினார் தவெக தலைவர் விஜய்.

தேர்தல் பிரசாரத்தின் நிறைவு நாளான இன்று சென்னை நந்தனம் ஒய்எம்சிஏ மைதானத்தில் தவெக தொண்டர்கள் மத்தியில் தலைவர் விஜய் உரையாற்றினார்.

இதுவரை திமுகவை மற்றும் தாக்கிப் பேசி வந்த தவெக தலைவர் விஜய், தன்னுடைய பிரசாரத்தின் நிறைவுக் கூட்டத்தில் அதிமுகவையும் தாக்கியுள்ளார்.

அவர் பேசுகையில், 10 தடவைக்கும் மேல் தேர்தலில் தோல்வியடைந்தும், இன்னும் திருந்தாத ஒருவர் இருக்கிறார்கள். அனுபவ சாலி அவர்களே, சேலத்தில் உள்ள ஒரு சிறிய தொகுதியிலேயே பதுங்கிக் கொள்ளாமல் வேறு ஒரு தொகுதியில் போட்டியிட்டு ஜெயிக்க முடியுமா? ஜெயிப்பது என்ன நிற்க முடியுமா? அதை செய்துவிட்டு விஜய் பற்றி பேசுங்கள்.

சொந்தத் தொகுதியில் தோற்றுவிடுவோம் என்ற பயத்தில் நம்ம சின்னத்தையே திருடியவர்கள். இதனால், நம்ம இயக்கத்துடன் இணைந்து வந்துகொண்டிருந்த சுயேச்சையாகப் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளரை ஆதரிக்கிறோம். எடப்பாடி தொகுதி மக்களே..

சுயேச்சை வேட்பாளரின் டிவி சின்னத்துக்கு ஓட்டுப் போடுவது விசில் சின்னத்தில் ஓட்டுப்போடுவது போல என்று கூறினார்.

## கோவை தெற்கு தொகுதியில் மட்டும் ரூ.200 கோடி செலவு செய்துள்ளார் செந்தில் பாலாஜி: அண்ணாமலை குற்றச்சாட்டு

'கோவை தெற்கு தொகுதியில் மட்டும் ஓட்டுக்கு ரூ.5 ஆயிரம் வீதம் ரூ.200 கோடி செலவு செய்துள்ளார் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி' என பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை குற்றம்சாட்டியுள்ளார்.



சென்னை கமலாலயத்தில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகால திமுக ஆட்சியில் சட்டம் -ஒழுங்கு முற்றிலுமாகச் சிதைந்துவிட்டது. இதற்கு சாட்சியாகத் திருவண்ணாமலையில் 11-ம் வகுப்பு மாணவிக்கு இழைக்கப்பட்ட கூட்டுப் பாலியல் வன்கொடுமைச் சம்பவம் அமைந்துள்ளது. இதுவரை குற்றவாளிகளை காவல்துறை கைது செய்யவில்லை, வழக்கும் பதியவில்லை.

போதைப் பொருள் கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்ட ஜாபர் சாதிக்கின் நிறுவனம், தமிழ்நாடு பாடநூல் கழகத்துக்கு ஜாமென்ட்ரி பாக்ஸ் சப்ளை செய்யும் அளவுக்கு அதிகார மையங்களுடன் நெருக்கமாக உள்ளது.

தமிழகத்தில் குற்றங்கள் அதிகரிக்கக் காரணமே குற்றவாளிகளுக்கு அளிக்கப்படும் 'அரசியல் பாதுகாப்பு' தான். கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 2,080 பாலியல் வழக்குகள், 8,008 கொலைகள், 40 ஆயிரம் போக்சோ வழக்குகள் பதிவாகியுள்ளது அதிர்ச்சியளிக்கிறது.

தேசிய ஜனநாயகக் கூட்டணி ஒருங்கிணைந்து செயல்படுகிறது. ஆனால் திமுக கூட்டணியோ, கோயிலுக்கு வெளியே சிதறிக் கிடக்கும் தேங்காயைப் போல சிதறிப் போயுள்ளது. கோவையில் செந்தில் பாலாஜியின் ஆட்கள் மூலம் மிகப்பெரிய அளவில் பணப்பட்டுவாடா நடைபெறுகிறது. கோவை தெற்கு தொகுதியில் மட்டும் ஒரு ஓட்டுக்கு ரூ.5 ஆயிரம் வீதம், சுமார் 200 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

டிரான்ஸ்பார்மர் ஊழல் வழக்கில் அவர் மீண்டும் சிறைக்குச் செல்வது உறுதி.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பிரதமர் மோடியைத் தீவிரவாதி என்று விமர்சித்திருக்கிறார். முதல்வர் ஸ்டாலினுக்கு இந்தக் கருத்தில் உடன் பாடு உண்டா? தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி அமைக்கும்போது, ஒருபோதும் குற்றவாளிகளுக்கு அரசியல் பாதுகாப்பு வழங்கப்படாது.

இவ்வாறு அவர் கூறினார்.

## "ஒரு குடும்பத்தின் அதிகார பசிக்காக அடகு வைக்கப்பட்டுள்ளது தமிழகம்" - பழனிசாமி காட்டம்

சென்னை: "ஒட்டுமொத்த தமிழகமும் ஒரே ஒரு குடும்பத்தின் அதிகார பசிக்காக அடகு வைக்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் பொய்யான வாக்குறுதிகளை அளித்து மக்களை ஏமாற்றிவிட்டனர்" என கடுமையாக விமர்சித்து அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வீடியோ வெளியிட்டுள்ளார்.



தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கு இன்னும் இரண்டு நாட்களே இருக்கும் நிலையில், அரசியல் களம் சூடு பிடித்துள்ளது. இன்று மாலையுடன் பிரச்சாரம் முடிவடைய இருக்கும் நிலையில், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வீடியோ பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த வீடியோ பதிவில், "வாக்குரிமை நம் தலையெழுத்தை மாற்றும் ஜனநாயக ஆயுதம். வருகிற 23-ஆம் தேதி நாம் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும்.

ஒட்டுமொத்த தமிழகமும் ஒரே ஒரு குடும்பத்தின் அதிகார பசிக்காக அடகு வைக்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் பொய்யான வாக்குறுதிகளை அளித்து மக்களை ஏமாற்றிவிட்டனர். சட்டம் - ஒழுங்கு அடியோடு சீர்கெட்டுவிட்டது. பெண்களுக்கு எங்கேயும் பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுகிறது. உயர் கல்வித் துறையை சீரழித்து விட்டனர். சந்து பொந்துகளில் எல்லாம் கஞ்சா போதை பொருட்களை விற்று மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் எதிர்காலத்தை நாசமாக்கி விட்டனர். இந்த அராஜக, குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்ட உங்கள் வாக்கு தேவை. குடிமரமரத்து திட்டத்தின் மூலம் நீர்நிலைகளை மீட்டெடுத்தது, அரசு பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீத இடஒதுக்கீடு வழங்கியது, அம்மா உணவகம், அம்மா மினி கிளினிக் என பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றியது அதிமுக அரசு. இந்த மக்கள் நல திட்டங்கள் மீண்டும் தொடர வேண்டும். சிறப்பான நமது தேர்தல் அறிக்கையின் மூலம் வளமான ஒரு எதிர்காலத்தை தமிழகத்துக்கு வழங்க இருக்கின்றோம். அதன் மூலம் தமிழகம் இன்னும் முன்னேற்றப் பாதையில் செல்லும். அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அதிக வாக்குகள் பெற்று அமோக வெற்றி பெறும்" என்று பழனிசாமி பேசியுள்ளார்.

## நம் கடமை.. ஓட்டு போட ரெடியா..? எப்படி வாக்களிப்பது..?

தமிழக சட்டமன்ற தேர்தல் இன்று (வியாழன்) நடைபெற உள்ளது. இதையடுத்து மொத்தமுள்ள 234 தொகுதிகளில் 4,023 வேட்பாளர்கள் களத்தில் நிற்கின்றனர்.

தி.மு.க., அ.தி.மு.க., நாம் தமிழர், த.வெ.க. என 4 முனை போட்டி நிலவுகிறது. இந்த தேர்தலில் வெற்றி வாகை சூடுவதற்காக ஒவ்வொரு கட்சி களும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டன.

வாக்காளர் பட்டியல் தொடர்பான எஸ்.ஐ.ஆர். பணிகள் நிறைவடைந்த நிலையில், சுமார் 40 லட்சம் வாக்காளர்கள் பெயர்கள் நீக்கப்பட்டன. எனவே, ஏற்கனவே வாக்களித்து வருபவர்களே இந்த முறை வாக்களித்தாலும், தமிழகத்தின் வாக்கு சதவீதம் 85-ஐ தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேரம் : காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை

மொத்த வாக்களர்கள் : 5.73 கோடி பேர் (5,73,43,291)

இளம் வாக்காளர்கள் (29 வயதிற்குள்) : 1.21 கோடி பேர் (1.21,77,496)

மூத்த வாக்காளர்கள் (70 வயதிற்கு மேல்) : 44.98 லட்சம் பேர் (44,98,391)

தகுதியுள்ள வேட்பாளர்கள்: ஆண்கள் - 3,579 , பெண்கள் - 443 , மூன்றாம் பாலினம் - 1.

மொத்த வேட்பாளர்கள் : 4,023 பேர்






வாக்குச்சாவடிகள் : 75,064

வாக்களிப்பது எப்படி...?

1. வாக்குச்சாவடிக்குள் நுழையும் முன் வரிசையில் நிற்க வேண்டும்.

2. வாக்குச்சாவடிக்குள் செல்போனுக்கு அனுமதி இல்லை.

* தேர்தல் பணியாளரிடம் 'சுவிட்ச் ஆப்' செய்த உங்கள் அலைபேசியை ஒப்படையுங்கள்.

* பின்னர் அதற்கான டோக்கனை பெறுங்கள்

3. வாக்குச்சாவடிக்குள் நுழைந்த பின்..

முதல் அலுவலர்

உங்கள் அடையாள அட்டை, 'பூத் ஸ்லிப்'பை சோதிப்பார். உங்கள் பாகம் எண், வரிசை எண்ணை உரக்கப் படிப்பார். அதை வேட்பாளரின் ஏஜெண்டுகள் சரிபார்ப்பர்.

இரண்டாவது அலுவலர்

இடது கை ஆள்காட்டி விரலில் 'மை' வைப்பார். கையெழுத்தையும் பெறுவார். ஒரு 'ஸ்லிப்' வழங்குவார்.

மூன்றாவது அலுவலர்

ஓட்டுப்பதிவு இயந்திரத்தின் கட்டுப்பாட்டாளர். 'ஸ்லிப்'பை வாங்கி பரிசோதிப்பார். ஒரு பட்டனை அழுத்தி, உங்களை ஓட்டளிக்க அனுமதிப்பார்.

4. வாக்களிக்கும் முறை

* வாக்குப்பதிவு இயந்திரம் வைக்கப்பட்டிருக்கும் பகுதிக்கு செல்ல வேண்டும்.

* மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் விருப்பமான வேட்பாளருக்கு நேராக உள்ள பட்டனை அழுத்த வேண்டும். 'பீப்' ஒலி கேட்கும்.

*'விவிபேட்' மெஷின் நீங்கள் அழுத்திய சின்னத்தை காண்பிக்கும்.

* இப்போது நீங்கள் ஓட்டளித்து விட்டீர்கள். ஜனநாயக கடமையாற்றிய பெருமிதத்தோடு வெளியே வாருங்கள்.

*வெளியே சென்று 'டோக்கனை' கொடுத்து அலைபேசியை திரும்ப பெற்றுக்கொள்ளுங்கள்.

# திருத்தணி முருகன் கோவிலில் சித்திரை திருவிழா கொடியேற்றத்துடன் தொடக்கம்





**திருத்தணி, ஏப்.23:**

திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோவில் முருகப்பெருமானின் பிரசித்தி பெற்ற ஐந்தாம் படை திருத்தலமாகும். இந்த கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் சித்திரை பெருவிழா வெகுவிமரிசையாக நடைபெறுவது வழக்கம். 12 நாட்கள் நடக்கும் இந்த விழாவில் புலி வாகனம், வெள்ளி மயில் வாகனம், சிங்க வாகனம், ஆட்டுக்கிடா வாகனம் உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் உற்சவர் முருகப்பெருமான் வள்ளி, தெய்வானையுடன் காலை, இரவு என இரு வேளைகளில் திருவீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார்.

அந்த வகையில், இந்த ஆண்டுக்கான சித்திரை பெருவிழா நேற்று இரவு கோவில் வளாகத்தில் விநாயகர் உலாவுடன் தொடங்கியது. இதையடுத்து இன்று காலை 4.30 மணி முதல் 6.30 மணிக்குள் கொடியேற்றம் நிகழ்ச்சி நடைபெற்றது.

முன்னதாக உற்சவர் முருகப்பெருமான் சிறப்பு அலங்காரத்தில் கொடிமரம் எதிரே வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். தொடர்ந்து உற்சவ பெருமானுக்கு தீபாராதனை நடந்தது. அதன் பிறகு வள்ளி, தெய்வானையுடன் முருக பெருமான் சிறப்பு அலங்காரத்தில் மாட வீதியில் உலா வந்தார். விழாவில் பங்கேற்க பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டதால் பொது வழியில் 3 மணி நேரம் கொளுத்தும் வெயிலில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

சித்திரை பெருவிழாவின் முக்கிய நிகழ்வான மரத்தேர் திருவிழா வருகிற 27-ந்தேதியும், 28-ந்தேதி தெய்வானை திருக்கல்யாணமும் நடக்க இருக்கிறது. 30-ந்தேதி கொடி இறக்கம், தீர்த்தவாரியுடன் சித்திரை பெருவிழா நிறைவுபெறும். விழா ஏற்பாடுகளை கோவில் இணை ஆணையர் ரமணி, அறங்காவலர் குழு தலைவர் ஸ்ரீதரன் மற்றும் அறங்காவலர்கள் செய்து வருகின்றனர்.

# ஏப்.27 -ல் தஞ்சையில் உள்ளூர் விடுமுறை

**தஞ்சை, ஏப்.23:**


விடுமுறை என்றாலே பள்ளி கல்லூரி மாணவர்கள் முதல் அரசு ஊழியர்கள் வரை ஒரே ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்தான். அதுவும் தொடர் விடுமுறை வந்தால் சொல்லவே வேண்டாம். இந்நிலையில் அரசு பொது விடுமுறை தவிர்த்து கோவில் திருவிழாக்கள், மசூதி, தேவாலயம் போன்ற முக்கிய நிகழ்வுகளுக்கு அம்மாவட்ட கலெக்டர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டதை அடுத்து உள்ளூர் விடுமுறை அறிவிப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர். அன்றைய தினம் கல்வி நிறுவனங்கள், அரசு அலுவலங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்படும்.

இதனிடையே பள்ளி மாணவர்களுக்கு முழு ஆண்டு தேர்வு முடிந்து கோடை விடுமுறையில் இருக்கும் நிலையில் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ஏப்ரல் 27ம் தேதி உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் பிரியங்கா வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில்,

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெறவுள்ள அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோவில் சித்திரை தேர்த்திருவிழாவினை முன்னிட்டு வரும் ஏப்ரல் 27 திங்கட்கிழமை அன்று, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

இந்த உள்ளூர் விடுமுறை நாளுக்கு பதிலாக மே 09 (சனிக்கிழமை) அன்று பணி நாளாக அறிவித்தும் மேற்படி நாளில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அனுமதித்தும் அரசு அலுவலகங்களும், கல்வி நிறுவனங்களும் இயங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

# தஞ்சை மகர்நோம்புச்சாவடி வேங்கடேச பெருமாள் கோவிலில் சித்திரை திருவிழா- கருட சேவை



**தஞ்சாவூர், ஏப்.23:**

தஞ்சை மகர்நோம்புச்சாவடியில் ஸ்ரீதேவி, பூதேவி அலுமேலு மங்கை சமேத வேங்கடேச பெருமாள் கோவில் உள்ளது. இக்கோவிலில் 100-ம் ஆண்டு சித்திரை திருவிழா தொடங்கியது.

விழாவை முன்னிட்டு இன்று காலை பெருமாளுக்கு திருமஞ்சனமும், சிறப்பு பூஜையும் நடந்தது. அதனைதொடர்ந்து சிறப்பு அலங்காரத்துடன் பெருமாள் கருட வாகனத்தில் எழுந்தருளி வீதிஉலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இந்நிகழ்வில் அப்பகுதி மக்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

விழாவின் முக்கிய நிகழ்வுகளாக நாளை மறுநாள் ( புதன்கிழமை) வெண்ணைத்தாழி புறப்பாடும், 24-ந்தேதி திருக்கல்யாண உற்சவமும் நடக்கிறது.

மே 1-ந்தேதி அனுமன் வாகனத்திலும், 3-ந்தேதி குதிரை வாகனத்திலும் பெருமாள் வீதிஉலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

மே 5-ந்தேதி விடையாற்றி உற்சவத்துடன் விழா நிறைவுபெறுகிறது.

## வெள்ளியங்கிரி மலை, கோவை குற்றாலம் செல்ல வனத் துறை தடை!



**கோவை, ஏப்.23:**

கோவை மாவட்டத்தில் 3,563 வாக்குச்சாவடிகள் உள்ளன. இந்த வாக்குச்சாவடிகளில் பொதுமக்கள் நேரில் சென்று வாக்களிக்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு உள்ளது. அதுபோன்று வாக்குப் பதிவின் போது அசம்பாவிதங்கள் ஏற்படாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பதற்றமான வாக்குச்சாவடிகளில் துப்பாக்கி ஏந்திய துணை ராணுவப்படையினரும், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுகின்றனர்.

இந்த நிலையில், நாளை வாக்குப் பதிவை முன்னிட்டு கோவை குற்றாலம் அருவிக்கு சுற்றுலாப் பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டு உள்ளது. அதுபோன்று பூண்டி வெள்ளியங்கிரி ஆண்டவர் கோயில் அருகே உள்ள வெள்ளியங்கிரி மலைக்கு பக்தர்கள் செல்வதற்கு வனத்துறை தடை விதித்துள்ளது.

இது தொடர்பாக வனத்துறை வெளியிட்டு உள்ள செய்தி குறிப்பில், சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் வாக்களிக்கும் வகையில் வியாழக்கிழமை (ஏப்.23) ஒரு நாள் மட்டும் கோவை குற்றாலம் அருவி மூடப்படுகிறது. இங்கு சுற்றுலாப் பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டு உள்ளது. அதேபோன்று வெள்ளியங்கிரி மலைக்கு புதன்கிழமை மாலை 6 மணி முதல் நாளை நள்ளிரவு 12 மணி வரை செல்ல தடை விதிக்கப்பட்டு உள்ளது.

நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை அதிகாலை(ஏப்.24) வழக்கம் போல் வெள்ளியங்கிரி மலைக்கு பக்தர்கள் செல்லலாம், இந்த உத்தரவை மக்கள் கடைபிடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட நேரத்தில்கோவை குற்றாலம் அருவி, வெள்ளியங்கிரி மலைக்கு மக்கள் யாரும் செல்ல முயற்சி செய்ய வேண்டாம். இந்த தடை மீறி குற்றாலம் அருவி, வெள்ளியங்கிரி மலைக்கு பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள் செல்வதை தடுக்க வனத் துறையின் வேட்டை தடுப்பு காவலர்கள் மற்றும் யானை பாதுகாப்பு படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபடுகின்றனர்.

வனத் துறையின் தடையை மீறி தடைசெய்யப்பட்ட வனப் பகுதிக்குள் அத்துமீறி நுழைபவர்கள் மீது இந்திய வனப் பாதுகாப்புச் சட்டப்படி தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528




## நலம் தரும் மருத்துவம்

### நீரிழிவு நோயாளிகள் கடைபிடிக்க வேண்டிய உணவு முறைகள்

நிச்சயமாக, சர்க்கரை நோய் (DIABETES) மற்றும் ரத்த அழுத்தம் (BP) ஆகிய இரண்டையும் கட்டுக்குள் வைக்க உதவும் ஒரு எளிய மாதிரி உணவு அட்டவணை இதோ. இது உங்கள் மருந்துகளின் (METFORMIN போன்றவை) செயல்பாட்டிற்குத் துணையாக இருக்கும்.

காலை உணவு (காலை 8:00 - 9:00)

சிறந்த தேர்வு: 2 அல்லது 3 கேழ்வரகு தோசை அல்லது கோதுமை ரவை உப்புமா (நிறைய காய்கறிகள் சேர்த்தது).

மாற்று: 2 இட்லி அல்லது சிறுதானிய அடை.

குறிப்பு: தேங்காய்ச் சட்னிக்கு பதில் தக்காளி அல்லது புதினா சட்னி பயன்படுத்துங்கள்.

மதிய உணவு (மதியம் 1:00 - 2:00) சாதம்: ஒரு சிறிய கிண்ணம் கைக்குத்தல் அரிசி (BROWN RICE) அல்லது சிறுதானியச் சாதம் (வரகு, சாமை).

கூட்டு/பொரியல்: நீர்ச்சத்துள்ள காய்கறிகள் (புடலங்காய், பீர்க்கங்காய், சௌசௌ) அல்லது கீரை வகைகள் (அரைக்கீரை, முருங்கைக்கீரை).

புரதம்: வேகவைத்த சுண்டல் (பயறு வகைகள்) அல்லது ஒரு கப் பருப்பு சாம்பார். முக்கியம்: பிபி இருப்பதால் உணவில் உப்பை 50% குறைத்துக் கொள்ளுங்கள்.

மாலை நேர சிற்றுண்டி (மாலை 4:30 - 5:30) சர்க்கரை இல்லாத கிரீன் டீ அல்லது சுக்கு டீ. இதனுடன் ஒரு கைப்பிடி வறுத்த நிலக்கடலை அல்லது பாதாம்/வாதுமை பருப்புகள். பாக்கெட் தின்பண்டங்கள் (பிஸ்கட், சிப்ஸ்) வேண்டவே வேண்டாம்.

இரவு உணவு (இரவு 7:30 - 8:30) மிகவும் லேசான உணவு: 2 கோதுமை சப்பாத்தி (எண்ணெய் இல்லாமல்) மற்றும் காய்கறி குருமா. அல்லது ஒரு கிண்ணம் கோதுமை ரவை கஞ்சி (உப்பு குறைவாக). தூங்குவதற்கு 2 மணி நேரத்திற்கு முன்பே சாப்பிட்டு விடுங்கள்.

பழங்கள்: கொய்யாப்பழம் அல்லது ஆப்பிள் (தோலுடன்) ஒரு நாளைக்கு ஒன்று மட்டும் மதியத்திற்கு முன் சாப்பிடலாம்.

தண்ணீர்: ஒரு நாளைக்கு குறைந்தது 10-12 கிளாஸ் தண்ணீர் அவசியம். இது ரத்த அழுத்தத்தைச் சீராக வைக்கும்.

நடைப்பயிற்சி: தினமும் காலை அல்லது மாலை 30 நிமிடம் மெதுவான நடைப்பயிற்சி உங்கள் மருந்துகளின் பலனை இரட்டிப்பாக்கும்.

இந்த அட்டவணையைத் தொடங்கும்போது, ஒரு வாரத்திற்குப் பிறகு உங்கள் சர்க்கரை அளவை (SUGAR LEVEL) சரிபார்க்கிறீர்களா? ஏனெனில் உணவுக் கட்டுப்பாட்டினால் சர்க்கரை அளவு குறையும் போது, மருத்துவர் உங்கள் மாத்திரையின் அளவை (DOSAGE) குறைக்க வாய்ப்புள்ளது.

# வாக்காளர்கள் கவனத்திற்கு.. உங்கள் வாக்குச் சாவடியை அறிவது எப்படி..?

தமிழக சட்டமன்ற தேர்தல் நாளை (23.04.2026) நடைபெற உள்ளது. இதையடுத்து மொத்தமுள்ள 234 தொகுதிகளில் 4,023 வேட்பாளர்கள் களத்தில் நிற்கின்றனர். அவர்களில் 3,579 பேர் ஆண்கள், 443 பேர் பெண்கள், ஒருவர் மூன்றாம் பாலினத்தவராகும்.

தமிழகத்தின் மொத்த வாக்காளர் எண்ணிக்கை தற்போது 5 கோடியே 73 லட்சத்து 43 ஆயிரத்து 291 ஆகும். அவர்களில் 2 கோடியே 80 லட்சத்து 30 ஆயிரத்து 658 பேர் ஆண்கள், 2 கோடியே 93 லட்சத்து 4 ஆயிரத்து 905 பேர் பெண்கள், 7,728 பேர் மூன்றாம் பாலினத்தவராகும். வாக்காளர் பட்டியல் தொடர்பான எஸ்.ஐ.ஆர். பணிகள் நிறைவடைந்த நிலையில், சுமார் 40 லட்சம் வாக்காளர்கள் பெயர்கள் நீக்கப்பட்டன. எனவே, ஏற்கனவே வாக்களித்து வருபவர்களே இந்த முறை வாக்களித்தாலும், தமிழகத்தின் வாக்கு சதவீதம் 85-ஐ தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உங்கள் வாக்குச் சாவடியை அறிவது எப்படி..?: நீங்கள் வாக்களிக்க வேண்டிய ஓட்டுச்சாவடி, உங்கள் பாகம் எண், வரிசை எண்ணை HTTPS://ELECTORALSEARCH.ECI.GOV.IN, ECINET.ECI.GOV.IN, VOTERS.ECI.GOV.NET என்ற இணையதளங்கள் மூலம் அறியலாம்.

* ECINET, VOTERSHELPLINE, SWEETHA செல்போன் ஆப் மூலமும் அறிந்து கொள்ள முடியும். இதற்கு உங்கள் வாக்காளர் அடையாள அட்டை எண் அவசியம். * வாக்குப்பதிவுக்கு செல்லும்போது வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, வங்கி அல்லது தபால் நிலையம் வழங்கியுள்ள போட்டோவுடன் கூடிய கணக்குப்புத்தகம், ஓட்டுனர் உரிமம், பான் கார்டு, பாஸ்போர்ட் உட்பட 12 அடையாள ஆவணங்களில் எதாவது ஒன்றை கட்டாயம் எடுத்துச் செல்லவும்.

### கியூ ஆர் கோடு வசதி

*வாக்குச்சாவடிக்குள் செல்போன் கொண்டு செல்ல தடை உள்ளது. வாக்குச்சாவடிகளில் இதற்கென தனி அறை ஏற்படுத்தப்பட்டு, செல்போனுக்கு டோக்கன் வழங்கப்படுகிறது. வாக்களித்து முடிந்தபின் டோக்கனை கொடுத்து செல்போனை திரும்பப் பெற வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

* வாக்குப்பதிவு இயந்திரத்தில் முன்பு வேட்பாளர் போட்டோ, பெயர் அதற்கு எதிரே அவருக்கான சின்னம் இடம் பெற்றிருக்கும். இம்முறை வேட்பாளர் பெயர் அருகே அவரது கலர் போட்டோவும் இடம் பெற்றிருக்கும்.

*தேர்தல் பணியாற்றும் ஊழியர்கள் வாக்களிக்க தபால் ஓட்டு வசதி உள்ளது. அதேபோல இந்த தேர்தலில் அத்தியாவசிய பணிகளில் ஈடுபடும் மின்வாரியம், போக்குவரத்துத்துறை, தீயணைப்புத் துறை, ஆம்புலன்ஸ், சுகாதாரம், குடிநீர் வழங்கல் துறைகளை சேர்ந்தவர்களும் தபால் வாக்களித்துள்ளனர். * வாக்களிக்க செல்வோருக்கு பூத் ஸ்லிப் என்ற வாக்காளர் தகவல் சீட்டு வழங்கப்பட்டு வருகிறது. இதில் கியூ ஆர் கோடு வசதி உள்ளது. இதை பயன்படுத்தி தங்கள் வாக்குச்சாவடி, பாகம் எண், வரிசை எண் போன்றவற்றையும் அறிந்து கொள்ள முடியும்.

* பூத் சிலிப் பெறாதவர்கள் பாகம் எண், வரிசை எண்ணை இணையதளங்கள் மூலம் அறிந்து கொண்டு, ஒரு பேப்பரில் எழுதி வைத்துக்கொண்டு வாக்குச்சாவடிக்கு செல்லலாம்.




### வாக்களிக்க 12 ஆவணங்களை அடையாளமாக காட்டலாம்

தமிழகத்தில் இன்று (வியாழக்கிழமை) சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. வாக்களிப்பதற்கு வசதியாக, வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள், 'இசிஐநெட்' இணையதளத்திற்கு சென்று, வாக்காளர் அடையாள அட்டை எண்ணை பதிவு செய்தோ அல்லது பதிவு செய்யப்பட்ட செல்போன் எண்ணை வைத்தோ புதிய டிஜிட்டல் வாக்காளர் அட்டையை 'ஓ.டி.பி.' மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஒருவேளை வாக்காளர் அடையாள அட்டை இல்லாவிட்டாலும் ஆதார் உள்ளிட்ட 12 மாற்று ஆவணங்களைக் காட்டி வாக்களிக்கலாம்.

அதன் விவரம் பின்வருமாறு:-

1.ஆதார் அட்டை

2.புகைப்படத்துடன் கூடிய வங்கி அல்லது தபால் கணக்குப் புத்தகங்கள்

3.மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அடையாள அட்டை

4.தொழிலாளர் நல அமைச்சகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு அட்டை அல்லது ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டு அட்டை

5.ஓட்டுனர் உரிமம்

6.பான் கார்டு

7.தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட திறனட்டை

8. பாஸ்போர்ட்டு

9. புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம்

10.மத்திய அல்லது மாநில அரசுகள் அல்லது பொதுத்துறை நிறுவனங்கள் அல்லது வரையறுக்கப்பட்ட பொது நிறுனங்களின் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள்

11. நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற அல்லது சட்டமேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை

12.மத்திய அரசின் சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட தனித்துவமான ஊனமுற்றோர் அடையாள அட்டை. ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை பயன்படுத்தி வாக்களிக்கலாம்.

# "காரணங்களா? வழிகளா?"




"அது மூழ்கிட்டுப் போகுது...விடு" சுதா சொன்னாள். அவள் கையில் அடமானச்சீட்டு. கண்ணில் கவலை. மனதில் சோர்வு.

"என்ன சுதா இப்படி அஸால்ட்டா சொல்றே?"பக்கத்து வீட்டு திலகா கேட்டாள்.

"என்ன பண்ணுறது திலகா... வட்டி அதிகமாயிடுச்சு... அவருக்கு வருமானம் வரவே மாட்டேங்குது... அப்படியே வந்தாலும் வீட்டுச் செலவுக்கே சரியாயிருக்கு... இதுல அந்த நகை மீட்கவே வாய்ப்பில்லை... மூழ்கியே போகட்டும்..."
காரணங்களை மட்டும் அடுக்கினாள் சுதா.

"நீ காரணங்களைத்தான் வரிசையா சொல்றே.. ஆனா பிரச்சினையிலிருந்து எப்படி மீள்வதென்று ஒரு ஐடியா கூடச் சொல்லலை."

சுதா எரிச்சலாக, "ஐடியா இருக்குன்னா நீயே சொல்லு" திலகா சொன்னாள்.
"உனக்கு சமையல் நல்லா வரும். சாப்பாடு செய்து ஆபீஸ்களுக்கு அனுப்பு... வீட்டு முன்னாடி சின்னதா ஒரு டிபன் கௌண்டர் வை!...ம்ம்ம்...உன் பழைய புடவைகளை ஆன்லைன்ல ஸேல் பண்ணு... வீட்டில் அனாவசிய செலவுகளைக் குறை!"

"இதெல்லாம் அவ்வளவு ஈஸியில்லை" சுதா சொல்ல,

"பாரு... இப்ப நீ ஈஸி இல்லேன்னு சொல்லறே பாரு... இதுவும் ஒரு காரணம்தான்!.. காரணங்கள் சொல்ல வந்தால் ஆயிரம் சொல்லலாம்... வழி தேட ஆரம்பிச்சா ஒன்றே போதும்"

அடுத்த நாள்...சுதா காலை 5 மணிக்கே எழுந்தாள். சாம்பார், இட்லி, லெமன் ரைஸ்... சிறிய அளவில் செய்து பாக்கெட் போட்டாள்.

திலகாவும் உதவி செய்தாள்.

முதல் நாள் 5 பொட்டலங்கள் மட்டுமே ஸேல் ஆச்சு. அடுத்த நாள் அதுவே பத்தாநது... சில நாட்களில் ரெகுலர் கஸ்டமர்கள் உருவானார்கள். இதுமட்டுமல்லாது, சுதா வீட்டுச் செலவுகளை குறைத்தாள். பழைய பொருட்களை விற்றாள்.

மூண்றாம் மாத முடிவில் அடமான சீட்டை கையிலெடுத்தாள். அதே அடகுக்கடை. சுதா கையில் பணம். மனதில் உற்சாகம். நகையை மீட்டாள்.

வீட்டிற்கு வந்ததும் திலகாவை அழைத்து நன்றி சொன்னாள்.

"இனிமேலாவது காரணங்களைக் கண்டுபிடிப்பதை விட்டுவிட்டு வழிகளை யோசி" என்றாள் திலகா.



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

# தீட்டு



அந்தக் கிராமத்தின் தேநீர்க்கடை பெஞ்சில் அமர்ந்திருந்த பெரியவர் தர்மலிங்கம், தன் கையில் இருந்த கண்ணாடியைத் துடைத்துக்கொண்டே தெருமுனையைப் பார்த்தார். அங்கே ஊராட்சி மன்றத்தின் புதிய குடிநீர்த் தொட்டி திறக்கப்பட்டிருந்தது.
"என்னதான் அரசாங்கம் குழாய் போட்டாலும், அதப் போயி அவன் தொடுறதா?" என்று முணுமுணுத்தார் தர்மலிங்கம். அவர் சொன்ன 'அவன்' மாரிமுத்து. அந்தக் கிராமத்தின் ஒதுக்கப்பட்ட பகுதியில் வசிப்பவன்.
அடுத்த சில நிமிடங்களில் மாரிமுத்து தன் சைக்கிளில் இரண்டு குடங்களுடன் அங்கு வந்தான். வெயில் தகித்துக் கொண்டிருந்தது. தாகத்தில் நாவுலர்ந்த நிலையில், பொதுத் தொட்டியில் தண்ணீர் பிடிக்க முயன்றான்.
"ஏய் மாரி! நில்லுடா அங்கே!"
தர்மலிங்கத்தின் குரல் ஈட்டி போலப் பாய்ந்தது. மாரிமுத்து திடுக்கிட்டு நின்றான்.
"இது 'நாங்க' புழங்குற இடம். நீங்க அங்கிருக்கிற குட்டையிலயோ இல்ல பழைய கிணத்துலயோ புடிச்சுக்க வேண்டியதுதானே? இதத் தொட்டு ஏன் தீட்டுப்படுத்துற?"
மாரிமுத்து அமைதியாகச் சொன்னான், "ஐயா, அந்தப் பழைய கிணறு காஞ்சு போச்சு. குட்டைத் தண்ணி குடிக்க முடியல. இது அரசாங்கம் வச்ச பொதுத் தொட்டிதானே ஐயா?"
"அரசாங்கம் வைக்கும், ஆனா ஆச்சாரம்னு ஒன்னு இருக்குல்ல? நீ தொட்ட குடத்தை மத்தவங்க எப்படித் தொடுவாங்க?" என்று கூட்டத்தில் இருந்த இன்னொருவர் எகிறினார்.
மாரிமுத்துவின் கண்கள் சிவந்தன. "ஐயா, போன மாசம் உங்க அப்பாவுக்கு உடம்பு முடியாம இருந்தப்ப, அவருக்கு இரத்தம் தேவைப்பட்டப்போ இதே ஊர்ல இருந்து மூணு பேர் கொடுத்தோமே... அப்போ தீட்டு வரலையா? அந்த இரத்தம் அவர் உடம்புக்குள்ள ஓடிக்கிட்டு தானே இருக்கு? அப்போ தீட்டுப் படாத உடம்பு, இப்போ தண்ணி தொட்டா மட்டும் தீட்டாயிடுமா?"
கூட்டம் ஒரு நிமிடம் மௌனமானது. "பெரியார், அம்பேத்கர்னு யாரோ சொன்னதை வச்சுக்கிட்டு எங்ககிட்டயே பேசுறியா? போடா அந்தப் பக்கம்!" என மாரிமுத்து விரட்டப்பட்டான்.
அன்று மாலை, தர்மலிங்கத்தின் பேரன் ராகுல், சென்னையில் இருந்து ஊருக்கு வந்திருந்தான். அவனுக்குக் கடுமையான காய்ச்சல். தர்மலிங்கம் பதறிப்போய் அருகில் இருந்த தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். மருத்துவர் ராகுலைப் பரிசோதித்துவிட்டு, "ஐயா, இவனுக்கு உடனே குளுக்கோஸ் ஏத்தணும். ரொம்ப சோர்வா இருக்கான்" என்றார். தர்மலிங்கம் சம்மதித்தார். செவிலியர் ஒரு பெண் வந்து ஊசி போட்டு குளுக்கோஸ் ஏற்றத் தொடங்கினார்.
சிறிது நேரம் கழித்து தர்மலிங்கம் அந்தச் செவிலியரிடம் மெதுவாகக் கேட்டார், "அம்மா, நீ எந்த ஊர்? நீங்க என்ன ஆளுங்க?"
அந்தப் பெண் நிமிர்ந்து பார்த்துப் புன்னகைத்தாள். "ஐயா, காலையில உங்ககிட்ட தண்ணி கேட்டு வந்து நின்னானே மாரிமுத்து... அவன் என்னோட தம்பிதான். நான் படிச்சு இப்போ இங்க நர்ஸா இருக்கேன். உங்க பேரன் உடம்புல இப்போ ஏறிக்கிட்டு இருக்குற அந்த குளுக்கோஸ் பாட்டிலை மாட்டினது என் கைதான். இப்போ உங்க பேரன் உடம்பு தீட்டாயிடுச்சா ஐயா?"
தர்மலிங்கம் இடிந்து போய் அமர்ந்தார்.
மாரிமுத்துவின் அக்கா தொடர்ந்தார், "பெரியாரும் அம்பேத்கரும் புத்தகத்துல மட்டும் இல்ல ஐயா, எங்களோட அறிவுலயும், நாங்க படிச்ச படிப்பிலயும் இருக்காங்க. நீங்க இன்னும் மாறலனாலும், உங்க பேரப்புள்ளைகளுக்கு உயிர் கொடுக்க உதவப் போறது நாங்கதான்."
வெளியே மழை பெய்யத் தொடங்கியிருந்தது. அந்த மழைத் துளிகள் தர்மலிங்கத்தின் வீட்டுத் திண்ணையிலும் மாரிமுத்துவின் குடிசை வாசலிலும் பாரபட்சமின்றி விழுந்து கொண்டிருந்தன. இயற்கை பார்க்காத தீட்டை மனிதன் மட்டும் ஏன் இன்னும் பிடித்துக் கொண்டிருக்கிறான் என்ற கேள்வி மட்டும் காற்றில் எஞ்சி நின்றது.



**-மை. சத்திய பாரதி**

# Boomer to Gen Z

பாகம் 27



**வி.பிரபாவதி**
**மடிப்பாக்கம்.**




கோமளம் சென்னையில் ஒரு மாதம் கூட இருக்கவில்லை.

"ஹரி கோச்சுக்காம நா சொல்றத கேழு. நேக்கு இங்க ஒட்டலப்பா. சிவனேன்னு சோபால ஒக்காந்துண்டு, என்னால முடில. பத்ரி மாமா இன்னும் குடி வரலியோனோ? அவர்ட்ட சொல்லிடு, நானே வரப்போறேன்னு. அப்பா, தாத்தா, பாட்டி வாழ்ந்த எடம். நா அங்கயே இருக்கேன்" என்று பிடிவாதம் பிடித்தாள். ஹரிக்கு திக்கென்றது. "என்னம்மா நீ, இப்பிடி சொல்ற? இங்க என்ன கசக்கறது நோக்கு?" சற்று கோபமாகவே கேட்டான்.

"சிரமம்னு இல்ல. இருந்தாலும் என்னக் கொண்டே விட்டுடு" என்றாள்.

அவள் தனக்காக வாழ்ந்தவள் இல்லை. எந்த ஆசையும் பட்டதில்லை. அடுத்தவர் நலனுக்காகவே தன்னை வருத்திக் கொண்டவள். அவள் ஆசைப்படி அவளை மீண்டும் கிராமத்திற்கே கொண்டு விட்டான். ஊரில் நாலு பேர் நாலு விதமாக ஹரியை, மாலுவை, ஏன் வாசுவையும் குறை கூறினர். அதையெல்லாம் கோமளம் சட்டை செய்யாவிட்டாலும் இவர்களுக்கு வலித்தது.

மாதவன் மட்டும் கோமளத்துடன் தங்கிக் கொண்டு வேலைக்குச் சென்று வந்தான். நல்ல துணையாகவும் பாட்டி பாட்டி என்று மிகவும் அன்பாகவும் இருந்தான். கோமளத்திற்கும் சந்தோஷமாகத்தான் இருந்தது. கைக்கு ஒத்தாசையாக இருந்தான். வாட்சாப் பாக்க, வீடியோ கால் பேசக் கற்றுக் கொடுத்தான்.

அடுத்த வாரம் சுந்தரி பிள்ளை மாட்டுப் பொண்ணு கூட ஆஸ்திரேலியா போகப்போறா. கோமுவின் தம்பி மகன் விஸ்வநாதன் ஜெர்மனில் செட்டிலாகி விட்டான். ஏன் மாதவனின் அக்கா கூட கணவருடன் சிங்கப்பூரில் இருக்கிறாள். அந்தந்த ஊர் டயத்துக்கு போனில் பேசிக் கொள்வதும், வீடியோவில் பார்த்துக் கொள்வதும் கோமதிக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது எனலாம்.

ஆயிற்று வரதன் காலமாகி நான்கைந்து வருடங்கள் ஆகிவிட்டன. நாட்கள் நகரவில்லை. ஓடுகிறது. கோமதிக்கும் உடம்பு படுத்த ஆரம்பித்தது. ஒத்தாசைக்கு மாதவனின் பாட்டி வந்திருந்தாள். கோமதியை விட ஏழெட்டு வயது சிறியவர். மாமி மாமி என்று பாசமாய் பார்த்துக் கொண்டாள்.

நாலைந்து மாதத்திலேயே படுத்த படுக்கையாகி விட்டாள். ஹரியின் மாட்டுப் பெண்ணிற்கு இரண்டாவது பிரசவம் வேறு. தலைச்சனே சிசேரியன் தான். சித்ரா உடன் இருக்க வேண்டியிருந்தது. சித்ராவின் சம்பந்தியம்மா அவர் மாட்டுப் பெண்ணிற்கு அமெரிக்காவில் சீமந்தம் பண்ணி பிள்ளைப் பேறு செய்ய போயிருக்கிறாள். ஹரிக்குத்தான் தலை சுற்றியது. சென்னைக்கும் கிராமத்திற்கும் சீசன் டிக்கெட்டுதான் வாங்கவில்லை. காலில் கஞ்சியை ஊற்றிக்கொண்டு பறந்து கொண்டிருந்தான். ஒரு வழியாக மகாலக்ஷ்மியாக பேத்தி பிறந்தாள். ஆஸ்பத்திரி, டிஸ்சார்ஜ், புண்ணியாகவசனம், செக்கப் என்று அல்லோல கல்லோலப் பட்டது. மூத்த குழந்தை ரித்திஷ் வேறு வாலாய் இருந்தான். ரொம்ப படுத்தல் வேறு. குழந்தைகிட்ட போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மாலுதான் அம்மாவுக்கு ஒத்தாசையாய் இருந்தாள்.

கொஞ்சம் கொஞ்சமாய் கோமளம் சோர்ந்து போய் காணப்பட்டாள். கோயிலில் பழகிய நட்புக்கள் வந்து பார்த்துப் பேசிவிட்டுப் போனார்கள்.

வைத்தியர் வந்து பார்த்துவிட்டு அதிக நாள் தாங்காது என்று சொல்லிவிட்டார். ஹரி மட்டும் வந்திருந்தான்.

முதல் நாள் முதலே பேச்சு, ஆகாரம் குறைய ஆரம்பித்தது. ஊர்ப் பெரியவர், மணியக்காரர், கணக்குப்பிள்ளை எனக் குடும்ப சகிதம் வந்தார்கள். பத்மா மாமி நாடி பிடித்து பார்த்து விட்டு துளசி தீர்த்தம் விடச்சொன்னாள்.
கண் முன்னே மெல்ல அடங்கும் உயிர்! கையாலாகாத்தனம் என்பதா? கடவுளின் கண்ணாமூச்சி விளையாட்டு என்பதா? கண்மூடி கண் திறப்பதற்குள் எல்லாம் முடிந்துவிட்டது.

தொடரும்...

# நவமி திதி முக்கியத்துவம்

★ அமாவாசை நாளுக்கும், பௌர்ணமி நாளுக்கும் அடுத்து வரும் ஒன்பதாவது நாள் நவமி ஆகும். நவமி திதியில் தான் ஸ்ரீ ராமர் அவதரித்தார். அவர் அரியணை ஏற்கும் நேரத்தில் காட்டிற்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

★ அதுமட்டும் இல்லாது சீதையை பிரிந்து அவர் பட்ட துயரங்கள் எல்லாம் நவமி திதியில் அவர் பிறந்ததுதான் காரணம். எனவே நவமி திதியில் நல்ல காரியங்கள் தொடங்கப்படுவதில்லை. ஆனால், தெய்வீக காரியங்களுக்கு ஏற்ற நாளாகும்.

★ பொதுவாக, அஷ்டமி, நவமி நாட்களில் செய்யும் காரியம் இழுபறியாக இருக்கும். அஷ்டமி, நவமி திதிகள் எதிர்மறையான எண்ணங்களைத் தோற்றுவிக்கும்.

★ உதாரணமாக தாக்குதல், பதிலடி தருதல், வீழ்த்துதல், பழி வாங்குதல் போன்ற எண்ணங்கள் அந்த திதிகளில் அதிகரிக்கும் என்பது முன்னோர்களின் நம்பிக்கையாகும்.



நவமி புராணக்கதை :

★ நவமி என்பது சந்திரனின் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்ட இந்துக் காலக் கணிப்பு முறையில், பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் வரும் ஒரு நாளைக் குறிக்கும்.

★ அஷ்டமி, நவமி தினங்களில் எந்த காரியத்தையும் செய்ய மாட்டார்கள். அந்த இரு திதிகளையும் புறக்கணித்து விடுவார்கள். இதனால் கவலையுற்ற அஷ்டமி, நவமி ஆகிய இரு திதிகளும், மகாவிஷ்ணுவிடம் சென்று தங்களின் கவலையை கூறினார்கள்.

★ அப்போது விஷ்ணு பகவான், உங்களையும் மக்கள் அனைவரும் போற்றி துதிக்கும் நாள் வரும் என்று உறுதியளித்தார். அதன்படியே வாசுதேவர்-தேவகி ஆகியோருக்கு மகனாக அஷ்டமி திதியில் கிருஷ்ணர் தோன்றினார். அன்றைய தினம் கிருஷ்ணஜெயந்தியாக கொண்டாடப்படுகிறது.

★ நவமி திதியில் தசரதர்-கௌசலை தம்பதியருக்கு மகனாக ராமபிரான் பிறந்தார். அன்றைய தினம் ராமநவமி திருநாளாக கொண்டாடப்படுகிறது.

★ நவமியில் தெய்வங்களுக்கு உயிர் பலிக்கொடுத்தல், காவல் தெய்வ வழிபாடு, எல்லை தெய்வ வழிபாடு போன்றவற்றை செய்யலாம்.

★ இந்த நவமி திதி வரும் நாளில் எதிரிகள் மற்றும் போட்டியாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்தால் நமக்கு வெற்றி நிச்சயம். மேலும், இந்த திதி நாளில் அன்னை சரஸ்வதி தேவியை வணங்கி வேலையில் ஈடுபட்டால், அனைத்து காரியமும் சுபமாக நடைபெறும்.

நவமி திதியில் என்னென்ன செய்யலாம்?

★ ஜாதகத்தில் குரு பலவீனமாகவோ, தோஷத்துடனோ இருந்தால் நவமி அன்று சண்டி ஹோமம் செய்வது சிறப்பான பலனை தரும்.

★ நவமி திதியில் எதிரிகளை வெல்லுதல், தெய்வங்களுக்கு பலி கொடுத்தல், காவல் தெய்வ வழிபாடு, எல்லை தெய்வ வழிபாடு போன்றவை செய்வது சிறப்பாகும்.

★ புதிய வேலைகளுக்கு செல்லலாம், நல்ல காரியங்கள் செய்யலாம், நகைகள் மற்றும் ஆடைகள் வாங்கலாம், தர்ம காரியங்கள் செய்யலாம், ஆயுதங்கள் செய்தல் மற்றும் உபயோகித்தல், செங்கல் சூளைக்கு நெருப்பிடுதல் போன்றவை செய்யலாம்.

தவிர்க்க வேண்டியவை:

★ புதிய தொழிலைத் தொடங்குவதைத் தவிர்க்கலாம்.

★ நவமி திதிகளில் திருமணம், கிரகப் பிரவேசம் போன்ற சுப காரியங்கள் செய்வதைத் தவிர்ப்பது வழக்கம். இது இழுபறி நிலையை ஏற்படுத்தும் என்று நம்பப்படுகிறது.

★ முக்கியமான பயணங்களைத் தவிர்ப்பது நல்லது.

**A.s.Govinda rajan**
KODAMBAKKAM CHENNAI

தினம் ஒரு தலைவர்கள்

# எம்.டி.இராமநாதன் வரலாறு

எம். டி. இராமநாதன் அல்லது எம். டி. ஆர் 20 மே 1923 – 27 ஏப்பிரல் 1984) என பிரபலமாக அறியப்படும் மஞ்சப்பார தெவச இராமநாதன் ஒரு கருநாடக இசைப்பாடகர்.

பிறப்பு / கல்வி

சென்னை மாகாணம் பாலக்காடு மாவட்டத்தில் (தற்போது இது கேரள மாநிலத்தில் உள்ளது) மஞ்சப்பார என்னும் கிராமத்தில் பிறந்தார். தந்தையார் பெயர் தெவச பாகவதர். அவர் ஒரு இசை ஆசிரியர். இராமநாதன் பாலக்காட்டிலுள்ள விக்டோரியா கல்லூரியில் இயற்பியலில் இளநிலை பட்டம் பெற்றார்.

இசைப்பயிற்சி

தொடக்க இசைப்பயிற்சியை தனது தந்தையாரிடம் கற்றார். பின்னர் மேலும் தகுதி பெறுவதற்காக இராமநாதனை அவரது தந்தை சென்னைக்கு அழைத்துச் சென்றார். அந்தக் காலகட்டத்தில் சென்னை கலாசேத்திராவில் ருக்மிணிதேவி அருண்டேல் சங்கீத சிரோமணி பாடநெறியை அறிமுகப்படுத்தி அதற்கு புகழ்பெற்ற இசை வித்துவான் டைகர் வரதாச்சாரியாரை முதல்வராக நியமித்திருந்தார். 1944 இல் வகுப்பு தொடங்கியபோது வாய்ப்பாட்டில் முதலாவது மாணவராக இராமநாதன் தேர்ந்தெடுக்கப்பட்டார். முதலாவதாக மட்டுமன்றி வாய்ப்பாட்டில் முதலாவது வகுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரேயொரு மாணவராகவும் விளங்கினார். இதனால் டைகர் வரதாச்சாரியார் தனிக் கவனம் எடுத்து கற்றுக்கொடுத்தார். விரைவில் இராமநாதன் குருவின் மனதில் இடம் பிடித்துக்கொண்டார். இருவருக்குமிடையில் நல்லுறவும் புரிந்துணர்வும் ஏற்பட்டது. இந்த உறவு டைகர் வரதாச்சாரியார் 1950ல் இறக்கும் வரை தொடர்ந்தது. இராமநாதன் கடைசிவரை தனது குருவின் மீது மதிப்பும் பக்தியும் கொண்டிருந்தார்.

இசைப்பணி

இசைக்கச்சேரிகள்

இராமநாதன் ஒரு நாதோபாசகர் – நாதத்தை, இசையை தொழுபவர். அவரது குரலின் ஆழமும் கனதியும் தனித்துவமானவை. அதே போல அவர் பாடும் பாணியும் தனித்துவம் வாய்ந்தது. இசை நிகழ்ச்சிகளில் இவர் மந்த கதியிலேயே பாடுவார். கேட்பவர்கள் பாடல் வரிகளை நன்கு கேட்டு பொருள் விளங்கிக் கொள்ளத் தக்கவாறு இடைவெளி விட்டுப் பாடுவார். சிலர் இவரின் இந்தப் பாணியை விமரிசனம் செய்ததுண்டு. அவர் யாருடைய விமரிசனத்தையும் பொருட்படுத்த மாட்டார். இசையை இசைக்காகவே பாடுவதென்பது இவரின் சிறப்பு. இவரது கனதியான குரலுக்கு மந்த கதியில் பாடுவதே பொருத்தமானது என்பது பல இரசிகர்களின் எண்ணமாக இருந்தது. இவர் சகானா,ஸ்ரீ, ஆனந்த பைரவி, ரீதிகௌளை, யதுகுலகாம்போதி ஆகிய இராகங்களில் செய்யும் ஆலாபனைகள் கருநாடக இசை வரலாற்றில் என்றும் சிறப்பான இடம் வகிக்கும். கேதாரம், காம்போதி, ஹம்சத்வனி என்பனவும் அவருக்கு பிடித்த இராகங்களாகும். இராமநாதன் தனது இசைக் கச்சேரிகளின் போது சில சமயம் பாடுவதை இடையிலே நிறுத்திவிட்டு பக்கவாத்தியம் வாசிக்கும் கலைஞர்களுடன் அல்லது இரசிகர்களுடன் உரையாடுவார், விகடம் பண்ணுவார். ஒரு கச்சேரியின்போது பாடலை நிரவல் செய்து கொண்டிருக்கையில் இடையிலே நிறுத்திவிட்டு பாடல் வரிகளின் விளக்கத்தை இரசிகர்களுக்கு எடுத்துச் சொன்னது பல இரசிகர்களின் நினைவில் நிறைந்த நிகழ்ச்சியாகும். இவர் பாடும்போது பக்கவாத்திய கலைஞர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பார்கள். சில சமயங்களில் பாடல் வரிகளை தொடர்ந்து பாடாமல் வரிகளுக்கிடையே இடைவெளி விடுவார். அச் சமயங்களில் மிருதங்கம் வாசிப்பவர் கூடுதல் ஆவர்த்தனம் வாசிக்கத் தயாராக இருக்கவேண்டும். அதே சமயம் சில வரிகளை திரும்பத் திரும்ப பாடுவார். வயலின் வாசிப்பவர் அடுத்த வரிக்கு அல்லது அடுத்த சங்கதிக்குச் செல்லாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இன்னும் சில சமயங்களில் பிரபல கீர்த்தனைகளை மாற்றிப் பாடுவார். முதலில் அநுபல்லவியைப் பாடிவிட்டுப் பின் பல்லவியைப் பாடுவார். இராமநாதனின் இசைக்கச்சேரிகளை நேரில் பார்ப்பவர்களுக்கு அவரின் முக பாவங்களும் அபிநயங்களும் விருந்தாக அமையும். அவரது வாக்குக் கண்ணும், அவர் அடிக்கடி தனது குடுமியை அவிழ்த்து முடிவதும் பார்ப்பதற்கு வேடிக்கையாக இருக்கும். இவர் மந்த கதியில் பாடும் வழக்கம் உள்ளவராதலால் தீட்சிதர் கிருதிகள் சிலவற்றில் மத்திம கதியில் பாடவேண்டிய இடங்கள் வரும்போது பிரமிப்பூட்டும் வகையில் இரண்டு கதிகளிலும் பாடுவார். காம்போதி இராகத்தில் அமைந்தஸ்ரீ சுப்ரமணியேன நமஸ்தே மற்றும் ஆனந்த பைரவியில் அமைந்த மானச குருகுக என்ற கீர்த்தனைகளில் சரணங்கள் பாடும்போது வர்ணத்தில் உள்ளது போல இரண்டு கதிகளில் பாடுவார்.



இசை ஆசிரியராக

கலாசேத்திராவில் தனது இசைப் பயிற்சி முடிந்தபின் அங்கேயே தனது குருவான டைகர் வரதாச்சாரிக்கு உதவியாக இருந்தார். பின்னர் கலாசேத்திராவிலேயே இசைப் பேராசிரியராகவும் அதன் பின்னர் அங்கே இருந்த நுண்கலைக் கல்லூரிக்கு முதல்வராகவும் பணியாற்றினார். கலாசேத்திராவின் முக்கிய பிரிவு நடனப் பயிற்சியாகும். அங்கே நடனம் பயின்ற பல புகழ்பெற்ற நடனமணிகள் இராமநாதனிடமே இசை கற்றனர். தொடக்கத்தில் மாணவர்களுக்கு அவரது இசை நூதனமானதாகவும் மரபு வழி சாராததாகவும் தோன்றியது. ஆனால் போகப்போக அவரது இசையைப் போற்றியதுடன் அதன் மகத்துவத்தையும் அவர்கள் உணர்ந்தார்கள். உருக்மிணிதேவியும் இராமநாதனது இசையைப் புகழ்ந்ததோடு அது சிறப்புத்தன்மை வாய்ந்தது எனத் தனது மாணவர்களுக்கு கூறினார். காயத்ரி சங்கரன் குறிப்பிடத்தக்க மாணவராவார்.


பாடலாசிரியர்

இராமநாதன் சுமார் 300 கீர்த்தனைகள் தமிழ், தெலுங்கு, சமக்கிருதம் ஆகிய மொழிகளில் இயற்றியுள்ளார். அவற்றில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

# கவினின் அடுத்த அதிரடி - பியாண்ட் பிக்சர்ஸ் தயாரிக்கும் புதிய படம்!

நடிகர் கவினின் 11வது படத்தை பியாண்ட் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது இந்நிறுவனத்தின் இரண்டாவது படமாகும். இப்படத்தை சுஷ்மா சினி ஆர்ட்ஸ் இணைந்து வழங்குகிறது. இப்படம் குடும்பக்கதையை மையமாக கொண்டது என கூறப்படுகிறது.
படப்பிடிப்பு மே மாத இறுதியில் தொடங்கும் என தயாரிப்பு நிறுவனம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இத்திரைப்படத்தை, தேசிய விருது பெற்ற பார்க்கிங் திரைப்படத்தின் இயக்குநர் ராம்குமார் பாலகிருஷ்ணனிடம் பணியாற்றிய பிரவீன் பரமசிவன் இயக்குகிறார்.
நடிகர்கள் மற்றும் படத்தை பற்றிய மற்ற அறிவிப்புகள் விரைவில் ஒன்றன்பின் ஒன்றாக வெளியாகும் என்றும் தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.
தற்போது கவின் நயன்தாராவுடன் ஹாய் படத்தில் நடித்துவருகிறார்.



பாலிவுட் திரையுலகில் முன்னணி நடிகையாக வலம் வருபவர் க்ரித்தி சனோன். இவர் நடிப்பில் கடைசியாக தேரே இஷ்க் மே திரைப்படம் வெளிவந்து நல்ல வரவேற்பை பெற்றது. இதை தொடர்ந்து இவர் நடிப்பில் அடுத்ததாக வெளிவரவிருக்கும் திரைப்படம் Cocktail 2. இப்படத்திலிருந்து சமீபத்தில் வெளிவந்த பாடல் ஒன்று நல்ல வரவேற்பை பெற்றது.
இந்த நிலையில், இப்படத்தின் படப்பிடிப்பில் எடுத்துக்கொண்ட கிளாமர் போட்டோஷூட் புகைப்படங்களை நடிகை க்ரித்தி சனோன் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அவர் பதிவிட்டுள்ள இந்த புகைப்படங்கள் தற்போது ரசிகர்கள் மத்தியில் படுவைரலாகி வருகிறது.

# நினைத்த படி எதுவும் நடக்கவில்லை- திருமணம் குறித்த கேள்விக்கு ரித்விகா பதில்




பரதேசி, மெட்ராஸ், கபாலி, டி.என்.ஏ. போன்ற படங்களின் மூலம் தமிழ் சினிமாவில் பிரபலமானவர் நடிகை ரித்விகா. பிக்பாஸ் 2 சீசனில் பங்கேற்று சிறந்த போட்டியாளராக வெற்றி பெற்றார்.
இந்நிலையில் கடந்த ஆண்டு அவருக்கு திருமண நிச்சயதார்த்தம் நடந்த புகைப்படங்களை தனது சமூக வலைதள பக்கத்தில் பகிர்ந்து இருந்தார்.
இந்நிலையில் ரித்விகாவின் திருமணம் ஒத்தி வைக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகி வந்தது.
தற்போது இந்த தகவலை ரித்விகா அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளார்.
இது குறித்து தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ரசிகர்களுடன் நடந்த கேள்வி, பதில் உரையாடலின் போது, 'ரசிகர் ஒருவர் உங்கள் திருமணத்தில் ஏதும் பிரச்சனையா? என கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் அளித்த ரித்விகா நினைத்த படி எதுவும் நடக்கவில்லை என கூறியுள்ளார்.

# ஓடிடி விவகாரம்: தயாரிப்பாளர்கள் சங்கம் அறிவுறுத்தல்!

ஓடிடி வெளியீடு தொடர்பாக தயாரிப்பாளர்கள், திரைப்பட உரிமையாளர்களுக்கு எந்த கடிதமும் அளிக்கவேண்டாம் என தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்தியில்,
"தமிழ் திரைப்பட விநியோகஸ்தர்கள் சங்கம் 8-வாரங்களுக்கு பிறகு தான், OTT-வெளியீடு என்று கடிதம் கொடுத்தால் தான் திரைப்படங்களை வெளியிட முடியும் என்று நிர்பந்தம் செய்வதை, நமது தமிழ் திரைப்பட தயரிப்பாளர் சங்கம் இது வரை ஏற்றுக்கொள்ளவில்லை. அது பற்றி பேச்சு வார்த்தைக்கு ஹைதராபாத்-ல் மே-10 அன்று அழைத்திருக்கிறோம்.
மேலும் இந்த பேச்சுவார்த்தை குறித்து, தமிழ் நாடு திரைப்பட உரிமையாளர்கள் சங்கம், மற்றும் விநியோகஸ்தர் சங்கங்களுக்கு கடிதமும் கடந்த வாரமே அனுப்பி உள்ளோம்.
இந்நிலையில், சிறு படங்கள் மற்றும் மத்திய பட்ஜெட் படங்கள் 4-வாரங்களுக்கே OTT யில் விற்பனை ஆகாத இந்த சூழ்நிலையில், OTT பற்றி 4-மாநில தயாரிப்பாளர்கள் சங்கமும் பேச்சுவார்த்தை நடத்தி கொண்டிருக்கும் பொழுது, தன்னிச்சையாக முடிவு செய்து, இந்த வாரம் வெளியாக உள்ள திரைப்படங்களுக்கு 8-வாரங்களுக்கு பிறகு தான் OTT வெளியீடு, என்று கடிதம் கொடுத்தால் தான், திரைப்படங்களை வெளியிட முடியும் என்று விநியோகஸ்தர்கள் சங்கமும், திரையரங்கு உரிமையாளர்கள் சங்கமும் கட்டாயமாக கேட்டு பெறுவது எங்களுக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது.
மேலும், இந்த விஷயம் குறித்து வருகிற 26.04.2026 அன்று நடைபெறவுள்ள தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்க பொதுக்குழுவில் முடிவு எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்து கொள்கிறோம்.
ஆகையால், திரைப்பட வெளியீடு குறித்து, தமிழ் திரைப்பட விநியோகஸ்தர் சங்கமோ, திரையரங்கு உரிமையாளர்கள் சங்கமோ கடிதம் கொடுக்க வேண்டும் என்று நிர்பந்தித்தால், அதை உடனே தயாரிப்பாளர்கள் சங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் அத்தகைய கடிதத்தை நமது சங்கத்தின் அனுமதி இல்லாமல் எந்த தயாரிப்பாளரும் கொடுக்க வேண்டாம் என்று அனைத்து தயாரிப்பாளர்களையும் கேட்டு கொள்கிறோம்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# ராமாயணம் குறித்து கருத்து: மீண்டும் சர்ச்சையில் சிக்கிய பிரகாஷ்ராஜ்



கேரளா இலக்கிய விழாவில் நடந்த கலந்துரையாடலின் போது நடிகர் பிரகாஷ்ராஜ் ராமாயணம் சார்ந்த ஒரு நிகழ்ச்சியை பற்றி கருத்து தெரிவித்து இருந்தார். அதில் ராமாயண கதாபாத்திரங்கள் நவீன கால உரையாடல்களை மேற்கொள்வது போல ஒரு கற்பனையான கதையை கூறினார். சீதையை தேடி செல்லும் பயணத்தின் போது தான் சாப்பிட்ட பழங்களுக்கு ராமன் பணம் செலுத்துவதாக அவரது கருத்து அமைந்து இருந்தது.
அவர் பேசிய வீடியோக்கள் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இதையடுத்து பிரகாஷ் ராஜ் மீது ஆந்திர மாநில பா.ஜ.க. தலைவர் பானுபிரகாஷ் போலீசில் புகார் அளித்துள்ளார். அவரது புகார் மனுவில், 'பிரகாஷ்ராஜின் பேச்சு இந்து சமூகத்தின் மதஉணர்வுகளை புண்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாகவும் பிரகாஷ் ராஜ் திட்டமிட்டே மதக்கருத்துக்களை திரித்து கூறி சர்ச்சையை ஏற்படுத்துவதாக குற்றம் சாட்டி உள்ளார். எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என கூறி உள்ளார். ஏற்கனவே இதே விவகாரத்தில் பிரகாஷ்ராஜ் மீது வழக்கறிஞர் அமிதா சச்தேவா புகார் அளித்து இருந்தது குறிப்பிடத்தக்கது.



சரவணன்-மீனாட்சி என்ற படு வெற்றிகரமான சீரியல் மூலம் மக்களின் மனதை வென்றவர் தான் நடிகை ரச்சிதா மகாலட்சுமி.
அந்த சீரியலை தொடர்ந்து நாம் இருவர் நமக்கு இருவர் போன்ற பல தொடர்கள் நடித்து வந்த ரச்சிதா விஜய் டிவியில் ஒளிபரப்பான பிக்பாஸ் நிகழ்ச்சியில் பங்குபெற்று நன்றாக விளையாடி வந்தார்.
அந்நிகழ்ச்சி பிறகு ரச்சிதா சின்னத்திரையில் இருந்து வெள்ளித்திரையில் களமிறங்கி மாசாக நடித்து வருகிறார்.
தற்போது நடிகை ரச்சிதா தனது நீளமான முடிவை கட் செய்து புதிய லுக்கில் புகைப்படங்கள் வெளியிட்டுள்ளார்.

# 'ஸ்மார்ட்போனில்' இருந்து விலகி இருக்கிறேன்- சாய் அபயங்கர்



தமிழ் திரை உலகில் குறுகிய கால கட்டத்தில் முன்னணி இசை அமைப்பாளராக உருவெடுத்திருப்பவர் சாய் அபயங்கர். பிரபல பாடகர்கள் திப்பு-ஹரிணி தம்பதியரின் மகனான சாய் அபயங்கர். தமிழ் சினிமா மட்டுமின்றி மலையாளம், தெலுங்கு மொழி படங்களிலும் இசை அமைத்துள்ளார்.
இந்நிலையில் அவர் அளித்த பேட்டியில், இப்போது என்னிடம் 1000-க்கும் மேற்பட்ட பாடல்கள் உள்ளன. 6-ம் வகுப்பில் இருந்தே நான் அனைத்தையும் இயற்றி உள்ளேன். 60 வயதிற்கு பிறகு என் உடல் நலம் பாதிக்கப்பட்டால் நான் அந்த பாடல்களை பயன்படுத்துவேன். 1000 பாடல்களையும் பயன்படுத்துவேன் என்று சொல்லவில்லை. அவற்றுள் எது சிறந்ததோ அதை மட்டும் பயன்படுத்துவேன்.
சமூக வலைதளங்களில் இருந்து விலகி இருப்பதற்காக நான் ஒரு சாதாரண நோக்கியா செல்போனை பயன்படுத்துகிறேன். சமூக ஊடகங்களில் உங்களுக்கு தேவையானதும் தேவையில்லாததும் உள்ளன. அதனால்தான் சாதாரண போனை பயன்படுத்துகிறேன். இதில்தான் இயக்குனர்களும் தயாரிப்பாளர்களும் அழைக்கின்றனர். பெரும்பாலும் ஸ்மார்ட்போனில் இருந்து விலகியே இருக்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

## WANTED
### MATRIMONY & EVENT ORGANISER EXPERIENCED

**Managers:** Age 35 yrs to 60 yrs. ( Female)
Qualf: Any. Exp : 10 yrs + Any.
Salary: Rs.20,000 to 30,000

**Telecaller** -Staff: (Female): -4 Nos
Qualf: +2 & Above with computer Knoweldge, fluent in Tamil & English.
Salry : RS.10,000

Call/wapp: 9438610756

## ADVERTISE WITH US
CONTACT US
9438610756

## WANTED: FEMALE ANCHORS
- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889

## ! WANTED !
### Muslim Lady Accounts Assistant
**Qualification:** B.Com / Tally Knowledge Required
**Company:** Perfume Manufacturing Company
**Location:** Chrompet
Contact: 99401 46318

## Annai Violet Arts & Science College
Seek Strive Succeed
(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)

Free Transportation for Girl Students from Pattaravakkam Railway Station & Kallikuppam to College

**Key Features**
- Modern Infrastructure | Extensive Library
- Expert Faculty | Result-Oriented Curriculum
- Well-Equipped Labs | Competitive Exam Preparation
- Sports & Skill Development | English Training
- Prime Location | Strong Security
- Seminar Hall | Personalized Student Support
- Inter-College Competitions | Scholarships
- Counseling & Mentoring | Industrial Visits
- Interactive Learning | Strong Placement Support
- Community Radio Station

Regional centre for ICMAI (Institute of Cost Accountants of India) Foundation / Intermediate
EDUCATIONAL BANK LOAN AVAILABLE
Media & Broadcasting Courses Available. RJ / VJ Training given to Students — FM 88.8 VIOLET WAVES

**UG & PG COURSES**

SHIFT I
- B.C.A
- B.B.A
- B.Sc COMPUTER SCIENCE
- B.Sc BIOCHEMISTRY
- B.Sc MICROBIOLOGY
- B.A TAMIL
- B.A ENGLISH
- B.A ECONOMICS
- B.COM (GENERAL)
- B.COM (ACCOUNTING & FINANCE)
- B.COM (CORP. SECRETARYSHIP)
- M.A ENGLISH
- M.COM
- M.Sc BIOCHEMISTRY

SHIFT II
- B.Com (GENERAL)
- B.Com (ISM)
- B.Sc PHYSICS
- B.Sc CHEMISTRY
- B.Sc COMPUTER SCIENCE
- B.Sc VISUAL COMMUNICATION
- M.Sc COMPUTER SCIENCE
- M.Sc MICROBIOLOGY

CERTIFICATE COURSE
- DIP. IN MEDICAL LAB TECHNOLOGY (DMLT)
- CERTIFICATE COURSE IN MEDICAL CODING
- PHOTOSHOP
- COREL DRAW
- TALLY PRIME

The Other Clubs Present in the College are: Eco Club, Expo Club, Prayer Cell, Innovation & ED Cell, Comedy Club, Reporter's Club, Counseling Cell, Fine Arts Club, Citizen Consumer Club, Anti Ragging Cell, Grievance Cell, Women's Cell, Service Club (NCC/NSS/RRC/YRC/Rovers & Rangers), Placement & Career Guidance Cell

UNIVERSITY OF MADRAS - INSTITUTE OF DISTANCE EDUCATION LEARNING SUPPORT CENTRE
Get great education with us!
ADMISSIONS OPEN

Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388
No.53, Violet College Road, Menambedu, Ambattur, Chennai - 53.
info@violetcollege.in www.violetcollege.in

## Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

## keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers

Internship:
- Clinical Training
- Counseling Practice
- Case Work

Jobs:
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com

## WANTED
### JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ, வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம், மேட்டுக்குப்பம்- சென்னை-97

துபாயை தலைமையிடமாகக் கொண்டு தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள உட்-பி குளோபல் பிரைவேட் லிமிடெட் (Would Be Global Pvt Ltd) ஆன்-லைன் வர்த்தக E-Commerce நிறுவனத்திற்கு தாலுக்கா வாரியாக பிரான்ச்சீஸ்கள் (Franchise) தேவை.
பொது மேலாளர்:
7092069555 / 7092047555

## WANTED
### FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp 94386 10756

## WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
- வானகரம் பைபாஸ் ரோடு
- முகப்பேர்
- அம்பத்தூர்
- பட்ரவாக்கம்
- பெரம்பூர்
- மாதவரம்
- திருமுல்லைவாயல்

Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.
APPLY NOW

## SEVEN STARS LOGISTICS PVT.LTD.
We Build Perfection
we simplify shipping for your business
Our Services are ... Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

## just499 MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

## Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

## CAR WASH SUPREME
THE BEST CENTRE OF
SADHANA DEVI.K
Car Wash & Detailing
- Car Foam Pressure Wash
- Teflon Coating
- Ceramic Wax Treatment
- Under Chassis Painting
- Interior Foam Wash / Stain Remover
- Paint Correction / Protection

We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
## ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com

## அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
தமிழ் மாதமிருமுறை இதழ்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com

## WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872






**பலம்-பலவீனம் !**

உன் புன்னகை
உனக்கு பலம்...
எனக்கு அதுவே பலவீனம் !

உன் கூந்தலழகு
உனக்கு பலம்...
அதுவே என் பலவீனம் !

உன் நடையழகு
உனக்கு பலம்...
என் பலவீனம் !

உன் கண்ணழகு
உனக்கு பலம்....
என் பலவீனம்...

மொத்தத்தில் உன்
பெண்மையின்
பலத்தை
அறிந்தேன்...
என் விருப்பத்தை
தெரிவித்தபோது...

"என்னா...அடி !"



**எம்.பி.தினேஷ்.**
கோவை

**சுடுசொல்லே வேண்டாமே சொல்!**

நேரிசை வெண்பா!

நன்சொல் நயன்மையாய்
நற்றமிழில் காண்பமே!
புன்சொல் எதற்கேதான்
பூக்குதிங்கே!--
வன்சொல் எடுத்திடும்
பூகம்பம் எஞ்ஞான்றும்
தானே சுடுசொல்லே
வேண்டாமே சொல்!

வாயார நெஞ்சார
வண்ணமய நற்சொற்கள்
நேயமாய்ப்பேசுவோம்
நீளுலகில்.. ஆயும்
தடையேதும் இல்லாத்
தமிழ்ச்சொல்லே பேசு
சுடுசொல்லே
வேண்டாமே
சொல்!



**முனைவர் இராம. வேதநாயகம்.**

1. சிந்தித்து செயல்படத்
தவறினால் பல சிக்கல்களை
சந்திக்க நேரிடும்

2. நினைவுகளான
பிறகு மனிதர்கள்
நேசிக்கப்படுகிறார்கள்

3. வாழ்க்கை என்பது
அதிசய கவிதை
உனக்கு ஒரு அர்த்தம்
எனக்கு ஒரு அர்த்தம்

4. அன்று செல்லும்
கொடுத்து குழந்தைகளை
வளர்த்தார்கள் இன்று
செல்லை கொடுத்து
குழந்தைகளை
வளர்க்கிறார்கள்



5. யாருக்கும்
பிடித்தவர்களாக
இல்லாமல்
இருப்பதே
மிகப்பெரிய
சுதந்திரம்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



**கிளி தூது**

அழகிய பச்சைக்கிளியே,
அன்னையின்
செல்லக்கிளியே.
ஆடித்திரிவா யோடி, கிளியே!
– (மீனாட்சி)
அம்பிகையைக்
காண்பாயோடி! (2)

மகிமையுள்ள
வண்ணக்கிளியே
மயக்கிடும் பச்சைக்கிளியே!
மாமதுரை செல்வாயோடி –
கிளியே – மீனாட்சி
மகிமை உரைப்பாயோடி
கிளியே.. (2)

பொன்னூஞ்சலில் ஆடும்
போதும், பூக்களைச் சூடும்
போதும் மின்னும் கண்கள்
பார்ப்பாயோடி – கிளியே –
முன்னும் பின்னும்
ரசிப்பாயோடி... கிளியே... (2)

தங்கரதம் ஏறும் போதும்
எங்கும் பவனி சுற்றும் போதும்
தங்கி நீயும் காண்பாயோடி–
கிளியே தாவி
தாவிக்குதிப்பாயேடி...
கிளியே... (2)

பட்டுத்தி மின்னும் போதும்,
பஞ்சணையில் அமரும்
போதும் தொட்டுத்தான்
பார்ப்பாயோடி – கிளியே,
தூரத்தில் நிற்பாயோடி... –
கிளியே...... தூரத்தில்
நிற்பாயோடி..

கோபுரத்தின் மேலேறி,
தாமரைக்குளமும் சுற்றி
கொஞ்சிப்பேசி
சிரிப்பாயோடி...... கிளியே....
வஞ்சி சொல் மறப்பாயோடி..
இந்த வஞ்சி சொல்
மறப்பாயோடி...

அழகிய சொக்கநாதர்
அருகினில் வந்து நிற்க,
அம்பிகையின்
நாணத்தையே..... கிளியே, .....
ஓரக்கண்ணால் காண்பாயோடி
கிளியே, ஓடி மறைவாயோடி –
கிளியே... (2)

சுந்தரேசர் முகம் கண்டு,
சொக்கி போகும் சுந்தரியை,
விந்தையாய்ப் பார்ப்பாயோடி
கிளியே – விருட்டென்
றொடிப்பாயோடி – சிறகை
விருட்டென்றெடிப்பாயோடி..

அன்னை மீனாட்சியிடம்,
சின்னவள் நான் சொன்னேன்
என்று என்குறை
சொல்வாயோடி – கிளியே...
எள்ளி நகைப்பாயோடி..(2)

மீனாட்சி அருள்வேண்டி,
மனத்தால் துதிக்கும் என்னை,
தானாட்சி செய்வாளோடி...
கிளியே – தரிசனம்
தருவாளோடி.... கிளியே... (2)

அழகிய பச்சைக் கிளியே,
அன்னையின்
செல்லக்கிளியே! மாமதுரை
செய்வாயேடி... கிளியே
மீனாட்சி மகிமை
உரைப்பாயேடி....

**திருமதி. இரா.இராஜாமணி**
ஈரோடு

எறும்புகள் சாரை, சாரையாக
ஊர்ந்து வந்ததைக் கண்ட
சாரைப்பாம்பு
சாரை,
சாரையாக
விழுங்கியது



**உ.மு.ந. ராசன் கலாமணி**
கோயம்புத்தூர்.

**உறவுகள்**

ஜன்னலில் தோன்றும்
தார்ச் சாலை
எப்போது தொடர்ந்து
ரயில் பாதை அருகில்
பயணிக்கிறது
எப்போது பிரிந்து
கண் காணாது செல்கிறது
என்று
தெரியவில்லை,
வாழ்வில்
காணும்
உறவுகளைப்
போலவே!



**கே. பி. ஜனார்த்தனன்**

1.மூச்சு விட்டுப் போனால்
பிணம் காசு விட்டுப்
போனால் நடைபிணம்

2.பகலெல்லாம்
பணத்திற்காக போராடும்
மனிதர்கள் இரவில்
தூக்கத்திற்காக
போராடுகிறார்கள்

3. என்னதான்
வக்கீலுக்கு படித்தாலும்
பொண்டாட்டியிடம் வாதாடி
ஜெயிக்க முடியாது

4. தொழிலை தேர்ந்தெடு
தோற்றால் கூட நீ தான்
முதலாளி

5. நாய் யானை நன்றிக்கு
இலக்கணம் தேனி
ஒற்றுமைக்கு இலக்கணம்
உறவுகளோடு உண்ண
காக்கை இலக்கணம்
ஆனால் பொறாமை
தற்பெருமை தலைக்கனம்
சுயநலம் இதுவே
மனிதனுக்கு இலக்கணம்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

**"கனவுலகம் "**

நிறைவேறா ஆசைகள்
நினைத்து ஏங்கும்
எண்ணங்கள்,

வண்ணம் பூசி வலம் வரும்
பெருமூச்சில் குளிர் காயும்!

கனவுலகம் ரகசியமானது
கண்களிலே ஒளிந்திருப்பது!

பறவைகள் பண்ணிசைக்கும்
நட்சத்திரங்கள்
கையசைக்கும்!

மேக ஊர்வலங்களில்
நிலவு வந்து கை கோர்க்கும்!

பூவாசம் காற்றில் நிறைந்து
புன்னகை பூக்கள் இறையும்!

யதார்த்த வாழ்வின் வலியும்
எதிர்பார்ப்பின் குரலும்
இடையில் வந்து கலைத்து
விடும்!

நீளமான இரவுகளில்
விடிவிளக்கின்
வெளிச்சத்தில்,

விழிகள் மூடி கிடக்கையில்
உறங்காத உள்மனதில்,

உணர்வுபூர்வ லயிப்புகளில்
லயம் பிசகி ஒலித்தாலும்...

லயமிசைந்து இனித்தாலும்
விடியலில் நினைக்கையிலே

சுகமோ...,
துக்கமோ...
உதடுகளில்
ஒருமென்னகை!



கனவுகளுக்கு
வயதில்லை!
அவை
காலமெல்லாம்
வாழ்ந்திருக்கும்.

**மீனா சேகர்**



**இறுதிக்கடிதம் !.**

பணி நிமித்தமாய் தனியார்
விடுதியில் அறை எடுத்து
விட்டு ... புழுதி படிந்த...
படுக்கை விரிப்பை உதறிய
போது... தரையில் விழுந்த
நான்காய் மடிக்கப்பட்ட
அந்த காகிதம்...
எப்போதோ.... ஒரு காதல்
ஜோடியால் எழுதப்பட்ட
கடைசி கடிதம்...

"எங்கள் தற்கொலைக்கு
யாரும் காரணம் அல்ல
,எங்களை நிம்மதியாய்
வாழ விடாத இந்த சமூகம்,
எங்களை சாகவாவது
விடட்டும் !"

கடிதத்தை படித்த பின்
பரிபோனது
என் உறக்கம் !

**எம்.பி.தினேஷ்.**
கோவை

**வாக்கு**

உன் தொகுதியின் வளர்ச்சிப்
பார்வையை விரி'வாக்கு'

எதிர்கால சமுதாயத்திற்கான
மக்கள் பிரதிநிதியை
உரு'வாக்கு'


உலகத்தின் மிகப்பெரிய
மக்களாட்சி முறையை
வலு'வாக்கு'

தேர்தல் பணியில்
உனது கடமையை
நிறை'வாக்கு'



தவறாமல்
செலுத்தி
விடு உனது
நல்'வாக்கு'

**நாகை பாலா**



**கண்களும் கவிபாடுதே**

மோகங்கள் கலைந்தாடக்
காதலில் கண்களும்
தேடலில் விரிந்தாடுதே
கண்ணுக்குள் நிலவாகி
கருத்திற்குள்
இருளாகி கனவுகள்
மறைந்தோடுதே

கவிதைக்குப் பொய்யாகி
மெய்யென விழியாகி
மையிட்டு மலர்ந்தாளடி
சாய்வதற்கு உன்னை
நெஞ்சில் நிலைத்தாடச்
சாய்ந்தவள் மறைந்தாளடி

வியப்பினில் புரியுயர்ந்து
வியப்பினை விழியுமிழ்ந்து
சித்திரமாய் நின்றாளடி
உருவங்கள் மறைந்தோடி
உணர்வுகள் கலந்தாடி
என்னுயிர் கலந்தாளடி

காற்றினில் அசைந்தாடி
உயிரினில் உயிராகி
தாபத்தில் நின்றாளடி
எச்சங்கள் இல்லையென்று
ஏங்கும் விழியிரண்டு
மிச்சத்தில் விட்டாளடி

உண்மைக் காதலில்உதிரம்
தள்ளாட கண்விழிநீரும்
பெருகாதோடி
மறக்க முயன்றாலும்
மனத்தின் வடுக்கள்
மறையாமல் போனதடி

கண்களும் கவிபாட
நினைவுகள் நின்றாட
என்மனம் அலைபாயுதே
கதையினில் கருத்தினில்
காதலின் உள்ளன்பின்
கவிதை வடிவாகுதே....

**Banumathi Nachiyar**

**"ஏரிக்கரைப் பூங்காற்றே"**

ஏரிக்கரைப் பூங்காற்றே...
எங்கே கொண்டு போகிறாய்
என் எண்ணங்களை?

அலை போல வந்து
மனதைத் தொட்டு,
அமைதியாய்த் திரும்பிச்
செல்லுகிறாயே ஏன்?

நீரின் நிழலில்
நிலவு விழுந்ததா?
இல்லை என் நினைவுகள்
நீரோடு கலந்து விட்டதா?

பறவைகள் தூங்கும்
வேளையில் உன்
மென்மையான உறுமல்
மட்டும் உள்ளத்தில் ஓர்
இசையாய் ஒலிக்கிறது?

ஒரு காலத்தில்
சிரித்த சுவடுகள்,
இன்று காற்றோடு
கலந்த கதைகள்...
உனக்கு மட்டும்
தெரியும் மறந்து போன
நொடிகள்.

ஏரிக்கரைப் பூங்காற்றே...
நீயொரு வினோதக்
கவிஞன்! வார்த்தையின்றிக்
கவிதை எழுதுகிறாய்!

இதயத்தின் பக்கங்களை
முத்தமிட்டு நகர்கிறாய்?
கண்ணீரை கூட
காற்றுக் கரத்தால்
உலர்த்திச் செல்கிறாய்...

நாளை வருவாயா?
இல்லை நினைவுகளை
மட்டும் விட்டு போவாயா?



ஏரிக்கரைப்
பூங்காற்றே...
உன்
வருகை ஒரு
ஆனந்தம்!
உன் பிரிவு
ஒரு அமைதி!
அந்த
அமைதியில் நானும்...
கவிஞனாகிறேன்!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்.



**விட்டாச்சு லீவு**

வாயிலில் நுழைகையில்
வகுப்பறைச் சத்தம் இல்லை

வண்ணத்துப் பூச்சியாய்ச்
சுற்றும் மாணவர்கள் இல்லை

மலர்ந்த பூக்கள்
மழலைகளைத் தேட

காணாத விழிகள்
கவலையில் தோய்ந்தன

காலடித் தடங்களுக்கு
காதுகள் ஏங்க
கேட்காத ஒலிகள்
காற்றில் கலந்தன

குற்றச்சாட்டுகள் இல்லா
நீதிமன்றமாய் குழந்தைகளின்
குரலுக்கு ஏங்கி நிற்கின்றன
கட்டிடங்கள்

சின்னச் சின்ன
சண்டைகளும்
சிங்கார ஊடல்களும்
ரீங்காரமாகிச் சுழல
மலர் தேடும் வண்டாய்
மௌன மொழி பேசும்

சண்டையிடும் சொல்லும்
சமாதானம் பேச
சங்கடமின்றி நட்பு தேடும்

கைகுலுக்க ஆளன்றி
கல்லும் மண்ணும் ஏங்கும்

நிலவும் அமைதியில்
நிம்மதி இல்லை
நித்தியக் குரலுக்கு
எல்லையும் இல்லை

மாணவரில்லா வகுப்பறை
மகிழ்ச்சியில்லா மன நிலை.

**தமிழ் நிலா**



**நீர் வளம் காத்திடு.!**

வற்றாத ஆறோடும்
பாதையெல்லாம்..
வறண்டு மணல் ஓடுகிற
காட்சி கணாடோம்.!

முற்றாக ஆறுகளை
மறந்து விட்டோம்.. மூடுவிழா
நீர்நிலைக்கு
எடுத்து விட்டோம்.!

விற்றாக வேண்டுமென
மணலெடுத்து..
வீடுகட்ட ஆறுகளை சுரண்டி
விட்டோம்.!

முற்றாத மாந்தர்களாய்
மாறி விட்டோம்.!
முடியாத ஆறுகளை..
காத்திடுவோமே.!

குளங்களை அழித்து
அதிலே வீடு கட்டி..
குடிக்கின்ற தண்ணீரை
விலைக்கு விற்று..

நலம் தந்த கண்மாய்கள்
நம்மூரில் இருந்ததே..
வளம் தந்த நீரோடை
வழியெங்கும் பாய்ந்ததே.!
பலன் தந்த பள்ளம்..
பாலூறும் கிணறு..
பாறையிலும் ஊற்று
பார்க்க முடியவில்லையே!

குப்பியிலே குடித்தோம்
குண்டாவில் குளித்தோம்.!
ஒப்புறவு இழந்தே... நீர்
கொடுப்பதற்கு மறுத்தோம்.!

மழையில்லை! பெய்தால்..
தேக்கவும் தெரியவில்லை!
பிழை செய்தோம்..
நீர்நிலைகள்.. கதியின்றி
போகச் செய்தோம்!

இன்றுமுதல் உறுதி..
எடுத்திடுவோம்.. வா
குன்றுகளை ஆறுகளை
காத்திடுவோம்.. வா.!

மன்றாடும் ஆறுகளை
மனிதனே முன் நின்று
கன்றுதனைக் காக்கும்
தாயாகவே மீட்ப்போம்!

**வே.கல்யாண்குமார்.**



**தேர்தல் கவிதைகள்**

(1) மக்களின் கால்களைப்
பற்றி மண்டியிட்டார்
அரசியல்வாதி தேர்தல்

(2) வாக்குகளின் விலை
உச்சம் தொட்டன
வாக்காளனின் கால்களில்
வேட்பாளன்

(3) வாக்காளன் ஒரு நாள்
முதலாளி வேட்பாளன் ஒரு
நாள் தொழிலாளி
ஊழல் நிரந்தர எஜமானன்



(4) வேட்பாளனின் பவ்யம்
தேர்தல் வரை
வாக்காளனின் சக்தி
ஒட்டுச்வாடி வரை
வாழ்நாள்
சாதனையாளர் ஊழல்

**ஆர். ஹரிகோபி,**
புது டெல்லி



உலக வாசிப்பு தினம்:
23.04.2026

**கண்களின் மகுடம்**

எல்லாம் முடியும் என்பவனே...
என்னினிய இளைஞனே!
உலக வாசிப்பு தினம்
உள்ளுக்குள், உவகை
ஊற்றெடுக்கும்
உயரிய உன்னத தினம்...
வாசிப்பு என்பது
வாழ்வின் மகத்துவம்
உள்ள உறுதிக்கும்
உயரத்துக்கும் இம்மியும்
பிசகாத இமாலய தரத்து
உத்தரவாதம்... ஆரம்பக்
கல்வியில் இருந்து உன்னை
அகிலத்தில் ஆன்றோர்,
சான்றோராக்கும்
அரிய வகைக் கல்வி வரை,
அனைத்துக்கும் சேதாரம்
இல்லாத ஆதாரம் வாசிப்பு...
விழிகளுக்கு நூலுணவு
இல்லாத போது வயிற்றுக்கும்
சிறிது ஈயப்படும் என்பது
இதுவரை யாருக்கும்
சொல்லப்படாத ஐந்தாம்
வேதம்... வாசிப்பின்
மூலதனவேர் கண்கள்
என்றால் கண்களின் மகுடம்
வாசிப்பு என்பதை மறவாதே...
அறிவியல் விளிம்பில்
அலைபேசி, கணினி என்று
எத்தனையோ அவதாரங்கள்
அடுக்கடுக்காய் வந்து
அதிசயம்
ஆக்கினாலும்,
அவையாவும் இங்கே
வாசிப்பு சுவாசத்தில்
தான், களம் இறங்கி
உயிர்ப்போடு உலா
வருகின்றன...
வாசிப்பு இல்லை
யென்றால், வாழ்வில் வசந்தம்
இல்லை என்பதால் தான்,
விழி இழந்தோரும்
வாசித்து மகிழ
வழிவகை கண்டார்
வளர்மனம் படைத்தோர்...
விஞ்ஞான வளர்ச்சியால்,
வற்றாவாசிப்பு மோகம்
வளம் குன்றி வருவதாய்
சொல்லி புள்ளிவிபரப் புலிகள்
நித்தம் நித்தம் பூமியைச்
புல்லரிக்க வைக்கின்றார்...
உண்மையே ஆனாலும் அதில்
உண்மையில்லை காண்...
வாசிப்புக்கு முகங்கள்
மட்டும் மாறலாம்... ஆனால்
அகத்தின் அசலுக்கு
அறிவியல் கூட்டமே
அணி திரண்டு வந்தாலும்,
ஆப்பு வைக்க முடியாது...
என்னினிய இளைஞனே...
வாசிப்பு என்பது
இயற்கை அன்னை
உனக்கு வழங்கிய
வலுகூடிய மாவரம்...
வாசிப்பு பயணத்தின்
இலக்கை பாடப்
புத்தகங்களோடு நிறுத்தி
சுருக்கிக் கொள்ளாதே...
நேர்மறை உணர்வோடு
நெஞ்சம் விழித்து
தெளிந்த பார்வையில்
தேர்வு செய்து விழிகளுக்கு
விளக்கேற்று...நெற்றிக்கண்
திறந்து நேரம் காலம் பாராமல்
நேர்மைத் திறத்தோடு
வாசிப்பதை வழக்கமாக்கு...
எத்திசையில் இருந்து
எதிர்ப்பும் இன்னலும்
ஈவிரக்கமின்றி இணைந்து
வந்தாலும் எதையும் தாங்கும்
எக்கு இதயம் என்றென்றும்
உனக்கு வசப்படும்...கூடவே ,
கூற்றுவனே வந்து தடுத்தாலும்
கோலோச்சும் திறனும்
கொள்கை வழித் திடமும்
கூடிக் கொண்டே
இருக்கும்...
வானந்தொடும் வளமார்ந்த
வெற்றிகளும் வடுயேதும்
படாமல் வந்து கொண்டே
இருக்கும்!



**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்






ஓய்ந்தது இன்று
ஒரு நாள் ஓய்வு உனக்கு
கேட்டதிலே ஒரு சலிப்பு
சிந்திக்கும் திறன் இழப்பு
ஓய்ந்தது இன்று
ஒரு நாள் ஓய்வு உனக்கு

செய்தேன் நானே உனக்கு
என்றது ஒரு செய்தி
செய்வேன் நானே என்பது
உறுதி கூறும் புதுச் செய்தி
வென்றவர்கள் சொன்னது
கண்முன்னே பட்டியலில்
வெல்லத் துடிப்பவர்கள்
தருவது உறுதி மொழி
பட்டியல்

கேட்டதை நினைவில்கொள்
படித்ததை மனதில் கொள்
தயக்கங்கள் ஏதுமின்றி
எதிரே யார் என்று பார்
சொன்னதை செய்தவரா
சொல்வதை செய்வாரா

சீர்தூக்கி நிதானித்து
மனதினிலே எடை போடு

வென்று வருபவர்
நின்று உடன் இருப்பாரா
கேட்ட ஒரு குரலுக்கு
செய்கின்றேன் என்று
உடன் வந்து செய்து
தருவாரா தனி நபர் நலம்
வேண்டாம் பொது நலம்
வேண்டியே செய்கின்ற
துடிப்புக் கொண்டு
செய்து தரும் உறுதி
கொண்டவரா

உன்னில் இருப்பது
உனது கடமை
உனக்காக இல்லை
ஊருக்குக்காக யார் செய்வார்
சிந்தித்து செயல்படு
நாடு நலம் பெற
நாடு வளம் பெற
நல்லவர்கள் ஆள வேண்டும்



நாடு உயர நாமும்
உயர்வோம்

இது என் கடமை
ஜன நாயக கடமை

**ஓம் குமார் P N**

---

## உண்மை பேசுபவரை உலகம் போற்றும் .

நேர்மையாக நடப்பவர்களே
மக்களின் மனதில் நீங்காத
இடம் பிடிக்கிறார்கள்.

உண்மை பேசுபவரை உலகம்
போற்றும்!
உண்மையே உயர்வு தரும்!

பொய் தற்காலிக லாபம்
தந்தாலும் உண்மை மட்டுமே
ஒருவருக்கு நிலையான
கௌரவத்தை தேடி தரும்.

"வாய்மையே வெல்லும்
"என்பதே இவ்வுலகில் மாறாத
நீதி.

உங்களின் நேர்மையான
பண்பு உங்களை என்றும்
உயர்த்தி பிடிக்கும்.
உள்ளத்தில் பட்டதை
அப்படியே மொழியில்
படிப்பதே அறம்.

சொல்லும் செயலும்
ஒன்றாக இருக்கும் போது
உலகத்தாரை ஈர்க்கும்
காந்தமாகிறது.

பொய் என்பது இருளைப்
போன்றது; உண்மை என்பது
சூரியனைப் போன்றது.

எவன் ஒருவரிடம்
கள்ளம் கபடம்
இல்லையோ அவரிடம்
தெய்வீகத் தன்மை
குடிபுகுவதாக
கருதப்படுகிறது.

இயற்கையை அவருக்கு
பணிந்து, உலகை அவரை
போற்ற வைக்கிறது.

நேர்மையான
மனிதர்கள் மீது உலகம்
ஆழ்ந்த நம்பிக்கையும்
மரியாதையும் வைக்கும்.

"வாய்மை எனப்படுவது
யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்"
திருவள்ளுவர் கூறுகிறார்.
உண்மையை சொல்பவர்
எதற்கும் அஞ்சத் தேவை
இல்லை.

அவர் எப்போதும் நிமிர்ந்து
நிற்பார் !

அறநெறிகள்
உண்மையையே முதல்
தர்மமாக கருதுகின்றன.

மெய் பேசுவது உடலையும்
உள்ளத்தையும் தூய்மையாக
வைத்திருக்கும்.

ஒரு மனிதன் தன்னைத்
தானே செதுக்கிக் கொள்ளும்
மிகச்சிறந்த உளி– உண்மை

மற்றொரு மனம் நோகாமல்
சொல்லப்படும் உண்மை,
ஒருவரைப் புனிதராக
மாற்றும்



உண்மை பேசுபவர் வாழும்
காலத்தில் மற்றொரு
இதயங்களில் சிம்மாசனம்
போட்டு அமருகிறார்.

**பெ.திருமுகம்,**
மணமேல்குடி

---



## "மொபைல் அடிமைகள்"

கையிலோர் செவ்வகப் பெட்டி
கண்களிலோர் மாய உலகம்
நேரத்தை விழுங்கும்
மொபைல் டைனோசர்!

அம்மா அழைத்தால்
திரும்பாத தலை!
அப்பா பேசினால்
கேட்காத நிலை!

அருகாமை நண்பன்
தொலைதூரம் ஆகிறான்!
தொலைதூர நண்பன்
முகநூலில் வாழ்கிறான்!

புத்தகப் பக்கங்களைத்
திறக்காத
விரல்களுக்கு
கைப்பேசித் திரையின்
தடவல்களே வரங்கள்!

அறிவின் விதைகளை
விதைக்க மறந்து
மாய நாற்றுக்களுக்கு
மருதாணி பூசுகிறாய்!

கண்ணொளி மங்கும்
மனஅமைதி கரையும்
சின்ன ஒளிக்குள்
சிறைப்பட்டுப் போவதால்!

நேரமில்லா வாழ்வு
நெருக்கமாகும்!
நெருக்கமான உறவுகள்
விலகிப் போகும்!

ஆரம்பத்தில் நீ அதைப்
பயன்படுத்துவாய்!
பின்னர் அது உன்னைப்
பயன்படுத்தும்!

விழித்திடு இளைஞனே!
விட்டில் பூச்சியல்ல நீ
வலைதள வெளிச்சத்தில்
வாழ்ந்து மறைய!



இயற்கையை ரசிக்க
விழிகளைத் திறந்திடு
எழில்மிகு வையகம்
எதிரே காத்திருக்கிறது!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

---




## தமிழே எனதுயிர்!

தமிழே எனதுயிர் நண்பா
தமிழே எனதுயிர் நண்பா
தமிழே உலகமொழி நண்பா
தமிழே ஆதிமொழி நண்நா!

தமிழே இனிமைமொழி நண்பா
தமிழே தூய்மைமொழி நண்பா
தமிழே தனித்தமொழி நண்பா
தமிழே உயர்ந்தமொழி நண்பா!

தமிழே தாய்மைமொழி நண்பா
தமிழே சேய்மைமொழி நண்பா
தமிழே வாய்மைமொழி நண்பா
தமிழே இனித்தமொழி நண்பா!

தமிழே பேசிடு நண்பா
தமிழிலே படைத்திடு நண்பா



தமிழே
ஆளும்மொழி
நண்பா
தமிழே
உயிர்மொழி
நண்பா!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

---



எடுத்துக் காட்டு
மக்களுக்கு நன்மை
விளைவிக்கும் செயல்களை
திட்டமிடல் அவசியம்
இரு பாலரின்
எண்ணிக்கையும்
சமமாய் இருந்திடல்
வேண்டும் காய் கனி
மளிகைப் பொருட்கள்
தடையின்றிக் கிடைக்க
வேண்டும்
நீராதாரம் பொய்க்கக் கூடாது
அண்டை நாடுகளிடம் நட்பு
சமாதானத்தை வலியுறுத்திடு



ஜனநாயக
கடமை
ஆற்றுவீர்
முன்மாதிரியாய்
திகழ்வீர்

**பி. பழனி,**
சென்னை.

---



## கருப்பும் நீலமும்

கருப்பும் நீலமும்
கலந்து ஒட்டிக்கொள்ளும்
கவலைப்பட வேண்டாம்...

உதறவும் செய்யாதே
துடைக்கவும் முயலாதே ...

உனது கடமைக்கு
அடையாளம் உரிமைக்கு
வாசல் அதுதான்
பெருமிதத்துடன் காட்டு–உன்
வாக்களித்த விரலினை.

**கா. ஹபீப் முகமது.**

---

## தமிழே நீ விளையாட வா

அன்னைத் தமிழே
உயிரின் மூச்சு
என் நெஞ்சில் நீ வாழ்கிறாய்
காலம் கடந்து
நிலைக்கும் மொழி
கல் நினைவில் நீ நிற்கிறாய்

நாவிலேயே தேன்
சிந்தும் மொழி
சொல்லின் உள்ளம்
நீயே தானே
சுப்பிரமணி பாரதி கனவில்
தீயாய் எறிந்தாய் சுதந்திரக்
குரலில் நீ ஒலித்தாய்

பாரதிதாசன் பாடலில் புரட்சி
பூத்தது மண்ணின் வாசம்
நீயே தானே உயிருக்கு
உணவாய் ஆனய் நீ
உலகம் முழுவதும்
விளையாடும் தமிழே.

**பெ.திருமுகம்** மணமேல்குடி .

---



## பு(து)த்தகம்

புத்தகத் திருவிழாக்கள்
நித்தம் நடந்தேறி
வருகின்றன.
புத்தம் புது நூல்கள்
எத்தனையோ
விற்பனையாகின்றன.
மொத்தமாக வாங்கிய
கிரந்தங்களை பத்திரமாக
கொண்டுச் செல்வர்
தத்தம் ஊரடைந்ததும்
சுத்தமாக மறந்து
ஆயத்தமாவர் நித்திய
பணிகளுக்கு.
பொத்தகங்களின்று
விற்பதில்லை யென
பொத்தம் பொதுவாக
கூறிடலாகாது
வித்த புத்தகங்களின்
எண்ணிக்கை
சத்தமின்றி கருவூலங்களை
நிறைக்குது. புத்தகத்தின்
கொத்தடிமையாம்
வித்தகனும் சொத்தென
மதிப்பது பதிப்பகங்களையும்
நூலகங்களையும் தானே?
எண்ம வாசிப்பென்பது
தொன்மை வாசிப்புக்கு
மாற்றாகாது "எண்ணும்
எழுத்தும் கண்ணெனத்
தகும்" நூல்களே
இவைகளின்
ஆதாரமாகும்.
உள்ளரங்கங்களிலேயே
பெரும்பாலும்
வெளியிடப் படுவதால்
வெளியிடங்களில்



புத்தக
விற்பனை
'வெயிட்டிங்
லிஸ்ட்'ல்
இடம்
பெறுகின்ற
னவோ?.

**முனைவர். வே. புகழேந்தி**
பெங்களூரு

---

அ..ழ..கி என்கிறேன்.
நா..னா என்கிறாய்
கூடுதல் அழகிட்டுக்
கொண்டு.

நீயும் வானமும் ஒன்று..
அந்தியில் வித விதமாய்
காட்சி அழகு.



மேகங்களை
உருவி
கை
வலிக்கிறது..
உன் காட்சி
கிட்டியபாடில்லை.

**ரிஷபன்**

---



## தேர்தல் !

எங்கு நோக்கினும் காக்கி
நிற உடைகள் !

ஆங்காங்கே கையில்
சின்னத்துடன் கொடியுடனும்
'சார் எங்க சின்னம், அம்மா
நம்ம வேட்பாளர் !"
எனத் தொண்டர்களின்
கூக்குரல்...

கையில் பூத் சிலிப்புடன்
வாக்கு சாவடியை தேடும்
வாக்காளர்கள் ...

நிறுவனங்களுக்கு
விடுமுறையாதலால்
ஓய்வெடுக்கும்
தொழிலாளர்கள் ...

யார் ஆட்சி செய்தால்
நமக்கென்ன...
ஊர்வம்பை மட்டும் பேசி
உற்சாக பானத்தில்
உறங்கிக் கிடக்கும்



குடிமகன்கள்....

என.... இதோ
வந்துவிட்டது
மற்றும் ஓர்
தேர்தல்
திருவிழா.... !

**எம்.பி.தினேஷ்.**கோவை

---

ஞாயிறு செங்கனலோன்
கிழக்கினில் தோன்றி வெகு
நேரம் கழித்தும் நான்
கட்டிலில் வீழ்ந்துகிடந்தேன்...
கால்கள் அசைய மறுத்து...
கண்கள் இரண்டும் இருளில்
உழன்று... செவிகளிரண்டும்
ஒலி உணர்வற்று...
நான் கட்டிலில்
வீழ்ந்துகிடந்தேன்...
உயிர் இந்த சட்டையை
(உடலை) கழற்றி விட்டத்தோ
என்று பதறிய தருணம்
நினைவில் வந்தது இன்று



#ஞாயிறு
என்று...
புரியாத
மாயைகளுக்குள்
வாழ்க்கையின்
வசந்தங்கள்...

**கவிஞர்**
**பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

---

## வெற்றித் திருமகன்

குமார்களில் நீ ஓர்
அதிசய குமார்!
அதனால் தான்
செய்த சாதனைகளே
போதுமென்(று)றா
நிறுத்திக் கொண்டாய்?!
இரவில் உறக்கத்தில்
எழுப்பினாலும் கூட நீ
புன்னகை மன்னன் தான்!
அத்தனை புத்துணர்ச்சியான
புதுமையான எழுத்தாளன் நீ!
நகைச்சுவை கவிதை
கதை நாவல் என நீ
எது எழுதினாலும் அது
பாடமாக மட்டுமல்ல
அது சாதனையாகவும்
மிளிர்கிறது!
உன் நண்பன் யார் என்று
சொல்? உன்னைப் பற்றி
சொல்கிறேன் என்பார்கள்!
அதெப்படி உன்
பெயரை மட்டும்
அவ்வளவு நண்பர்கள்
சொன்னார்கள்?!
உன்னைப் பற்றி
எது கேட்டாலும் லும்
பதில் சொல்ல முடிந்த
என்னால் உன்னிடம்
எது பிடிக்கும்?
என்று கேட்டால்
பதில் சொல்லவே முடியாது!
ஏனென்றால் எந்தக்
குறைபாட்டையும் நான்
ஒரு முறை கூடக்
கண்டதில்லையே!
நீ வாழ்ந்தது
வேலூர் என்றாலும்
சாதனையில்
தமிழகம் முழுவதும்
உள்ள தோழமைகளால்
கொண்டாடப்படுபவன் நீ!
அன்பனே! நண்பனே!



புனிதனே!
இனியவனே!
நீ உடலால்
மறைந்தாலும்
என்
உள்ளத்தில்
நிரந்தரமாய்
வாழ்பவன் நீ!

**முத்து ஆனந்த்** வேலூர்

---

## பொன்னுத் தாயீ!

காடு கழனியெல்லா பயிர்
வெளையும் வாய்க்கா
வரப்பெல்லா புல் முளையும்

பொறக்கையிலே
பொன்னிறமா
பொறப்பெடுத்தா
பொழுதெல்லாம்
பாடுபட்டே மங்கிப்போனா.
பொன்னுத்தாயி!

வேகாத வெய்யிலிலே
வெந்திடுவா வேர்வை
குளிப்பாட்ட நிமிர்ந்திடுவா.

மாடு கன்னுக் கெல்லா
மேவு விக்கும் சந்தை
கரும்புக்கடைச் சந்தை அவ
வியாபாரச் சந்தை

வண்டிச் சுமைய தலைச்
சுமையாக் கொண்டு வந்து
சொற்பக் காசுக்கே விற்பா
நெஞ்சச் சுமையக் கொஞ்சம்
கொறைப்பா அறுத்துவந்த
புல்லோ அற்பப் புல் அல்ல
அவளோட ரத்தம் உதிரிப்புல்



தின்னும்
குதிரை
களுக்காக
விட்டுக்
கொடுப்பா
தன் பிஞ்சுளை
நெஞ்சில்
இருத்தி!

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சி கோட்டை.

---

## "நம் வாழ்க்கைக்கான விலை."

கூர்ந்து கவனித்தால்தான் தெரியும்; ஓடியாடும் அலையின் வேதனை என்னவென்று!

கூர்ந்து கவனித்தால்தான் தெரியும் சர்க்கஸ் கோமாளியின் சோகம் எதுவென்று!

கூர்ந்து கவனித்தால்தான் தெரியும் பிரகாசமாக எரியும் விளக்கின் முடிவு என்னவென்று!

கூர்ந்து கவனித்தால்தான் தெரியும் கலைக்கூத்தாடிக் குடும்ப வறுமையின் நிலை என்னவென்று!

இவற்றினைப் போன்று..

கூர்ந்து கவனித்தால்தான் தெரியும் 'நம் வாழ்க்கையில் வெற்றி பெற எதுயெதை நாம் விலையாகக் கொடுத்திருக்கிறோம்' என்பதின் புள்ளி விபரக் கணக்கு..!

"ஆயுள் கணக்கு."

திருவிழா நாட்களில்
களிமண்ணைப் பிசைந்து விதவிதமான வண்ணக் கலவைப் பொம்மைகள் செய்து அவற்றினைத் தள்ளுவண்டியில் வைத்துச் சின்னஞ்சிறுவர்களைக் கூவிக்கூவி அழைத்து விற்க முயலும் ஒரு பொம்மை வியாபாரி..!

"குடைராட்டினம் குச்சிஐஸ் குருவிரொட்டி வண்ணவண்ண பலூன் ஜவ்வுமிட்டாய் பஞ்சுமிட்டாய்" இவற்றிற்கெல்லாம் ஆதரவளிக்கும் அச்சிறுவர்கள் எப்பொழுதுதான் தான் விற்கும்



இப் பொம்மைகள் பக்கம் தத்தம் கவனத்தைச் செலுத்துவார்களோ?

எனும் நிறைவேறாத ஆசையிலேயேக் கழிந்து விடுகிறது அப்பாவி பொம்மை வியாபாரியின் ஆயுள் கணக்கு..!

**கவிச்சாரல் கொள்ளிடம் காமராஜ்,**திருச்சி

---

## சமூகக் குற்றம்!

மாதா பிதா குரு தெய்வம் என்றனர்
மாதா பிதாவிற்கு அடுத்து குருவை வைத்தனர் !

தெய்வத்திற்கும் முன்பாக குருவை வைத்தனர்
தாய் தந்தைக்கு இணையானவர் ஆசிரியர் !



கற்றுக் கொடுக்க வேண்டிய பேராசிரியர்
கூட்டிக் கொடுக்க முயன்றது சமூகக்குற்றம்!

ஒருவனுக்கு ஒருத்தி என்ற தமிழ்ப்பண்பாட்டை
உணராமல் சிதைத்த செயல் பெரிய குற்றம்!

ஒழுக்கம் கற்பிக்க வேண்டிய பேராசிரியரே
ஒழுக்கக் கேட்டிற்கு வழிவகுத்தது குற்றமே!

உலகப் பொதுமறையில் ஒப்பற்ற திருவள்ளுவர்
உயிருக்கு மேலாக ஒழுக்கத்தை சொன்னார் !

மாமா வேலை பார்க்க முனைவர் பட்டம் எதற்கு?
மடத்தனம் புரிந்த உனக்கு பட்டம் பதவி எதற்கு ?

முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டியவர் !
வேறுமாதிரியாக நடந்து கொண்டது குற்றமே!

தவறு செய்ய நினைக்கும் அனைவருக்கும் !
தரும் தண்டனை பாடமாக அமைய வேண்டும்!

தாய் செய்த குற்றத்திற்காக சமுதாயம் !
தவறே செய்யாத மகள்களையும் தப்பாகப் பார்க்கும்!

தரமாக நடந்து இருந்தால் இப்படி வீணாய்
தவிக்கும் நிலை வந்து இருக்குமா சிந்திப்பாயா ?

மகளாக நினைக்க வேண்டிய மாணவிகளை
மானம் கெட விலைமகளாக்க நினைத்தது குற்றமே!

மானம் கெட்டா மதிப்பெண்கள் பெற வேண்டும்
மானம் கெட்ட மதி கெட்ட பேராசிரியை!

படித்து உயர்நிலை பெற வேண்டும் என்றால் நன்று
படுத்து உயர்நிலை பெற வேண்டும் என்றது குற்றமே!

இரண்டு மகள்களுக்குத் தாயான பேராசிரியைக்கு
இருட்டு புத்தி குருட்டு புத்தி வந்தது குற்றமே!

**கவிஞர் இரா. இரவி!**

---



## ஒரு விரல் புரட்சி

ஐந்தாண்டுக்கு ஒரு முறை
அரசியலில் வரும் மாற்றம்

நாடாளும் தலைவனை
நாமாகத் தேட நல்வாய்ப்பு

மூவாறு அகவையிலே
முத்தாய் வருமே
பொறுப்புணர்வு

நாட்டின் குடிமகன்
நாமென்று
நல்லதொரு கடமை
தேடி வரும்

ஒரு நாள் வைக்கும்

மையாலே நாடும் உயரும்
தன்னாலே

உரிமை கோரும் மனதிற்கு
கடமை செய்ய
காலம் தந்த பரிசு

போரில் நிகழ்ந்த புரட்சிகள்
ஊரில் நாமும் கண்டதுண்டு
போரின் விளைவாய்ப்
பெருவெடிப்பு
உருவெடுத்து உலா வரும்

விரலில் காணும் புரட்சியுமே
விளைவை நல்லதாய்த்
தந்திடும்

நீட்டிய விரலின் மை
நாட்டின் வளர்ச்சிக்கு
வழி காட்டும்

விரலில் காட்டுவோம்
புரட்சியினை



விளைவை முழுதாய்
ஏற்றிடுவோம்

வாக்கை நாமும் மறவாது
வகையாய்ச் செலுத்தி
வழி பெறுவோம்.

**தமிழ்நிலா**






















ATTENTION

ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு

10th., ITI Electrical B- Licence, Dip EEE தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.







THANIGAI

WANTED

REAL ESTATE MARKETING

PART TIME & FULL TIME

☑ Flexible work ☑ No Age Limit / No Investment

☑ No Experience/No Qualification ☑ No Risk / No Target


Simple work – just refer customers only

Office Location : Near Perambur Railway Station

K. Ramakrishnareddy 90879 55111







SMART PROMOTERS
BUSINESS VIDEOS
IN ALL INDIAN LANGUAGES
SUCCESS
GROWTH
MULTIPLE LANGUAGES
PROMOTE WITH US
PROMOTE YOUR BUSINESS THROUGH OUR CHANNEL
1. Promote your Business
2. In Multiple Languages
3. We Promote in Social Media
4. Find Innovation & New Techniques
5. With Less Budget
HIGHLY PROFESSIONAL & ATTRACTIVE CONTENT
ENGLISH TAMIL TELUGU HINDI ODIA BENGALI KANNADA
CALL NOW: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Low Cost Matrimony Website
MATRIMONY
WEBSITE
RS.15000
Call/Whatsapp - +91 97155 39521


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


அருள்தரும் தெய்வம்
விளம்பர முகவர்கள் &
விற்பனை பிரதிநிதிகள் தேவை
• அருள்தரும் தெய்வம் மாதம் இருமுறை பக்தி இதழுக்காக
• பகுதிநேர / முழு நேர வாய்ப்புகள்
• கமிஷன் அல்லது மாத ஊதிய அடிப்படையில்
• மாதம் Rs. 20000 முதல் Rs. 50000/- வரை ஈட்ட சிறந்த வாய்ப்பு
CALL / WHATSAPP: 7789941009
இன்றே இணையுங்கள்!


WANTED
— MARKETING EXECUTIVES —
We are hiring Marketing Executives (Male/Female) for immediate openings.
Full-Time / Part-Time
Salary: ₹30,000 - ₹50,000
Open to all, including Retired / VRS candidates and Job Seekers.
Location: All Over Tamil Nadu
Contact: 7789941009


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


உ
ஸ்ரீ வாசவி சகாயம்
கரூர் ஸ்ரீ வாசவி
கன்னிகாபரமேஸ்வரி அம்மன்
ஜெயந்தி தின விழா
அழைப்பிதழ்
26.04.2026 ஞாயிற்றுக்கிழமை
(15.04.2026 முதல் 27.04.2026 முடிய)


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
பேப்பர்பாய்
8122664699


TAMIL
TELECALLER
JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009


முனீஸ்வர் துணை
கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI
ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377 , 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


DIGITAL MARKETING SOLUTIONS
smartpromoters.com


THE BEST CENTRE OF
CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


ஸர்வேஜநா சுகிநோபவந்து
அஜந்தா
பாக்கு
சம்பிரதாய தாம்பூல பாக்கு
RAVIKUMAR AND COMPANY
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
సంప్రదాయ తాంబూళ వక్కపలుకులు
సంప్రదాయ తాంబూల పాక్కు!
பூஜைக்கு
உகந்த பாக்கு
சம்பிரதாய
தாம்பூல பாக்கு!
21, North Mada Street, Viilivakkam, Chennai - 600 049 PH: 044 26171341 | emalir ajanthasupari@hotmail.com


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


PALANIVEL
9677174691
9176232026
PR
TRANSPORT
NO.1-B, parivallai street, Murugappa nagar,
Manali high road, Ernavoor,Chennai-57


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை
பொருட்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com



உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com


உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த
பாஸ்கர்
ANANDA BHASKAR
www.anandabhaskar.com


வாரம் தோறும்
பல்சுவை செய்திகளை
தரும் தரமான
வார இதழ்
பேப்பர்பாய்
www.Paperboy.com



# பல்சுவை களஞ்சியம்




# மீம்ஸ்







## முகத்தில் ரோஸ் வாட்டரை தடவுவதால் ஏற்படும் நன்மைகள்..!



முகத்திற்கு ரோஸ் வாட்டரை தடவி வந்தால், நீண்ட நேரம் புத்துணர்ச்சியாக இருப்பதுடன், சருமத்தின் ஈரப்பதம் அதிகரிக்கும். ரோஸ் வாட்டர் முகத்தில் ஏற்படும் அதிகப்படியான எண்ணெய் சுரப்பை கட்டுப்படுத்தி, கரும்புள்ளி, பருக்கள் வராமல் தடுக்கிறது.வெடித்த உதடுகள் மற்றும் கருப்பாக உள்ள உதடுகள் மீது தினமும் ரோஸ் வாட்டரை தடவி வந்தால், நல்ல பலன் கிடைக்கும். ரோஸ் வாட்டர் மற்றும் க்ளிசரின் கலந்து, கால் பாதத்தில் தடவி வந்தால், பாதத்தில் உள்ள பித்த வெடிப்புகள் குறைந்து, பாதம் மிருதுவாகும்.தினமும் இரவில் படுக்கும் போது, ரோஸ் வாட்டரைக் காட்டனில் நனைத்து முகத்தை துடைத்து எடுத்தால், மேக்கப் நீங்குவதோடு, சருமமும் மென்மையோடு இருக்கும்.ரோஸ் வாட்டரில் உள்ள சில நுண்ணுயிர்கள் அலர்ஜி, அரிப்பு, சிவந்து போதல் போன்ற சருமப் பிரச்சனைகளுக்கு கூட சிறந்த மருந்தாக உதவுகிறது.ரோஸ் வாட்டரை 1 மணிநேரம் குளிர்சாதனப்பெட்டியில் வைத்து, பின் அதனை காட்டனில் நனைத்து கண்களின் மீது வைத்து சிறிது நேரம் ஊற வைத்தால், கண்களில் உள்ள வீக்கம் குறைந்து, கண்கள் அழகாகும். தினமும் குளிக்கும் போது குளிக்கும் நீரில் சிறிது ரோஸ் வாட்டரை கலந்து குளித்தால் சருமம் மென்மையாகவும், புத்துணர்ச்சியுடனும் இருக்கும்.வறட்சியான சருமம் உள்ளவர்கள், ரோஸ் வாட்டரை சருமத்திற்கு பயன்படுத்தி வந்தால், சருமம் வறட்சியின்றி, மென்மையோடு அழகாக இருக்கும்.ஷேவிங் செய்து முடித்த பிறகு, ரோஸ் வாட்டரை முகத்தில் தடவி பயன்படுத்தினால், ஷேவிங் செய்த பிறகு ஏற்படும் எரிச்சல், அரிப்பு போன்றவை நீங்கி, முகம் மென்மையாக இருக்கும்.

## பளபளப்பாக முகத்தை மாற்ற சூப்பர் டிப்ஸ் இதோ..!!



நம் அனைவருக்குமே முகம் பளபளப்பாக இருக்க வேண்டும் என்ற ஆசை இருக்கும். ஆனால் நம்மில் சிலருக்கு முகத்தில் பருக்கள் வந்து முக அழகை கெடுக்கின்றன. அன்றாட வாழ்க்கையில் நமது உணவு பழக்கங்களினாலும், சரியற்ற பராமரிப்பினாலும் இவ்வாறு பருக்கள் வந்து முகம் பளபளபற்று காணப்படுகிறது.தக்காளி பழத்தின் சாற்றை தேவையான அளவு எடுத்து கொண்டு, அரை தேக்கரண்டி தேனுடன் சிறிதளவு கலந்து கழுத்தில் தடவி வந்தால் கழுத்தில் இருக்கும் கருவளையம் விரைவாக குறையும்.நமது முகம் மற்றும் உடலை அழகூட்ட கடலை பருப்பை கால் கிலோ அளவிற்கும், பாசி பருப்பை கால் கிலோ அளவிற்கும், ஆவாரம் பூவை காய வைத்து சுமார் 100 கிராம் அளவிற்கும் எடுத்து கொண்டு, நன்றாக அரைத்து சோப்பு போட்டு குளிப்பதற்கு பதிலாக இந்த கலவையை அரைத்து தேய்த்து குளித்து வந்தால் முகம் மற்றும் நமது உடலானது அழகு பெறும்.இன்று பெரும்பாலானோருக்கு இருக்கும் முகப்பருவின் தழும்பை மறைப்பதற்கு புதினாச்சாறு 2 தேக்கரண்டி அளவும், எலுமிச்சை சாற்றை ஒரு தேக்கரண்டி அளவும், பயத்தம் பருப்பு மாவை சேர்த்து தழும்பு உள்ள இடத்தில் தேய்த்து வந்தால் முகத்தழும்பு பிரச்சனை நீங்கி முகம் பொலிவு பெறும்.முகம் மென்மையாக மாறுவதற்கு வெள்ளரிச்சாறு, புதினாச்சாறு ஆகிய இரண்டையும் சம அளவு எடுத்து கொண்டு, எலுமிச்சை பழச்சாற்றை அரை தேக்கரண்டி அளவிற்கு எடுத்து கொள்ள வேண்டும். பின்பு இவற்றை தேய்த்து சுமார் 15 நிமிடத்திற்கு பின்னர் கழுவினால் முகமானது மென்மையாக மாறும்.மேல் உதடு ஒரு நிறமாகவும், கீழ் உதடு ஒரு நிறமாகவும் இருப்பவர்கள் சீமை அகத்திக்கீரை, பச்சைப்பயிறு சேர்த்து அரைத்து தடவினால் உதடுகளின் நிறம் மாறி ஒரே மாதிரியாகிவிடும்.ஆரஞ்சு பழத்தை இரண்டாக வெட்டி, முகத்தில் தேய்த்து பத்து நிமிடம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவி வந்தால் முகம் பளபளப்பாக மாறும்.

**A s Govinda rajan**
Kodambakkam Chenna



## விடுகதை

| | |
|---|---|
| கூரை வீட்டைப் பிரித்தால் ஓட்டு வீடு. ஓட்டு வீட்டுக்குள்ளே வெள்ளை மாளிகை. வெள்ளை மாளிகையின் நடுவே ஒரு குளம். அது என்ன? | தேங்காய் |
| தலை இல்லாதவன் தலையை சுமப்பவன் அவன் யார் | தலையணை |
| பற்கள் இருக்கும் கடிக்கமாட்டான் அவன் யார் | சீப்பு |
| கன்று நிற்க கயிறு மேயுது அது என்ன? | பூசனிக்கொடி |
| தலையைச் சீவினால் தாளில் நடப்பான் அவன் யார்? | பென்சில் |
| கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான் அவன் யார்? | கரும்பு |



## ஜோக்ஸ்

ரவி! சாமிகிட்ட நல்ல அறிவை கொடுக்கணும்னு வேண்டிக்கொள்!

அப்பா உங்களுக்கு வேணும்னா நீங்களே சாமி கேட்க வேண்டிக்கறது தான! என்ன விட்டு ஏன் பா கேட்க சொல்றீங்க.

--------------------

பாஸானா மிட்டாய் தருவாங்க! ஆனா உங்க பையன் ஃபெயிலானதுக்கு மிட்டாய் தரீங்களே! ஏன் சார்?

பாஸானா கம்ப்யூட்டர் வாங்கி தரேன்னு சொல்லிட்டேன். இப்ப அந்த பிரச்சனை இல்லை என்கிற சந்தோஷம் தான்.

-----------------

இந்தக் கேள்வி ரொம்ப முக்கியமானது. தூக்கத்துல கேட்டா கூட பதில் சொல்லணும்.

சரி, நீங்க தூங்கும் போதா?

இல்ல நாங்க தூங்கும் போதா?



-----------------

போருக்கு கிளம்பும் முன் மன்னர் எதற்கு டுடோரியல் காலேஜ் போகிறார்?

“இங்கே வந்தால் வெற்றி நிச்சயம்” என விளம்பரப்படுத்தி இருக்காங்களாம் அதான்.

--------------------

நம் மன்னரை கோழையென்று எப்படி சொல்கிறாய்?

எதிரி நாட்டு மன்னன் போருக்கு வரச்சொல்லி ஓலை அனுப்பியதற்கு, நம் மன்னர் “பிப்ரவரி மாதம் 30-ஆம் தேதி போருக்கு வருவதாக பதில் ஓலை அனுப்பி இருக்கிறார்.





# வாங்க சம்பாதிக்கலாம்

## எல்.ஐ.சி., நிறுவனத்தில் ஜூனியர் அசிஸ்டென்ட் வாய்ப்பு




எல். ஐ.சி., ஹவுசிங் பைனான்ஸ் நிறுவனத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
'ஜூனியர் அசிஸ்டென்ட்' பிரிவில் கர்நாடகா 29, மஹாராஷ்டிரா 25, தெலுங்கானா 24, தமிழகம் 21, ம.பி., 18 உட்பட மொத்தம் 180 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பட்டப்படிப்பு
வயது: 21-30 (1.4.2026ன் படி)
தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, நேர்முகத்தேர்வு
தேர்வு மையம்: சென்னை, கோவை, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், தஞ்சாவூர்
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 800. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 30.4.2026
விவரங்களுக்கு: lichousing.com

## அழைக்கிறது மின்சார நிறுவனம்



பொதுத்துறையை சேர்ந்த 'பவர்கிட்' மின்சார நிறுவனத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
எலக்ட்ரிக்கல், சிவில், சர்வே, எச்.ஆர்., நிதி உள்ளிட்ட பிரிவுகளில் மொத்தம் 660 இடங்கள் உள்ளன. இதில் தமிழகம் அடங்கிய தென் மண்டலத்தில் 81 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: டிப்ளமோ / பி.பி.ஏ., / சி.ஏ.,
வயது: 18-27 (11.5.2026ன் படி)
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, ஸ்கில் தேர்வு
தேர்வு மையம்: சென்னை
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 300. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 11.5.2026
விவரங்களுக்கு: powergrid.in

## ஐ.டி.ஐ., முடித்தவருக்கு ஆயுத தொழிற்சாலையில் வேலை




மத்திய அரசின் கீழ் செயல்படும் ம.பி.,யில் உள்ள ஆயுத தொழிற்சாலையில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
'டேஞ்சர் பில்டிங் வொர்க்கர்' பிரிவில் மொத்தம் 350 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: ஐ.டி.ஐ.,
வயது: 18 - 40
பணிக்காலம்: ஓராண்டு. 4 ஆண்டு நீடிப்புக்கு வாய்ப்பு உள்ளது.
தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு
விண்ணப்பிக்கும் முறை: இணைய தளத்தில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
The Chief General Manager, Ordnance Factory Khamaria, District: Jabalpur, Madhya Pradesh - -482 005
விண்ணப்பக்கட்டணம்: இல்லை.
கடைசிநாள்: 1.5.2026
விவரங்களுக்கு: ddpdoo. gov.in

## மின்சார நிறுவனத்தில் வேலை




தேசிய அனல் மின் நிறுவனத்தில் (என். டி.பி.சி.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
பொது மருத்துவம் 25, மருத்துவ அதிகாரி 20, மகளிர் மருத்துவம் 8 உட்பட 55 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: எம்.பி.பி.எஸ்., / எம்.டி., / எம்.எஸ்.,
வயது: 18-37 (23.4.2026ன் படி)
தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு, நேர்முகத்தேர்வு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 500. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 23.4.2026
விவரங்களுக்கு: careers.ntpc.co.in

## மத்திய அரசில் பணியிடங்கள்



மத்திய அரசின் பல்வேறு பிரிவுகளில் காலியிடங்களுக்கு தேர்வு அறிவிப்பை யு.பி.எஸ்.சி., வெளியிட்டுள்ளது.
லைவ்ஸ்டாக் ஆபிசர் 8, சீனியர் ஸ்டோர் ஆபிசர் 7, அசிஸ்டென்ட் கீப்பர் 1 என மொத்தம் 16 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பி.வி.எஸ்சி., & ஏ.எச்.,/எம்.எஸ்சி.,/எம்.காம்.,/ எம்.ஏ.,
வயது: 18 - 30, 18 - 35 (1.5.2026ன் படி)
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 25. பெண்கள் / எஸ்.சி., / எஸ். டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 1.5.2026
விவரங்களுக்கு: upsc.gov.in

## நிலக்கரி நிறுவனத்தில் சேர விருப்பமா...



மத்திய அரசின் கீழ் செயல்படும் வடக்கு நிலக்கரி நிறுவனத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
எச்.இ.எம்.எம்., ஆப்பரேட்டர் டிரைனி 472, பாராமெடிக்கல் டிரைனி 75, சிவில் 30 என மொத்தம் 577 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பிளஸ் 2/டிப்ளமோ/ பி.எஸ்சி., / நர்சிங் / டி.பார்ம்
வயது: 18-30 (1.5.2026ன் படி)
தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 1180. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 1.5.2026
விவரங்களுக்கு: nclcil.in

## பங்குச்சந்தை வீழ்ச்சி! சென்செக்ஸ் 500 புள்ளிகள் குறைந்தது! ஐடி பங்குகள் 3% சரிவு!



பங்குச்சந்தைகள் இன்று(ஏப். 22, புதன்கிழமை) கடும் சரிவுடன் தொடங்கி வர்த்தகமாகி வருகின்றன.
மும்பை பங்குச் சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் இன்று காலை 79,019.34 என்ற புள்ளிகளில் தொடங்கிய நிலையில் காலை 11 மணியளவில் சென்செக்ஸ் 535.64 புள்ளிகள் குறைந்து 78,737.69 புள்ளிகளில் நிலை பெற்றது.
அதேபோல தேசிய பங்குச் சந்தை குறியீட்டு எண் நிஃப்டி 135.60 புள்ளிகள் குறைந்து 24,441.00 புள்ளிகளில் வர்த்தகமாகி வருகிறது.
சென்செக்ஸ் 30 பங்குகளில் ஹிந்துஸ்தான் யுனிலீவர், ட்ரெண்ட், என்டிபிசி, அல்ட்ரா சிமெண்ட், பஜாஜ் பைனான்ஸ், கோட்டக் மஹிந்திரா வங்கி, ரிலையன்ஸ், பஜாஜ் பின்சர்வ், எட்டர்னல் ஆகியவை உயர்ந்தும் மற்ற நிறுவனங்கள் சரிந்தும் வர்த்தகமாகின.
நிஃப்டி மிட்கேப் மற்றும் ஸ்மால்கேப் குறியீடுகள் முறையே 0.21 சதவீதம், 0.65 சதவீதம் உயர்ந்து வர்த்தகமாகின்றன.
துறை வாரியாக, நிஃப்டி ஐடி பங்குகள் கடுமையான சரிவைச் சந்தித்து வருகின்றன. நிஃப்டி சுகாதார சேவைகள், பார்மா, நிதி சேவைகள் உள்ளிட்ட துறைகளும் கடுமையான சரிவைச் சந்தித்து வரும் நிலையில் உலோகம், நுகர்வோர் பொருள்கள், ரியல் எஸ்டேட், பொதுத்துறை வங்கிகள் உயர்வுடன் வர்த்தகமாகின்றன.

## ரூபாய் மதிப்பு சரிவு: 1 டாலர் ரூ. 94! 39 காசுகள் சரிவு!



அமெரிக்க-ஈரான் அமைதிப் பேச்சுவார்த்தை குறித்த நிச்சயமற்ற தன்மை, மேற்கு ஆசியவில் மோதல் தணியும் என்ற நம்பிக்கை சிதைந்த நிலையில், கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்ததால், ரூபாய் மதிப்பு தொடர்ந்து 3வது நாளாக வலுவிழந்தது, 39 காசுகள் சரிந்து ரூ. 93.83ஆக நிலைபெற்றது.
உள்நாட்டுப் பங்குச் சந்தைகளில் ஏற்பட்ட தீவிர விற்பனை மற்றும் தொடர்ந்து வெளியேறி வரும் வெளிநாட்டு நிதி உள்ளிட்டவையால், இந்திய ரூபாயின் மீதான அழுத்தம் அதிகரித்ததாக அந்நிய செலாவணி வர்த்தகர்கள் தெரிவித்தனர்.
வங்கிகளுக்கு இடையிலான அந்நிய செலாவணி சந்தையில், இந்திய ரூபாய் மதிப்பு ரூ.93.69 என்ற அளவில் வர்த்தகம் தொடங்கி, பிறகு டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு ரூ.93.87 என்ற குறைந்தபட்ச நிலையைத் எட்டியது.
இறுதியாக ரூபாய் மதிப்பு அதன் முந்தைய நாள் முடிவிலிருந்து 39 காசுகள் சரிந்து வர்த்தகம் நிறைவடைந்தது.
ரூபாய் மதிப்பு, நேறைய முன்தினம் (திங்கள்கிழமை) 25 காசு சரிந்தம், மறு நாள் (செவ்வாய்க்கிழமை) வர்த்தகத்தில் 28 காசுகள் சரிந்து டாலருக்கு நிகராக ரூ.93.44 ஆக இருந்தது.





இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699

## முத்தங்கி அலங்காரத்தில் மீனாட்சி அம்மன்



வாடிப்பட்டி குலசேகரன்கோட்டை மீனாட்சி அம்மன் கோவிலில் சித்திரை திருவிழாவில் மூன்றாம் நாள் முத்தங்கி அலங்காரத்தில் மீனாட்சி அம்மன் அருள்பாலித்தார்

## குதிரை மூலம் கொண்டு செல்லப்பட்ட வாக்கு இயந்திரங்கள்



**திண்டுக்கல், ஏப்.23:**

தமிழகத்தில் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கு நாளை ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற இருக்கிறது. நேற்று மாலையுடன் பரப்புரை முடிவடைந்த நிலையில், வாக்குப்பதிவு மையத்திற்கு இயந்திரங்களை அனுப்பும் பணிகளை தேர்தல் ஆணையம் செய்து வருகிறது.

தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் மலை கிராமங்கள் உள்ளன. இங்கு சாலை வசதிகள் கிடையாது. இதனால் குதிரை மூலம் வாக்கு இயந்திங்கள் கொண்டு செல்லப்படுவது வழக்கம்.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வட்டக்கானலிலிருந்து சுமார் 9 கி.மீ. தொலைவில் உள்ள வெள்ளக்கெவி கிராமத்திற்கு குதிரை மூலம் வாக்கு இயந்திரங்கள் கொண்டு செல்லப்பட்டன.

## ஸ்ரீஉடையவர் மங்களாசாசன புறப்பாடு



மதுரை ஸ்ரீ கூடலழகர் திருக்கோயில் ஸ்ரீஉடையவர் மங்களாசாசன புறப்பாடு

## சித்திரை பிரம்மோற்சவம்



ஸ்ரீ அஹோபில மட ஆதின பரம்பரை மிராசை சேர்ந்த திருவள்ளூர் ஸ்ரீ வைத்திய வீரராகவ பெருமாள் கோவில் பராபவ வருட சித்திரை பிரம்மோற்சவம் முதல் நாள் காலை துவஜாரோஹனம் 22.04.2026.

## ஸ்ரீஉடையவர் உற்சவம்



ஸ்ரீ உடையவர் உற்சவம் ஒன்பதாம் நாள் ஸ்ரீ பேரருளாளன் சன்னிதி காஞ்சிபுரம்.




## அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் வசந்த உற்சவம்1-ஆம் நாள் பொம்மை பூ கொட்டும் விழா

**திருவண்ணாமலை ஏப்.23:**

அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் சித்திரை மாதம் வசந்த உற்சவத்தை முன்னிட்டு உற்சவருக்கு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரத்துடன் தீபாராதனை முடிந்து ஆலயம் 10 முறை சுற்றி வந்தன.

பொம்மைக்கு அலங்காரம் செய்யப்பட்டு பன்னீர் மண்டபத்தில் ஒவ்வொரு முறையும் பொம்மை சுவாமி மேல் பூ கொட்டும் பின்னர் தீபாராதனையும் நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் பொம்மை பூ கொட்டும் விழாவில் கலந்து கொண்டு அண்ணாமலையாரை வேண்டி அருள் பெற்றனர்.



தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## வேலூரில் மாவட்ட ஆட்சியர் செய்தியாளர்களுடன் சந்திப்பு: தேர்தல் தொடர்பான விரிவான விளக்கம் அளிப்பு!

**வேலூர், ஏப்.23:**

தமிழகத்தில் இன்று (ஏப்ரல் 23) சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. இந்த சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு வேலூர் மாவட்ட எல்லைப் பகுதிகளான ஆந்திரா மற்றும் கர்நாடகா பகுதி சோதனை சாவடிகளில் கண்காணிப்புகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் வேலூர் மாவட்டத்தில் உள்ள ஐந்து சட்டமன்ற தொகுதிகளிலும் தேர்தல் முன்னேற்பாடு நடவடிக்கைகள் முழுவீச்சில் செய்யப்பட்டுள்ளன.



குறிப்பாக தேர்தல் பணிக்கு வரும் அதிகாரிகள் முதல் பணியாளர்கள் வரை அனைவருக்கும் அடிப்படை தேவைகளான தங்கும் வசதி, உணவு, குடிநீர் உள்ளிட்டவை செய்து தரப்பட்டுள்ளது. அத்துடன் மருத்துவர் குழுவும், தீயணைப்புத்துறை வீரர்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். வாக்காளர்கள் சிரமம் இன்றி வாக்களிக்க அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி தந்துள்ளது என வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## மானாமதுரையில் சத்குரு சதாசிவ ப்ரமேந்திராள் ஆராதனை விழா :இரண்டு நாட்கள் நடைபெறுகிறது

**மானாமதுரை, ஏப்.23:**

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் சத் குரு சதாசிவ ப்ரம்மேந் திராள் 46 வது ஆண்டு ஆராதனை விழா வருகிற சனிக்கிழமை 25 ந்தேதி தொடங்கி இரண்டு நாட்கள் நடைபெறுகிறது. மதுரை ராமேஸ்வரம் நான்கு வழி சாலையில் உள்ள எம்எஸ்பி அண்ணாமலை உண்ணாமலைம்மாள் திருமண மஹாலில் கர்நாடக இசைக்கலைஞர்கள் இசை நிகழ்ச்சி நடத்துகின்றனர். கர்நா டக இசை கலைஞர்களின் குருவாக போற்றப்படும் ஸத்குரு சதாசிவ ப்ர மேந்திராள் அதிஷ்டானம் மானாமதுரை ஆனந் தவல்லி, சோமநாதர் கோவிலில் அமைந்துள் ளது. ஆண்டுதோறும் இங்கு ஆராதனை விழா நடைபெறும். இவ்விழா வில் இந்தியாவில் உள்ள ஏராளமான கர்நாடக இசை கலைஞர்கள் இசை அஞ்சலி செலுத்துவார்கள். இந்த ஆண்டுக்கான ஆரா தனை விழா வரும் ஏப்.25,26 ஆகிய நாட்கள் நடக்கிறது. விழாவில் உஞ்சவ்வி ருத்தி, கோஷ்டி கானம், விக்னேஸ்வர,வடுககன்யா சுவாசினி, தம்பதி பூஜைகள், இசை நிகழ்ச்சி, சொற்பொழிவு,



பாராட்டு விழா நடைபெற உள்ளது. இரண்டாம் நாள் ஆனந்த வல்லி சோமநாதர் கோவில் வளாகத்தில் சதாசிவ ப்ரேம்மேந்திராள் சன்னதியில் இசை அஞ்சலி மற்றும் சிறப்பு அபிஷேகம் ஆராதனை ஆராதனை நடைபெறும் . இதற்கான ஏற்பாடுகளை சத்குரு சதாசிவ ப்ரம்மேந்திராள் ஆராதனை விழா கமிட்டியினர் செய்து வருகின்றனர்.

## ஸ்ரீ இராமானுஜருக்கு திருவாதிரை நட்சத்திர வைபவம்..!

**வந்தவாசி, ஏப் 23:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீரங்கநாயகி தாயார் சமேத ஸ்ரீரங்கநாதர் பெருமாள் கோவிலில் உள்ள இராமானுசரருக்கு திருவாதிரை திருநட்சத்திர திருமஞ்சன சேவை வெகு விமரிசையாக நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

**பா. சீனிவாசன்,**
வந்தவாசி.



## திருமஞ்சன சேவை



ஸ்ரீ பாஷ்யகாரரர் 1009வது திருநட்சத்திரம் உல்சவம் திருமஞ்சன சேவை மேற்கோட்டை திருநாராயணபுரம்

## திருப்புல்லாணி உடையவர்




திருப்புல்லாணி உடையவர் மாலை புறப்பாடு

## பக்தர்களுக்கு நீர் மோர்



சீர்காழியில் பக்தர்களுக்கு நீர் மோர் வழங்கப்பட்டது.

## ராமானுஜர் 1009ஆவது திருஅவதார திருநாள் திருமஞ்சனம்



சித்திரை திருவாதிரை ஸ்ரீபெரும்புதூர் ஸ்வாமி ராமானுஜர் 1009ஆவது திருஅவதார திருநாள் திருமஞ்சனம்

# சுற்றுலா: கேரளாவில் பிரபலமான மலைப்பிரதேசங்கள்




கோடை வெயிலின் தாக்கத்திலிருந்து தப்பிக்க கேரளா ஒரு சிறந்த தேர்வாகும். குறிப்பாக கேரளாவின் மலைப்பிரதேசங்கள் கோடை காலத்திலும் குளுமையான சூழலை வழங்குகின்றன. மார்ச் முதல் மே வரை நீடிக்கும் கோடை காலத்தில் நீங்கள் செல்ல வேண்டிய முக்கிய இடங்கள் இதோ:

### குளுமையான மலை வாசஸ்தலங்கள்:

மலைப்பிரதேசங்கள் கடல் மட்டத்திலிருந்து உயரத்தில் இருப்பதால், கோடையிலும் வெப்பநிலை 20°C-க்கு மேல் செல்வதில்லை.

**மூணாறு :** கேரளாவின் “குளுமையான தப்பிப்பிடம்” என்று அழைக்கப்படுகிறது. இங்குள்ள பரந்து விரிந்த தேயிலைத் தோட்டங்கள் மற்றும் எரவிகுளம் தேசியப் பூங்கா ஆகியவை கோடை விடுமுறைக்கு மிகவும் ஏற்றவை.

**வயநாடு :** அடர்ந்த காடுகள் மற்றும் நீர்வீழ்ச்சிகளுக்காகப் புகழ்பெற்றது. இங்குள்ள எடக்கல் குகைகள் மற்றும் சூச்சிப்பாறை நீர்வீழ்ச்சிகள் கோடை வெப்பத்தைத் தணிக்க உதவும்.



**வாகமன்:** கூட்ட நெரிசல் இல்லாத அமைதியான சூழலை விரும்புவோருக்கு இது ஒரு சொர்க்கம். இங்குள்ள மொட்டை மலைகள் (MEADOWS) மற்றும் பைன் காடுகளில் எப்போதும் இதமான காற்று வீசும்.

**பொன்முடி :** திருவனந்தபுரத்திற்கு அருகில் உள்ள இந்த மலைப்பகுதியில் மேகங்கள் தவழும் அழகை ரசிக்கலாம். இது மலையேற்றம் (TREKKING) செய்பவர்களுக்கு மிகவும் பிடித்தமான இடம்.

### இயற்கை மற்றும் வனவிலங்கு அனுபவங்கள்

**தேக்கடி :** பெரியார் ஏரியில் படகு சவாரி செய்யும்போது வனவிலங்குகளைக் காண்பது ஒரு சிலிர்ப்பான அனுபவம். காடுகளின் அடர்த்தியால் இங்கு வெப்பநிலை குறைவாகவே இருக்கும்.

**குமரகம்:** வேம்பநாடு ஏரிக்கரையில் அமைந்துள்ள இந்த இடத்தில் படகு வீடுகளில் தங்கி குளிர்ச்சியான சூழலை அனுபவிக்கலாம். இங்குள்ள பறவைகள் சரணாலயம் கோடையில் வலசை வரும் பறவைகளைப் பார்க்க சிறந்த இடம்.

**கவி :** சூழல்-சுற்றுலா (ECO-TOURISM) விரும்பிகளுக்கு ஏற்ற இடம். இது காடுகளுக்குள் அமைந்துள்ளதால் கோடையிலும் மிகவும் குளுமையாக இருக்கும்.

### கடற்கரை மற்றும் பிற இடங்கள்

கோடையில் கடற்கரைகள் சற்று வெப்பமாக இருந்தாலும், மாலை நேரங்களில் குளுமையான கடல் காற்றை அனுபவிக்க முடியும்.

**வர்கலா :** உயரமான பாறை முகடுகளைக் கொண்ட இந்த கடற்கரை, கோடை விடுமுறைக்கு ஒரு விசித்திரமான அழகைத் தரும். **அதிரப்பள்ளி நீர்வீழ்ச்சி** “இந்தியாவின் நயாகரா” என்று அழைக்கப்படும் இந்த அருவியின் சாரல் கோடை வெப்பத்தை மறக்கச் செய்யும்

## வேலைவாய்ப்பு கார்னர்

### கடற்படையில் இசைக் கலைஞர்களுக்கு வேலை!

இந்திய கடற்படையின் இசைப்பிரிவில் அக்னிவீர் திட்டத்தின் 02/2026 (ஜூலை 26) பிரிவின் கீழ் தகுதியானவர்களை தேர்வு செய்வதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

திட்டத்தின் பெயர்: Agniveer (MR) (Musician)-02/2026

சம்பளம்: முதலாம் ஆண்டு மாதம் ரூ.30,000, இரண்டாம் ஆண்டு மாதம் ரூ.33,000, மூன்றாம் ஆண்டு மாதம் ரூ.36,500, நான்காம் ஆண்டு மாதம் ரூ.40,000

தகுதி: பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் கர்நாட்டிக், இந்துஸ்தானி போன்ற இந்திய இசையில் முறையான பயிற்சி பெற்று ஏதாவதொரு இசைக்கருவியை சிறப்பாக வாசிக்க தெரிந்திருக்க வேண்டும் அல்லது மேற்கத்திய இசை பிரிவில் முறையான இசைப் பயிற்சி பெற்று, ஏதாவதொரு இசைக்கருவியை நன்றாக வாசிக்க தெரிந்திருக்க வேண்டும்.

வயதுவரம்பு: 1.7.2004 – க்கும் 31.12.2008– க்கும் இடைப்பட்ட தேதியில் பிறந்திருக்க வேண்டும்.

தேர்வு செய்யப்படும் முறை: கடற்படையால் நடத்தப்படும் எழுத்துத் தேர்வு, உடற்தகுதித் தேர்வு, உடற்திறன் தேர்வு, மருத்துவத்தகுதி மற்றும் இசைத்திறன் தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

எழுத்துத் தேர்வில் ஆங்கிலம், கணிதம், அறிவியல், பொது அறிவு பாடங்களிலிருந்து கொள்குறி வகை கேள்விகள் கேட்கப்படும். எழுத்துத் தேர்வு மற்றும் இதர தேர்வுகள் ஜூன்/ஜூலை மாதம் 2026-ல் நடை பெறும். இது பற்றிய முழு விபரம் அட்மிட் கார்டு மூலம் தகுதியானவர்களுக்கு தெரிவிக்கப்படும்.

பணிக்கு தேர்வு செய்யப்படுபவர்கள் 4 ஆண்டுகள் இந்திய கடற்படையில் பணிபுரிய அனுமதிக்கப்படுவர். எழுத்துத் தேர்வுக்குரிய அட்மிட் கார்டை இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பத்தில் ஒட்டப்படும் கலர் புகைப் படமானது சமீபத்தில் எடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

விண்ணப்பக் கட்டணம்: ரூ.60. கட்டணத்தை ஆன்லைன் முறையில் செலுத்த வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை: www.joinindiannavy.gov.in என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். ஆன்லைனில் விண்ணப்பித்தவுடன் அதனை பிரிண்ட் அவுட் எடுத்து தங்களது கைவசம் வைத்துக் கொள்ளவும். ஆன்லனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 26.4.2026

## விருதுநகர் பட்டாசு ஆலை வெடி விபத்தில் உயிரிழந்தவர் உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைப்பு



**விருதுநகர், ஏப். 23:**

விருதுநகர் அருகே கட்டனார்பட்டியில் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 25 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். அவர்களது உடல்கள் விருதுநகர் அரசு மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா ரூ.20 லட்சம் வழங்கக் கோரி உடல்களை வாங்க மறுத்து உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, மாவட்ட ஆட்சியர் சுகபுத்ரா தலைமையில் பேச்சுவார்த்தை நடந்தது. பின்னர் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு அரசு நிவாரணத் தொகை தலா ரூ.5.50 லட்சத்தை மாவட்ட ஆட்சியர் சுகபுத்ரா இரவே வழங்கினார்.

அதைத் தொடர்ந்து 10 பேரின் உடல்களை உறவினர்கள் பெற்றுச்சென்றனர். மேலும், அடையாளம் காணப்படாமலிருந்த ஓர் உடல் நேற்று அடையாளம் காணப்பட்டது.


அதன்படி உயிரிழந்தவர் சேர்வைக்காரன்பட்டியைச் சேர்ந்த முத்து (50) என்பது தெரியவந்தது. மேலும் எஞ்சிய 15 பேரின் உடல்களும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

## என்டிஆர் கூட தனது கலை பயணத்தை இங்கு தான் தொடங்கினார்: சந்திரபாபு நாயுடு கருத்து

**சென்னை, ஏப்.23:**

தமிழகத்தில் தான் என்டிஆர் கூட தனது கலை பயணத்தை இங்குதான் தொடங்கினார்” என ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

இது தொடர்பாக சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் கூறியதாவது: தமிழக மக்களின் எதிர்காலத்தை பற்றி நினைவுபடுத்தவே நான் இன்று இங்கு வந்துள்ளேன். தமிழகம் திராவிட கலாசாரத்தின் தொட்டில். நாம் அனைவரும் திராவிடர்கள். வரலாற்று ரீதியாக பார்த்தால், ஆங்கிலேயர் காலத்தில் நாம் அனைவரும் ஒருங்கிணைந்த மாகாணமாக இருந்தோம்.



சென்னை தான் அதன் தலைமையகமாக இருந்தது. என்டிஆர் கூட தனது கலை பயணத்தை இங்குதான் தொடங்கினார். இன்றைக்கு ஹைதராபாத் மற்றும் பெங்களூரு விமான நிலையங்கள் சென்னை விமான நிலையத்தை விட வேகமாக முன்னேறிவிட்டன. ஆந்திராவில் கள்ளச்சாராயம் என்ற பேச்சே இல்லை.

ஆனால், தமிழகத்தில் உள்ள நகரங்களின் உட்கட்டமைப்புகள் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. அதே பழைய சாலைகள். பலத்த மழை பெய்தால் வெள்ள அபாயம். சட்டம் - ஒழுங்கு சீர் கெட்டுள்ளது. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 59 சதவீதம் அதிகரித்துள்ளது. பட்டியலின மக்களுக்கு எதிரான குற்றங்கள் 39 சதவீதமாக உயர்ந்துள்ளது.

எதிர்பார்த்த எந்த முன்னேற்றமும் தமிழகத்தில் காணப்படவில்லை. ஐடி துறையில் ஹைதராபாத், பெங்களூரு போன்றவை எல்லைகளை தாண்டி சென்றுவிட்டன. சென்னையைப் பற்றி யாரும் பேசுவதில்லை. உலகளாவிய நிறுவனங்களில் தலைமை செயல் அதிகாரிகளாக இருப்பவர்கள் தமிழர்கள். ஆனால், அவர்களின் திறமைகள் தமிழகத்துக்கு பயன்படுவதில்லை.

எனவே, உங்களுக்கான அதிகாரமளித்தல், வேலைவாய்ப்பு, பிரகாசமான எதிர்காலத்தை தேசிய ஜனநாயக கூட்டணி நிச்சயம் வழங்கும். இரட்டை இன்ஜின் அரசு எப்படி செயல்படும் என்பதை நான் பார்த்திருக்கிறேன். இப்போது கூகுள் நிறுவனத்தின் 15 பில்லியன் அமெரிக்க டாலர்கள் முதலீட்டை நாங்கள் பெற்றிருக்கிறோம் என்றார்.

## ஒசூர்: தேர்தலில் வாக்களிக்க பெங்களூருவிலிருந்து காரில் திரும்பியபோது விபத்து; 3 இளைஞர்கள் உயிரிழப்பு

**ஓசூர், ஏப்.23:**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே சானமாவு வனப்பகுதியில் இன்று அதிகாலை நிகழ்ந்த கோர விபத்தில், பெங்களூரில் இருந்து தேர்தலில் வாக்களிக்க ஊர் சென்றுகொண்டிருந்த இளைஞர்கள் 3 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.



கர்நாடக மாநிலம் பெங்களூரில் வீரமணி (25) என்பவர் சிப்ஸ் கடை நடத்தி வந்தார். அவருடன் அதே பகுதியில் உள்ள சிப்ஸ் கடைகளில் வேலை செய்து வந்த பிரதீப் மற்றும் மாரி, சதீஷ் குமார் ஆகியோர் தமிழகத்தில் நடைபெற்ற வரும் சட்டமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக தங்களது சொந்த ஊரான பென்னாகரத்திற்கு காரில் புறப்பட்டுள்ளனர்.

இன்று அதிகாலை சுமார் 4 மணி அளவில், ஓசூர் அருகே உள்ள சானமாவு வனப்பகுதி வழியாக கார் சென்று கொண்டிருந்தது. அப்போது உடுமலைபேட்டையில் இருந்து ஓசூர் நோக்கி வந்த தனியார் சொகுசு பேருந்தும், காரும் எதிர்பாராதவிதமாக நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த பயங்கர மோதலில் கார் அப்பளம் போல் நொறுங்கியது. காரில் பயணம் செய்த வீரமணி (25), பிரதீப், மாரி ஆகிய மூன்று இளைஞர்களும் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர். இவர்களுடன் பயணித்த சதீஷ் குமார் (25) என்பவர் பலத்த காயங்களுடன் உயிர் தப்பினார். அவர் தற்போது சிகிச்சைக்காக ஓசூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த உத்தனப் பள்ளி போலீஸார், உயிரிழந்தவர்களின் உடல்களைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஓசூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்து விபத்துக்கான காரணம் குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஏப்., மே, ஜூன் மாதங்களில் பட்டாசு உற்பத்திக்கு தடை விதிக்கலாமே? - நீதிபதிகள் யோசனை

**மதுரை, ஏப்.23:**

சிவகாசியை சேர்ந்த சமுத்திரவள்ளி உள்ளிட்டோர் 2014 பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்த கணவரின் மரணத்துக்கு இழப்பீடு கோரி வழக்கை தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுவை விசாரித்த நீதிபதி புகழேந்தி, விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசுப்பணி, கணவரை இழந்தோருக்கான ஓய்வூதியம், வீடு உள்ளிட்ட மறுவாழ்வு பணிகளை அமல்படுத்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு உத்தரவுகளை வழங்கியிருந்தார். இந்த உத்தரவை எதிர்த்து உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் அரசுத் தரப்பில் மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அரசுத் தரப்பில், “விருதுநகர் வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களை அடக்கம் செய்ய ரூ.50 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது” என தெரிவிக்கப்பட்டது. அதற்கு நீதிபதிகள், “தொழிலாளர்களுக்கு ரூ.25 லட்சம் முதல் 30 லட்சம் ரூபாய் காப்பீடு செய்த பின்னரே அவர்கள் அப்பணியில் ஈடுபடுத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். விபத்துகள் நிகழ்வது துரதிஷ்டவசமானது. பெண்களே பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர்” என கருத்து தெரிவித்தனர். தொடர்ந்து, “கோடை காலங்களில் பட்டாசு உற்பத்தியை நிறுத்தி வைப்பது தொடர்பாக அரசு முடிவெடுக்க வேண்டும்” என குறிப்பிட்டு, வழக்கை ஜூன் 8-ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

## மீனாட்சியம்மன் கோயில் குடமுழுக்கில் தமிழ் மொழிக்கு அதிக முக்கியத்துவம் வழங்க உயர் நீதிமன்றம் உத்தரவு

**மதுரை, ஏப்.23:**

கரூரைச் சேர்ந்த வழக்கறிஞர் தமிழ் ராஜேந்திரன், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: தமிழகத்தில் கோயில் குடமுழுக்குகளில் மந்திரங்கள் ஓதும் போத சமஸ்கிருத மந்திரங்களுக்கு இணையாக தமிழ் மந்திரங்களையும் ஓத வேண்டும் என பல்வேறு வழக்குகளில் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இருப்பினும் கோயில்களில் குடமுழுக்கின் போது சமஸ்கிருத மந்திரங்கள் மட்டும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் அனைத்து கோயில்களிலும் குடமுழுக்கில் சமஸ்கிருதத்துக்கு இணையாக தமிழ் மந்திரங்களை பயன்படுத்துவதற்காக குடமுழுக்கு தொடர்பாக அறநிலையத் துறை அமைத்துள்ள உயர்மட்டக் குழுவின் அறிக்கையை அமல்படுத்த உத்தரவிட வேண்டும். அனைத்து கோயில்களில் குடமுழுக்கின்போது சமஸ்கிருத மந்திரத்துக்கு இணையாக தமிழ் மந்திரங்களையும் பயன்படுத்த உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது. இந்த மனுவை நீதிபதி பரதசக்கரவர்த்தி விசாரித்தார். மனுதாரர் சார்பில் வழக்கறிஞர்கள் எம். கே.சுரேஷ், திலக கார்த்திகா வாதிட்டனர். பின்னர் நீதிபதி, ‘மதுரை சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மாநகரம். மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் பொற்றாமரை குளத்தில் தான் திருக்குறள் அரங்கேற்றப்பட்டதாக வரலாறு கூறுகிறது. பொற்றாமரை குளத்துக்கு தமிழ் இருக்கை என்றும் பெயர் உள்ளது. இது தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். இந்த உத்தரவு நகல் தமிழிலும் வழங்கப்படும். விசாரணை ஜூன் மாதத்துக்கு ஒத்திவைக்கப்படுகிறது’ என்று நீதிபதி உத்தரவில் கூறியுள்ளார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu” என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# திமுகவினர் கூப்பன் விநியோக வழக்குப் பதிவு: உயர்நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் தகவல்



**சென்னை, ஏப்.23:**

திமுகவினர் ரூ.8,000-க்கான கூப்பன் விநியோகித்தது தொடர்பான புகார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்தது.

அதிமுக வழக்குரைஞர் அணி துணைச் செயலர் ஆர்.ஏ.எஸ். செந்தில்வேல் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், தேர்தலையொட்டி திமுக வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் இல்லத்தரசி திட்டத்தின் கீழ் ரூ.8,000-க்கான கூப்பன்கள் வழங்கப்படும்.

இந்த கூப்பன்கள் மூலம் விருப்பப்பட்ட வீட்டு உபயோகப் பொருள்களை வாங்கிக் கொள்ளலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

இந்த ரூ.8,000-க்கான கூப்பன்களை திமுக வேட்பாளர்கள் மற்றும் கட்சியினர் வாக்காளர்களுக்கு விநியோகித்து வருகின்றனர். கோவை தெற்கு, பாகூர், பாலக்கோடு, கும்பகோணம் மற்றும் அண்ணா நகர் உள்பட பல்வேறு தொகுதிகளில் முதல்வரின் புகைப்படம், வரிசை எண்ணுடன் இந்த கூப்பன்கள் விநியோகிக்கப்படுகிறது. தேர்தலில் போட்டியிடும் கட்சி ஆட்சிக்கு வந்தால் மட்டுமே இத்தகைய கூப்பன்களை வழங்க முடியும்.

ஆனால், ஆட்சிக்கு வருவதற்கு முன்பே இதுபோல கூப்பன்களை விநியோகிப்பது மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி குற்றமாகும்.

இது குறித்து தேர்தல் ஆணையத்து மனு அளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, இந்த கூப்பன்களை பறிமுதல் செய்து, கூப்பன்கள் விநியோகித்த திமுகவினர் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் எனக் கோரியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, தேர்தல் ஆணையம் தரப்பில், இந்த கூப்பன் விவகாரம் தொடர்பாக புகார் மீது நடவடிக்கை எடுத்து வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதைப் பதிவு செய்துகொண்ட நீதிபதிகள் வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டனர்.

## க்ரைம் கார்னர்

### செய்யாறு அருகே 16 வயது சிறுமி கூட்டு பாலியல் வன்கொடுமை?

**திருவண்ணாமலை, ஏப்.23:**

செய்யாறு அருகே 16 வயது சிறுமி கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாக கூறப்படும் சம்பவத்தால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 16 வயது சிறுமி, கடந்த 19-ம் தேதி திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அடுத்த பிரம்மதேசம் அருகே உள்ள தனது பாட்டி வீட்டுக்கு வந்துள்ளார்.

அப்போது, சிறுமி தனியாக அவரது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, அவ்வழியாக இருசக்கர வாகனத்தில் வந்த சிலர், சிறுமியை கூட்டாக பாலியல் துன்புறுத்தல் செய்ததாக கூறப்படுகிறது. இதனால், உடல்நலம் பாதித்த சிறுமி காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றுள்ளார். மருத்துவர்கள் பரிசோதனையின் போது அவர் பாலியல் துன்புறுத்தலால் பாதிக்கப்பட்டதாக தெரிவித்ததாக கூறப்படுகிறது. இதுகுறித்த தகவலை மருத்துவர்கள், காஞ்சிபுரம் போலீஸாருக்கு தெரிவித்துள்ளனர். பின்னர் சம்பவம் நடந்த திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில், நேற்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுதாகர் தலைமையிலான போலீஸார், சம்பவ இடத்தில் தீவிர விசாரணை நடத்தினர். மேலும், இதுதொடர்பாக 3 பேரை பிடித்து விசாரித்து வருகின்றனர். இதனிடையே இந்த சம்பவத்துக்கு கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

### பெட்ரோல் குண்டு வீசி 7 பேர் கொல்லப்பட்ட வழக்கில் குற்றவாளிகள் 9 பேருக்கு தலா 7 ஆயுள் சிறை

**கரூர், ஏப்.23:**

மதுரை அவனியாபுரத்தில் வாகனங்கள் மீது பெட்ரோல் குண்டு வீசி 7 பேர் கொல்லப்பட்ட வழக்கில் 9 பேருக்கு வாழ்நாள் சிறை தண்டனையும், தலா ரூ.27.90 லட்சம் அபராதமும் விதித்து கரூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

மதுரை அவனியாபுரத்தில் 2012-ம் ஆண்டு தேவர் ஜெயந்தி விழாவில் பங்கேற்றுவிட்டு திரும்பிய வாகனங்கள் மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்டதில் 7 பேர் உயிரிழந்தனர். 11 பேர் காயமடைந்தனர்.

இதுதொடர்பாக மதுரை மேல அனுப்பானடியைச் சேர்ந்த ராமர் பாண்டி (36), மதுரை மாவட்டம் சிந்தாமணியைச் சேர்ந்த மணிகண்டன் (37), கார்த்திக் (36), முத்துவிஜி (22), சந்திரசேகர் (31), சோனையா (31), நாகராஜ் (31), முத்துக்கருப்பன் (31), மோகன் (38), விக்னேஷ் (33), சந்தோஷ் (33) ஆகிய 11 பேரை போலீஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இவ்வழக்கில் முத்து விஜி கொல்லப்பட்ட நிலையில், குற்றவாளிகளின் உயிருக்கு ஆபத்து இருப்பதாகக் கூறியதால் இவ்வழக்கு கரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்துக்கு 2017-ம் ஆண்டு மாற்றப்பட்டது. மேலும், இவ்வழக்கில் கரூர் நீதிமன்றத்தில் ஆஜராகிவிட்டு திரும்பிய ராமர் பாண்டி அரவக்குறிச்சி அருகே 2024-ம் ஆண்டு கொல்லப்பட்டார்.

கரூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நடந்து வந்த இந்த வழக்கில், 69 சாட்சிகளிடம் விசாரணை நடத்தப்பட்டு, உயிரிழந்த 2 பேர் தவிர மீதியுள்ள 9 பேரும் குற்றவாளிகள் என்று மார்ச் 23-ம் தேதி நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதன்பிறகு தண்டனை விவரம் அறிவிப்பு ஏப்.6, ஏப்.15, ஏப்.21 (நேற்று) ஆகிய தேதிகளுக்கு 3 முறை தள்ளிவைக்கப்பட்டது. இந்நிலையில், இந்த வழக்கில் மாவட்ட நீதிபதி கே.ஹெச். இளவழகன் நேற்று தீர்ப்பு வழங்கினார்.

**சலுகைகள் கிடையாது**

அதில், குற்றவாளிகள் 9 பேருக்கும் தலா 7 ஆயுள் சிறை தண்டனை, கொலை முயற்சி வழக்கில் 10 ஆண்டுகள், பொதுச் சொத்துக்கு சேதம் விளைவித்ததாக (பிபிடிஎல்) இரு பிரிவுகளில் 5 மற்றும் 4 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்ததுடன், தண்டனையில் எவ்வித சலுகைகளும் வழங்க முடியாது என்றும் தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும் அதே நேரத்தில் வாழ்நாள் முழுவதும் சிறையில் இருக்கவும் உத்தரவிட்டார்.

மேலும், ஒவ்வொருவருக்கும் தலா ரூ.27.90 லட்சம் அபராதம் விதித்து உத்தரவிட்டார். இதையடுத்து, குற்றவாளிகள் 9 பேரும் திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டன

## விளையாட்டு செய்திகள்

### அல்காரஸ், சபலெங்காவுக்கு லாரியஸ் விருது

**மாட்ரிட், ஏப்.23:**

விளையாட்டின் உயர்ந்த விருதான லாரியஸ் விருது வழங்கும் விழா நேற்று ஸ்பெயினின் மாட்ரிட் நகரில் நடைபெற்றது. இதில் சிறந்த வீரர் விருது ஸ்பெயின் டென்னிஸ் வீரர் கார்லோஸ் அல்காரஸுக்கும் சிறந்த வீராங்கனை விருது பெலாரஸின் அரினா சபலெங்காவுக்கும் வழங்கப்பட்டது. பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் (பிஎஸ்ஜி) கால்பந்து அணி ஆண்டின் சிறந்த அணியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அல்காரஸ் கடந்த ஆண்டு பிரெஞ்சு ஓபன், அமெரிக்க ஓபன் பட்டங்களையும், இந்த ஆண்டு ஜனவரியில் ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தையும் வென்றிருந்தார். உலகின் முன்னணி வீராங்கனையான சபலெங்கா, கடந்த ஆண்டு அமெரிக்க ஓபன் பட்டத்தை வென்றிருந்தார்.

பிஎஸ்ஜி அணி 2025-ல் முதன்முறையாக சாம்பியன்ஸ் லீக் பட்டத்தை வென்று சாதனை படைத்திருந்தது. இந்த மாதம் மாஸ்டர்ஸ் பட்டத்தைத் தக்கவைத்துக் கொண்ட கோல்ஃப் வீரர் ரோரி மெக்ல்ராய் 'ஆண்டின் சிறந்த மீண்டெழுந்த வீரர்' விருதைப் பெற்றார். பார்சிலோனா மற்றும் ஸ்பெயின் அணியின் நட்சத்திரமான 18 வயதான லமைன்யமால், ஆண்டின் சிறந்த இளம் விளையாட்டு வீரருக்கான விருதை வென்றார். ஃபார்முலா ஒன் சாம்பியன் லாண்டோ நோரிஸ் 'ஆண்டின் சிறந்த சாதனையாளர்' விருதைப் பெற்றார். ஜெர்மன் கால்பந்து ஜாம்பவான் டோனி க்ரூஸ் விளையாட்டு உத்வேக விருதையும் ஓய்வு பெற்ற ஜிம்னாஸ்டிக்ஸ் வீராங்கனை நாடியா கொமானெசி வாழ்நாள் சாதனையாளர் விருதையும் பெற்றனர்.

உலக ஆக்ஷன் விளையாட்டு வீரர் விருது அமெரிக்க ஸ்னோபோர்டு வீராங்கனை குளோயி கிம்முக்கு வழங்கப்பட்டது. பிரேசிலின் கேப்ரியல் அராயுஜோ மாற்றுத்திறனாளிகளுக்கான ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த விருது வழங்கும் விழாவை டென்னிஸ் ஜாம்பவான் நோவக் ஜோகோவிச் மற்றும் ஃப்ரீஸ்டைல் ஸ்கீயர் எய்லீன்கு ஆகியோர் தொகுத்து வழங்கினர்.

### டெல்லி அணியை பந்தாடிய அபிஷேக் சர்மா

**ஹைதராபாத், ஏப்.23:**

நடப்பு சீசனில் 7 இன்னிங்ஸில் 323 ரன்களை அவர் விளாசியுள்ளார். இதன் மூலம் இந்த சீசனில் அதிக ரன்கள் எடுத்த பேட்ஸ்மேன்களில் அவர் முதலிடத்தில் உள்ளார். இதில் இரண்டு அரைசதம் மற்றும் சதம் விளாசி உள்ளார். இது ஐபிஎல் கிரிக்கெட்டில் அவர் விளாசும் இரண்டாவது சதம். டி20 கிரிக்கெட்டில் 9-வது சதமாக அமைந்துள்ளது. டெல்லி கேப்பிடல்ஸ் உடனான ஆட்டத்தில் 68 பந்துகளில் 135 ரன்களை அவர் எடுத்திருந்தார். இதில் 10 பவுண்டரி மற்றும் 10 சிக்ஸர்கள் அடங்கும். அவரது ஸ்ட்ரைக் ரேட் 198. இந்த ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 47 ரன்களில் வெற்றி பெற்றது. "வழக்கம் போலவே பவர்பிளே ஓவர்களில் அதிரடியாக ஆடி ரன் சேர்க்க வேண்டும் என திட்டமிட்டேன். எனது இந்த ஆட்டத்துக்கு காரணம் அணியின் பயிற்சியாளர், கேப்டன் எனக்கு ஆதரவு அளித்ததால் சாத்தியமானது. அதன் மூலம் நான் எனது இயல்பான ஆட்டத்தை விளையாட முடிகிறது. 'L' கொண்டாட்டம் வழக்கமானதுதான். மைதானத்தில் உள்ள பார்வையாளர்கள், இந்த தொடர் மற்றும் ஒவ்வொரு ஆட்டத்திலும் எங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் ரசிகர்களுக்கு நான் தெரிவிக்கும் அன்பின் வெளிப்பாடுதான் இந்த 'L' வடிவ கொண்டாட்டத்துக்கு காரணம். பெற்றோர் முன்பு விளையாடுவது எப்போதும் சிறப்பானது" என ஆட்ட நாயகன் விருதை வென்ற அபிஷேக் சர்மா தெரிவித்தார்.

# சென்னையில் இருந்து 1.88 லட்சம் பேர் சிறப்பு பஸ்களில் சொந்த ஊர்களுக்கு பயணம்



**சென்னை, ஏப்.23:**

தமிழகத்தில் சட்டசபை தேர்தல் இன்று நடைபெறுகிறது. இதையொட்டி அரசு போக்குவரத்து கழகம் சார்பில் சிறப்பு பஸ்கள் நேற்று முதல் இயக்கப்பட்டன.

சென்னையில் பல்வேறு பகுதியில் தங்கி தொழில் மற்றும் வேலை செய்து வரும் மக்கள் ஓட்டுப்போட சொந்த ஊர்களுக்கு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நேற்றிரவு சென்னையில் இருந்து 1,88,705 பேர் சிறப்பு பஸ்களில் சொந்த ஊர்களுக்கு பயணம் செய்துள்ளனர். சென்னையில் இருந்து பல்வேறு ஊர்களுக்கு நேற்று மட்டும் 3,431 பஸ்கள் இயக்கப்பட்டுள்ளன. இன்று 3,570 சிறப்பு பஸ்களும் நாளை மதியம் ஒரு மணி வரை 600 சிறப்பு பஸ்களும் சென்னையில் இருந்து பல்வேறு நகரங்களுக்கு இயக்கப்படுகிறது.

கோயம்பேடு, கிளாம்பாக்கம், மாதவரம் ஆகிய பஸ் நிலையங்களில் இருந்து இந்த சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன.

நாளை சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில் சென்னை உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் இருந்து சொந்த ஊருக்கு மக்கள் படையெடுத்துள்ளனர்.

சென்னையில் இருந்து தென்மாவட்டங்களுக்கு செல்லும் ஆம்னி பஸ்களில் கூடுதல் கட்டணம் வசூலிப்பதால் மக்கள் அவதி அடைந்துள்ளனர். சென்னையில் இருந்து தென் மாவட்டங்களுக்கு செல்ல இரண்டு சிறப்பு ரெயிலும், கோவைக்கு ஒரு சிறப்பு ரெயிலும் இன்று கூடுதலாக இயக்கப்படுகிறது.

# தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி ஏப்.23-ல் தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் விடுமுறை



**சென்னை, ஏப்.23:**

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும் ஏப்.23-ம் தேதி அனைத்து தொழிலாளர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்க வேண்டும் என்று தமிழக தொழிலகப் பாதுகாப்பு, சுகாதார இயக்குநர் செ.ஆனந்த் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்.23-ம் தேதி (வியாழன்) நடைபெற உள்ளது. இதையொட்டி, மாற்று முறை ஆவணங்கள் சட்டத்தின்படி அன்றைய தினம் தமிழக அரசு பொது விடுமுறை அறிவித்துள்ளது.

இதைத் தொடர்ந்து, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்கீழ், தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி வெளியிட்டுள்ள அறிவுரைகளின்படி, தமிழகம் முழுவதும் உள்ள தொழிற்சாலைகள், கட்டுமான நிறுவனங்கள் மற்றும் அனைத்து பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றும் தினக்கூலி தொழிலாளர்கள், தற்காலிக பணியாளர்கள், ஒப்பந்த தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து பணியாளர்களும் வாக்களிக்க வசதியாக தேர்தல் நாளில் அவர்களுக்கு சம்பளத்துடன் விடுமுறை வழங்குவது கட்டாயம் ஆகும்.

எனவே, அனைத்து தொழிற்சாலைகள், கட்டுமான நிறுவனங்களும் வாக்குப்பதிவு நாளான ஏப்.23-ம் தேதி அனைத்து தொழிலாளர்களுக்கும் சம்பளத்துடன் விடுமுறை அளிக்க வேண்டும்.

அவ்வாறு விடுமுறை அளிக்கத் தவறும் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். விடுமுறை அளிக்காத நிறுவனங்கள் குறித்து புகார் செய்ய வசதியாக தொழிலகப் பாதுகாப்பு, சுகாதார இயக்ககம் சார்பில் மாநில அளவிலான கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக புகார் தெரிவிக்க கட்டுப்பாட்டு அலுவலர்களை பொதுமக்கள், தொழிலாளர்கள் தொடர்பு கொள்ளலாம். அலுவலர்களின் பெயர், தொடர்பு எண் விவரம்: தொழிலகப் பாதுகாப்பு, சுகாதாரத் துறை இணை இயக்குநர்கள் எம்.வி.கார்த்திகேயன் (திருவொற்றியூர்) - 9444221011, எஸ்.கமலக்கண்ணன் (சென்னை) - 9884675712, நிர்வாக அலுவலர் எஸ்.சூரியா (சென்னை) - 9884470526, துணை இயக்குநர் த.மணிசங்கர் (காஞ்சிபுரம்) - 9940468249.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்ற குழுக்களின் தலைவர்களாக தம்பிதுரை, திருச்சி சிவா மறுநியமனம்



**சென்னை, ஏப்.23:**

நாடாளுமன்ற குழுக்களின் தலைவர்களாக அதிமுக எம்.பி. தம்பிதுரை, திமுக எம்.பி. திருச்சி சிவா ஆகியோரை மாநிலங்களவைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் மீண்டும் நியமித்துள்ளார்.

இது தொடர்பாக மாநிலங்களவைச் செயலகம் வெளியிட்ட அதிகாரபூர்வ அறிவிக்கையில், 'அரசு உத்தரவாதங்கள் குழுவின் உறுப்பினராக அதிமுக எம்.பி. தம்பிதுரையை மாநிலங்களவைத் தலைவர் நியமித்துள்ளார்.

அத்துடன் அந்தக் குழுவின் தலைவராக தம்பிதுரை மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேபோல துறை சார்ந்த நாடாளுமன்ற தொழில்துறை நிலைக் குழுவின் உறுப்பினராக திமுக எம்.பி. திருச்சி சிவாவை மாநிலங்களவைத் தலைவர் நியமித்துள்ளார். அந்தக் குழுவின் தலைவராக திருச்சி சிவா மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தம்பிதுரை, திருச்சி சிவா ஆகியோரின் மாநிலங்களவை எம்.பி. பதவிக் காலம் கடந்த ஏப்.2-ஆம் தேதியுடன் நிறைவடைந்த நிலையில், அவர்கள் மீண்டும் அந்த அவையின் எம்.பி.க்களாக தேர்வு செய்யப்பட்டனர்.

## வணிகச் செய்திகள்

### தங்கம் விலை பவுனுக்கு ரூ.400 குறைவு: இன்றைய சந்தை நிலவரம் என்ன?

சென்னை: 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை சென்னையில் இன்று பவுனுக்கு ரூ.400 என விலை குறைந்தது. அதே நேரத்தில் இன்று வெள்ளி விலையில் மாற்றம் ஏதுமில்லை.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை முதலீடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது.

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான போர் தங்கம் விலை மீது தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இந்நிலையில், இரு நாடுகளுக்கும் இடையேயான போர் நிறுத்தம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பகிர்ந்துள்ளார். இந்நிலையில், தங்கம் விலை நேற்று குறைந்துள்ளது. சென்னையில் இன்று காலை வர்த்தகம் தொடங்கியதும் 22 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.50 மற்றும் பவுனுக்கு ரூ.400 என விலை குறைந்தது. இதனால் ஒரு கிராம் தங்கம் ரூ.14,250-க்கும், ஒரு பவுன் ரூ.1,14,000-க்கும் விற்பனை ஆகிறது. 24 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.432 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,24,368-க்கும், 18 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.408 குறைந்து, ஒரு பவுன் ரூ.94,432-க்கும் விற்பனை ஆகிறது. வெள்ளி விலை இன்று மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.275, ஒரு கிலோ ரூ.2,75,000-க்கும் விற்பனை ஆகிறது.

# திருச்சூரில் பட்டாசு வெடிவிபத்தில் 13 பேர் பலி: மிகுந்த வேதனையை அளிக்கிறது - பினராயி விஜயன்



திருவனந்தபுரம், ஏப்.23:

கேரளம் மாநிலம் திருச்சூரில் பூரம் திருவிழா ஏற்பாடுகளுக்காக வைத்திருந்த பட்டாசுகள் வெடித்த விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர். 40 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

பிரசித்திபெற்ற திருச்சூர் பூரம் விழா ஏப்.26-ம் தேதி தொடங்கும் நிலையில் முண்டத்திகோடு பகுதியில் பட்டாசுகள் வைக்கப்பட்டன.

கொட்டகை அமைத்து பாதுகாக்கப்பட்டு வந்த பட்டாசுகள் கடும் வெப்பத்தால் திடீரென வெடித்ததாக முதற்கட்ட தகவல் வெளியாகி உள்ளது.

இந்நிலையில், கேரளாவின் திருச்சூரில் பட்டாசு செமிப்புக் கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதல்-மந்திரி பினராயி விஜயன் இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில்,

திருச்சூரில் பட்டாசு சேமிப்புக் கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்து மிகுந்த வேதனையை அளிக்கிறது.

காயமடைந்தவர்களுக்கு உரிய நேரத்தில் மருத்துவ சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்வதற்காக, முழு அரசு இயந்திரமும் களமிறக்கப்பட்டு, போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தேவைப்பட்டால், மாநிலத்திற்கு வெளியில் இருந்து வழங்கப்படும் சிறப்பு சிகிச்சை உட்பட, தேவையான அனைத்து சிகிச்சைகளும் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும். காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பிரிவு, சுகாதாரம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைகளின் முயற்சிகளை உன்னிப்பாகக் கண்காணித்து ஒருங்கிணைக்க ஒரு பிரத்யேக அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## கேரளாவில் வெடி விபத்து: 13 பேர் பலி - பிரதமர் மோடி இரங்கல்



புதுடெல்லி, ஏப்.23:

கேரள மாநிலம் திருச்சூர் அருகே பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 13 பேர் பலியாகி உள்ளனர். 40க்கும் மேற்பட்டோர் சிக்கியதாக தகவல் வெளியாகி உள்ளது.

சம்பவஇடத்தில்மீட்புப்பணியில்தீயணைப்புத்துறையினர் ஈடுபட்டுள்ளனர். 26ஆம் தேதி நடைபெறும் பூரம் திருவிழாவுக்காக வைக்கப்பட்டிருந்த வெடிகள் வெடித்து விபத்து ஏற்பட்டுள்ளதாக முதற்கட்ட தகவல் வெளியாகி உள்ளது. இந்தநிலையில், திருச்சூர் பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், திருச்சூர் பட்டாசு உற்பத்தி ஆலை விபத்தில் பலர் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வருத்தம் அடைந்தேன். தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்களின் துயரத்தில் நானும் பங்கெடுக்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையட்டும் என அதில் கூறியுள்ளார்.

## கச்சா எண்ணெய் விலை அதிரடி உயர்வு

புதுடெல்லி, ஏப்.23:

மேற்காசியாவில் பதற்ற நிலை நீடித்து வரும் சூழலில், மத்திய பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணை செயலாளர் சுஜாதா சர்மா செய்தியாளர்களிடம் இன்று கூறும்போது, கடந்த ஜனவரியில் கச்சா எண்ணெய் கொண்ட பீப்பாய் ஒன்று 63 அமெரிக்க டாலர் என்ற அளவில் இருந்தது.

இந்த விலை கடந்த மார்ச்சில் அதிகரித்து, பீப்பாய் ஒன்று 113 அமெரிக்க டாலராக அதிகரித்தது. ஏப்ரலில், சராசரியாக 116 அமெரிக்க டாலராக விலை உள்ளது என கூறியுள்ளார். உலக அளவில் திடீர் விலை உயர்வு ஏற்பட்டபோதும், அண்டை நாடுகளுடன் ஒப்பிடும்போது, இந்தியாவில் எரிபொருள் விலை தொடர்ந்து குறைவாகவே பராமரிக்கப்பட்டு வருகிறது என குறிப்பிட்டார். வீட்டுக்கு தேவையான சமையல் கியாஸ் சிலிண்டர் விநியோகத்தில் எந்த பாதிப்பும் இல்லை என்றும், எந்தவொரு விநியோகஸ்தரிடமும் சிலிண்டர் பற்றாக்குறை என்பது இல்லை என்றும் சிலிண்டர் விநியோகம் 93 சதவீதம் என்ற அளவில் திறமையாக கையாளப்பட்டு வருகிறது என்றும் அவர் கூறினார். இதேபோன்று வர்த்தக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விற்பனை அதிகரித்து உள்ளது என்றும் புலம்பெயர் மக்களின் வசதிக்காக 5 கிலோ சிலிண்டர் எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்பட்டு உள்ளது என்றும் கூறினார். பெட்ரோலிய இயற்கை எரிவாயுக்காக புதிதாக 5.68 லட்சம் நுகர்வோர்கள் பதிவு செய்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

# தேர்தல் நடத்தை விதிமீறல்? பிரதமருக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் புகாரை ஆராய தேர்தல் ஆணையம் முடிவு

புதுடெல்லி, ஏப்.23:

மகளிர் இடஒதுக்கீடு அமலாக்க மசோதா தோல்வி குறித்து நாட்டு மக்களுக்கு உரையாற்றியதன் மூலம் தேர்தல் நடத்தைவிதிமுறைகளை மீறியதாக, பிரதமர் மோடிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அளித்த புகார் ஆய்வு செய்யப்படும் என்று தேர்தல் ஆணைய வட்டாரங்கள் செவ்வாய்க்கிழமை தெரிவித்தன.

மக்களவை-பேரவைகளில் 33 சதவீத மகளிர் இடஒதுக்கீட்டை விரைந்து அமலாக்குவதுடன், அதற்கேற்ப மக்களவை இடங்களின் எண்ணிக்கையை அதிகபட்சம் 850 வரை அதிகரிக்கும் வகையில் மத்திய அரசு கொண்டுவந்த அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதா, மக்களவையில் கடந்த ஏப்ரல்17-ஆம் தேதி எதிர்க்கட்சிகளால் தோற்கடிக்கப்பட்டது.


இதைத்தொடர்ந்து, நாட்டு மக்களுக்கு அரசுத் தொலைக்காட்சியில் உரையாற்றிய பிரதமர் மோடி, காங்கிரஸ், திமுக, திரிணமூல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மீது கடும் விமர்சனங்களை முன்வைத்தார். தமிழகம், மேற்கு வங்கத்தில் பேரவைத் தேர்தல் நடைபெறும் நிலையில், அரசு இயந்திரத்தை தனது பிரசாரத்துக்கு பிரதமர் தவறாக பயன்படுத்தியுள்ளதாக எதிர்க்கட்சிகள் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டது.

பிரதமரின் செயல், தேர்தல் நடத்தை விதிமுறைகளின் அப்பட்டமான மீறல் என்று கூறி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலர் எம்.ஏ.பேபி, இந்திய கம்யூனிஸ்ட் மாநிலங்களவை எம்.பி.சந்தோஷ் குமார் உள்ளிட்டோர், தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் எழுதினர். இதுதவிர, சமூக ஆர்வலர்கள், தனிநபர்கள் சுமார் 700 பேர் தேர்தல் ஆணையத்திடம் புகாரளித்துள்ளதாகத் தெரிகிறது.

இந்நிலையில், பிரதமர் மோடிக்கு எதிரான தேர்தல் நடத்தை விதிமீறல் புகார் ஆய்வு செய்யப்படும் என்று தேர்தல் ஆணைய வட்டாரங்கள் செவ்வாய்க்கிழமை தெரிவித்தன.

கேரளம், அஸ்ஸாம், புதுச்சேரியில் ஏற்கெனவே தேர்தல் நிறைவடைந்த நிலையில், தமிழகத்தில் ஒரே கட்டமாக ஏப்ரல் 23-ஆம் தேதியும், மேற்கு வங்கத்தில் இரு கட்டங்களாக ஏப்ரல் 23, 29 ஆகிய தேதிகளிலும் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. மே 4-ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது. அன்றைய நாள் வரை தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோடை நோய்களுக்கு பாராசிட்டமால் கூடாது: பொது சுகாதாரத் துறை



புதுடெல்லி, ஏப்.23:

கோடையின் தாக்கத்தால் வெப்பவாத பாதிப்புக்குள்ளானவர்களின் உடல் வெப்பநிலையைக் குறைக்க பாராசிட்டமால் மருந்தை அளிக்கக் கூடாது என்று பொது சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழகத்தில் கடந்த சில நாள்களாக பல மாவட்டங்களில் 100 டிகிரி வெயில் பதிவாகி வருகிறது. இதன் காரணமாக கோடை கால நோய்கள், வைரஸ் தொற்றுகள் பரவும் சூழல் எழுந்துள்ளது.

மற்றொருபுறம், இணை நோயாளிகள், குழந்தைகள், முதியவர்கள் பகல் வேளைகளில் அவசியமின்றி வெளியே வர வேண்டாம் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

அதேபோன்று வெப்பவாத பாதிப்புகளை (ஹீட் ஸ்ட்ரோக்) எதிர்கொள்ளும் வகையில் மருத்துவமனைகளில் படுக்கை வசதிகளை ஆயத்த நிலையில் வைத்திருக்குமாறு பொது சுகாதாரத்துறை தெரிவித்திருந்தது

இந்நிலையில், வெப்பவாத பாதிப்புக்கு உள்ளாவோரின் உடல் வெப்ப நிலையைக் குறைக்க மருத்துவரின் பரிந்துரையின்றி சிலர் வெவ்வேறு மாத்திரைகளை உட்கொள்வதாகத் தெரிகிறது. இதனால், கடுமையான எதிர்விளைவுகள் ஏற்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொது சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறியதாவது: வெப்ப வாதம் பாதிக்கப்பட்டு எவருக்கேனும் மயக்கம் ஏற்பட்டாலோ, உடல் சோர்வாக காணப்பட்டாலோ நிழல் மற்றும் காற்றோட்டம் உள்ள இடங்களில் ஒருபக்கமாக படுக்க வைப்பது அவசியம். அவர்களை தண்ணீர், இளநீர், மோர் பருகச் செய்து உடல் வெப்ப நிலையை குறைக்கலாம்.

மேலும், நீரில் நனைத்த துணியை உடலில் வைத்து துடைத்து வெப்பத்தைத் தணிக்க வேண்டும். காய்ச்சல் என நினைத்து, ஆஸ்பிரின், பாராசிட்டாமால் மாத்திரை கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். ஒருவேளை கொடுத்தால், காய்ச்சல் குறைந்தாலும், எதிர்விளைவுகளை ஏற்படுத்தும். சிலருக்கு உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடும்.

எனவே, மருத்துவரின் பரிந்துரையின்படி மட்டுமே கோடைகாலத்தில் மருந்து, மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

# நிகழாண்டு இந்திய பொருளாதாரம் 6.4% வளர்ச்சி: ஐ.நா. கணிப்பு



புதுடெல்லி, ஏப்.23:

நிகழாண்டு இந்திய பொருளாதாரம் 6.4 சதவீதம் வளர்ச்சியடையும் என்று ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக ஐ.நா.வின் ஆசிய, பசிபிக் பொருளாதார மற்றும் சமூக ஆணையம் திங்கள்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கடந்த 2024-இல் தெற்கு மற்றும் தென்கிழக்காசிய பொருளாதார வளர்ச்சி 5.2 சதவீதமாக இருந்த நிலையில், அது 2025-இல் 5.4 சதவீதமாக வளர்ச்சியடைந்தது. இதற்கு ஆசிய கண்டத்தில் உள்ள இந்தியாவின் வலுவான வளர்ச்சி முக்கிய காரணமாகும். வலுவான நுகர்வு, சரக்கு மற்றும் சேவை வரிவிகிதம் குறைப்பு உள்ளிட்ட காரணங்களால் 2025-இல் இந்திய பொருளாதார வளர்ச்சி 7.4 சதவீதம் வரை நகர்ந்தது. 2025-ஆம் ஆண்டு ஆகஸ்டில் இந்தியப் பொருள்கள் மீது அமெரிக்கா 50 சதவீத வரி விதித்ததைத் தொடர்ந்து, இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கான ஏற்றுமதி சரிந்தது. இதனால் அப்போது இந்தியாவில் பொருளாதார நடவடிக்கைகள் மிதமானது.

எனினும் இந்தியாவின் வளர்ச்சிக்கு சேவைகள் துறை முக்கியக் காரணமாக அமைந்தது. இந்திய பொருளாதார வளர்ச்சி நிகழாண்டு 6.4 சதவீதமாகவும், அடுத்த ஆண்டு 6.6 சதவீதமாகவும் இருக்கும். நிகழாண்டு இந்தியாவில் பணவீக்கம் (விலைவாசி உயர்வு விகிதம்) 4.4 சதவீதமாகவும், அடுத்த ஆண்டு 4.3 சதவீதமாகவும் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அமைதிப் படை ஒத்துழைப்பு:

ஐ.நா. அமைதிப் படை உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து அமெரிக்காவின் நியூயார்க் நகரில் இந்திய வெளியுறவு அமைச்சக செயலர் சிபி ஜார்ஜ், ஐ.நாவின் மத்திய கிழக்கு, ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியங்களுக்கான உதவி பொதுச் செயலர் காலித் கியாரி ஆகியோர் ஆலோசனை மேற்கொண்டதாக ஐ.நா.வுக்கான இந்திய தூதரகம் சமூக ஊடகத்தில் செவ்வாய்க்கிழமை பதிவிட்டது.

கடந்த 1948-ஆம் ஆண்டுமுதல் ஐ.நா. அமைதிப் படை பணிகளுக்கு 2.75 லட்சத்துக்கும் அதிகமான வீரர்களை இந்தியா அனுப்பியுள்ளது.

இதன்மூலம், அந்தப் பணிகளுக்குப் பெரும் பங்களிக்கும் நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது.

## பல தார மணத்துக்கு தடை: மேற்கு வங்கத்தில் அமித் ஷா உறுதி



கொல்கத்தா, ஏப்.23:

மேற்கு வங்க சட்டப்பேரவைக்கு 23, 29ம் தேதிகளில் 2 கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ளது. முதல் கட்டத்தேர்தலுக்கான கடைசி கட்டப் பிரச்சாரம் நிறைவடைந்தது.

முன்னதாக டார்ஜிலிங் மாவட்டம் சிலிகுரியில் நேற்று நடைபெற்ற பாஜக பிரச்சார பொதுக் கூட்டத்தில் மத்திய அமைச்சர் அமித் ஷா கலந்து கொண்டு பேசியதாவது: மேற்கு வங்கத்தில், வெளிநாட்டைச் சேர்ந்த ஏராளமானோர் ஊடுருவியுள்ளனர். பாஜக ஆட்சிக்கு வந்தால், இங்கு ஊடுருவலை நிச்சயமாக தடுத்து நிறுத்துவோம். ஊடுருவல்காரர்கள் இல்லாத மாநிலமாக மேற்கு வங்கத்தை மாற்றுவோம்.

அதேபோல் நிலங்களை அபகரிக்கும் மாபியா கும்பலையும் விரட்டுவோம். மேலும், புகழ் பெற்ற இரும்புத் தாது உற்பத்தியை மேம்படுத்தி மாநிலத்தை வளர்ச்சி அடையச் செய்வோம். இதன் மூலம் இங்குள்ள வேலையற்ற இளைஞர்கள் அதிக வேலை வாய்ப்பைப் பெறுவர். மேற்கு வங்கத்தில் அமைந்துள்ள குல்டி பகுதிதான், நாட்டிலேயே அதிக இரும்புத் தாது உற்பத்தி மையமாக ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் மம்தா ஆட்சிக்காலத்தில் குல்டி தனது புகழை இழந்தது. பாஜக ஆட்சிக்கு வந்தால் மீண்டும் குல்டி பகுதியை இரும்புத்தாது உற்பத்தி மையமாக மாற்றுவோம். மேலும், இந்த மாநிலத்தில் குறிப்பிட்ட சமூகத்தில் பலதார திருமணங்கள் இன்னும் வழக்கத்திலேயே உள்ளது. அந்த சமூகத்தினர் 4 திருமணங்கள் வரை செய்து கொள்கின்றனர். இதனால் திருமணமான அந்தப் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் போகிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பல தார மணத்தைத் தடை செய்வோம். இவ்வாறு அவர் பேசினார்.

## ஏழுமலையானுக்கு சேவை செய்வது எனது பாக்கியம்: தேவஸ்தான நிர்வாக அதிகாரி பெருமிதம்

திருப்பதி, ஏப்.23:

திருப்பதியில் உள்ள தேவஸ்தான நிர்வாக அலுவலகத்தில் நிர்வாக அதிகாரி எம்.ரவிசந்திரா தலைமையில் தேசிய சிவில் சேவைகள் தினம் நேற்று கொண்டாடப்பட்டது.

இதில் ரவிசந்திரா பேசியதாவது: ஏழுமலையானுக்கு சேவை செய்வது எனது பாக்கியம். பக்தர்களுக்கு உண்மையான அன்பு மூலம் செய்யும் சேவையே உன்னதமானது. தேசிய சிவில் சேவைகள் தினம் என்பது ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு மட்டுமே சம்பந்தப்பட்டதில்லை. சேவை செய்யும் ஒவ்வொருவருக்கும் இது பொருந்தும். மக்கள் - அரசு இடையே அரசு பணியாளர்கள் ஒரு சேவகர்களாக, பாலமாக பணியாற்றிட வேண்டும். நாம் அனைவரும் ஓய்வு பெறும் வரை அர்ப்பணிப்போடு பணியாற்ற வேண்டும். அரசு நிபந்தனைகளுக்கு உட்பட்டு, சட்டங்களை மீறாமல் பணி செய்திட வேண்டும் என்பது எனது வேண்டுகோள். அதேபோல், அனைவருக்கும் புரியும் மொழியில் நாம் பேசினால்தான் விஷயமும் விரைவாக விளங்கும். முடிந்த அளவிற்கு தெலுங்கில் பேச பழகுங்கள். இவ்வாறு ரவிசந்திரா கூறினார். இந்நிகழ்ச்சியில், இணை நிர்வாக அதிகாரிகள் வீர பிரம்மம், டாக்டர் ஏ.சரத், தலைமை பாதுகாப்பு அதிகாரி முரளி கிருஷ்ணா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## இந்திய விமானங்களுக்கு தடையை நீட்டித்தது பாகிஸ்தான்!



புதுடெல்லி, ஏப்.23:

இந்திய விமானங்கள் தங்கள் நாட்டு வான் பரப்பை பயன்படுத்துவதற்கு விதிக்கப்பட்ட தடையை பாகிஸ்தான் மேலும் ஒரு மாதம் நீட்டித்தது. கடந்த 2025, ஏப்ரல் 24-இல் இந்திய விமானங்களுக்கு பாகிஸ்தான் விதித்த தடை இப்போது வரை தொடர்கிறது.

கடந்த ஆண்டு பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க இந்தியா நடவடிக்கை எடுப்பதை அறிந்த பாகிஸ்தான், இந்திய விமானங்கள் தங்கள் வான் பரப்பை பயன்படுத்த தடை விதித்தது. இதையடுத்து, இந்தியாவும் தங்கள் வான் பரப்பை பயன்படுத்த பாகிஸ்தானுக்கு தடை விதித்தது.

இதற்கு முன்பு, 1999 கார்கில் போர், 2019 புல்வாமா தாக்குதலின்போது இதுபோன்ற வான் பரப்பை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டது. பின்னர் பிரச்னை தீர்ந்ததும் தடை நீக்கப்பட்டது. பாகிஸ்தான் விதித்த இந்தத் தடையால் ஐரோப்பா, வளைகுடா நாடுகளுக்குச் செல்லும் இந்திய பயணிகள் விமானங்கள் மாற்றுப் பாதையில் செல்வதால் கூடுதல் செலவு ஏற்பட்டு வருகிறது.

தடை நீட்டிப்பு தொடர்பாக பாகிஸ்தான் விமானப் போக்குவரத்து ஆணையம் வெளியிட்ட செய்தியில், 'இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட, குத்தகைக்கு விடப்பட்ட பயணிகள் மற்றும் ராணுவ விமானங்களுக்கான தடை 2026 மே 25 காலை 5 மணி வரை நீட்டிக்கப்படுகிறது' என்று கூறப்பட்டுள்ளது.

# அமெரிக்கா - ஈரான் போர் நிறுத்தம் நீட்டிப்பு: ட்ரம்ப் அறிவிப்பு

**வாஷிங்டன், ஏப்.23:**

கடந்த பிப்.28-ம் தேதி ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தின. இதைத் தொடர்ந்து இஸ்ரேல் மற்றும் வளைகுடாவில் உள்ள அமெரிக்க நேச நாடுகள் மீது ஈரான் பதில் தாக்குதல் நடத்தியது. ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டதால் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டது. இந்நிலையில், அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே இரண்டு வார கால போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இந்த போர் நிறுத்தம் இன்றுடன்



(ஏப்.22) நிறைவடைகிறது. இந்த சூழலில் ட்ரம்ப் இதனை நீட்டித்துள்ளார்.

இது தொடர்பாக ட்ரூத் சோஷியல் சமூக வலைதளத்தில் ட்ரம்ப் பதிவிட்டுள்ளார். "ஈரான் உடனான போர் நிறுத்தம் நீட்டிக்கப்படுகிறது. அமைதி ஒப்பந்தம் சார்ந்து ஒருங்கிணைந்த முன்மொழிவை ஈரான் முன்வைக்கும் வரையில் இந்த போர் நிறுத்தம் தொடரும். அதே நேரத்தில் ஈரான் துறைமுகங்கள் முற்றுகையிட்டுள்ள அமெரிக்க ராணுவத்தின் பணியை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு நான் கூறியுள்ளேன்," என ட்ரம்ப் தெரிவித்துள்ளார். போர் நிறுத்தம் நீட்டிக்கப்பட்டதை பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப் வரவேற்றுள்ளார். இருப்பினும் இரண்டாம் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தை மேற்கொள்ள அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ், பாகிஸ்தான் செல்ல இருந்த திட்டத்தை ஒத்திவைத்துள்ளதாக அமெரிக்க அரசு கூறியுள்ளது. இரண்டாம் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தையை மேற்கொள்ளும் நடவடிக்கையை பாகிஸ்தான் மேற்கொண்டது. அதை ஈரான் நிராகரித்து வருகிறது. முன்னதாக, ஈரானுடனான போர் நிறுத்தத்தை நீட்டிக்க அமெரிக்கா விரும்பவில்லை என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சொல்லியிருந்தார். இது தொடர்பாக செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் தெளிவாக விளக்கமளித்தார். ஈரானோடு ஒப்பந்தம் ஏதும் ஏற்படவில்லை என்றால் மீண்டும் தங்கள் தரப்பு தாக்குதலை தொடங்கும் என அவர் தெரிவித்திருந்தார்.

## 2-வது ஈரான் கப்பலை கைப்பற்றிய அமெரிக்கா



**வாஷிங்டன், ஏப்.23:**

கடந்த 19-ல் ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் ஈரானின் தவுஸ்கா சரக்கு கப்பலை அமெரிக்க கடற்படை கைப்பற்றியது.

இதைத் தொடர்ந்து டிபானி என்று பெயரிடப்பட்ட மற்றொரு ஈரானிய எண்ணெய் கப்பலை அமெரிக்க கடற்படை நேற்று கைப்பற்றியது. இந்த எண்ணெய் கப்பல் 330 மீட்டர் நீளம் கொண்டது. 3 லட்சம் டன் கச்சா எண்ணெயை ஏற்றிச் செல்லும் திறன் கொண்டது. ஈரான் துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட டிபானி கப்பல் சிங்கப்பூரை நோக்கி சென்று கொண்டிருந்தது.

அமெரிக்க கடற்படை வீரர்கள் நேற்று ஹெலிகாப்டர்கள் மூலம் டிபானி கப்பலில் இறங்கி அந்த கப்பலை கைப்பற்றினர். இதுதொடர்பான வீடியோவை அமெரிக்க கடற்படை வெளியிட்டு உள்ளது. அதோடு வெளியிடப்பட்ட பதிவில், "பொருளாதார தடை விதிக்கப்பட்ட ஈரான் கப்பலை சர்வதேச கடல் பகுதியில் கைப்பற்றினோம். தடை செய்யப்பட்ட எண்ணெய் கப்பல்களின் போக்குவரத்தை அனுமதிக்க மாட்டோம்" என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஈரானின் சரக்கு, எண்ணெய் கப்பல்களை கைப்பற்றுவது போர் நிறுத்த மீறல் ஆகும் என்று அந்த நாட்டு தலைவர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். இதுகுறித்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில், "போர் நிறுத்தத்தை பலமுறை ஈரான் மீறியிருக்கிறது" என்று குறிப்பிட்டு உள்ளார்.

## ஏவுகணை தயாரிக்க உதவும் ரசாயனங்களை ஈரானுக்கு அனுப்பிய சீனா

**வாஷிங்டன், ஏப்.23:**

ஏவுகணைகள் தயாரிக்க உதவும் ரசாயனங்களை ஈரானுக்கு சீனா அனுப்பியுள்ளது என்று அமெரிக்காவிலுள்ள குடியரசுக் கட்சியின் நிர்வாகி நிக்கி ஹாலே தெரிவித்துள்ளார். மேலும் இதற்கான ஆதாரங்களையும் அவர் வெளியிட்டுள்ளார்.

அமெரிக்கா மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையே போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தி யில் கப்பல் போக்குவரத்து முடங்கியுள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவுக்கான ஐ.நா. தூதராக பணியாற்றியவரும், தற்போது அதிபர் டொனால்டு ட்ரம்ப் சார்ந்த குடியரசு கட்சியின் நிர்வாகியுமான நிக்கில ஹாலே எக்ஸ் சமூக வலைதளத்தில் சில ஆதாரங்களை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது: சிறை பிடிக்கப்பட்ட கப்பலில் இருந்து ஏவுகணைகள் தயாரிக்க பயன்படுத்தப்படும் மிக முக்கியமான ரசாயனங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது சீனாவிலிருந்து ஈரானுக்கு ரகசியமாக அனுப்பி வைக்கப்பட்டவை. இதுதொடர்பான சில புகைப்படங்கள் மற்றும் ஆதாரங்களை சமர்ப்பித்துள்ளேன்.

ஈரான் தனது ரகசியத் திட்டங்களை மறைப்பதற்காக சீனாவைப் பயன்படுத்திக் கொள்கிறதா என்ற கேள்வி எழுகிறது. கப்பலில் இருந்த ரசாயனப் பொருட்கள் சீன நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டதற்கான முத்திரைகள் இருக்கின்றன. இதன் மூலம் உலக நாடுகளை ஈரான் ஏமாற்றி வருகிறது.

ஈரானின் இந்த நடவடிக்கை அணுசக்தி ஒப்பந்தத்தை மீறுவது மட்டுமல்லாமல், உலக அமைதிக்கே ஒரு மிகப் பெரிய சவாலாக உள்ளது. அமெரிக்காவின் நட்பு நாடுகளை அச்சுறுத்தும் வகையில் ஈரான் தனது ஏவுகணைத் திட்டத்தை வலுப்படுத்தி வருவதை அமெரிக்கா ஒரு போதும் அனுமதிக்காது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் இந்த அதிரடி சோதனை மற்றும் கப்பல் சிறைபிடிப்பு நடவடிக்கைக்கு ஈரான் கடும் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், நிக்கி ஹாலேயின் இந்த அறிவிப்பு ஈரான் நாட்டுக்கு மேலும் நெருக்கடியை கொடுத்துள்ளது.

அதேநேரத்தில், அமெரிக்காவின் இந்தக் குற்றச்சாட்டுகளை ஈரான் முற்றிலும் மறுத்துள்ளது.

## நேபாள புதிய அரசுக்கு எதிராக மக்கள் போராட்டம்: என்ன காரணம்!

**காத்மாண்டு, ஏப்.23:**

நேபாள நாட்டில் மக்கள் போராட்டத்தை எதிர்கொண்டுள்ளது கடந்த மாதம் புதிதாக ஆட்சிக்கு வந்த பிரதமர் பாலேந்திர ஷா தலைமையிலான அரசு. அதற்கான காரணம் என்ன என்பது குறித்து பார்ப்போம்.

கடந்த மாதம் 27-ம் தேதி நேபாள பிரதமராக 35 வயதான பாலேந்திர ஷா பதவியேற்றார். இந்நிலையில், அவரது அரசு மக்களின் எதிர்ப்பை பெற்றுள்ளது. கடந்த ஆண்டு அங்கு சர்மா ஒலி தலைமையிலான அரசு, கவிழ்ந்தது.

இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது ஜென் ஸீ தலைமுறையினரின் போராட்டம். அதன் பின்னர் இடைக்கால நேபாள அரசை சுசிலா கார்கி வழிநடத்தினார். இதன் பின்னர் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பாலேந்திரா ஷா வெற்றி பெற்று பிரதமர் ஆனார்.

அவரது ஆட்சி அமைந்து ஒரு மாத காலம் கூட பூர்த்தியாகாத நிலையில் மக்களின்



எதிர்ப்பை பெற்றுள்ளது. நாடு முழுவதும் மக்கள் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தகவல். இந்தியாவிலிருந்து கொண்டுவரப்படும் 100 ரூபாய்க்கு கூடுதலான மதிப்பு கொண்ட பொருட்களின் மீது கட்டாயச் சுங்க வரியை விதிக்கும் அரசின் முடிவு, அரசியல் கட்சிகளுடன் தொடர்புடைய மாணவர் அமைப்புகளை தடை செய்யும் அரசின் கொள்கை மற்றும் உள்துறை அமைச்சர் சுதான் குருங் மீதான சொத்து குவிப்பு வழக்கு மற்றும் நிதி முறைகேடு காரணமாக அவர் பதவி விலக வேண்டியும் நேபாளத்தில் போராட்டம் நடைபெற்றது வருகிறது.

புதிய அரசின் சுங்க வரிக் கொள்கை எல்லையோரத்தில் வசிக்கும் சாமானிய மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் என நேபாள மக்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இப்படி ஒரே நேரத்தில் அரசின் கொள்கை, மாணவர் அமைப்பினர் மற்றும் அமைச்சர் மீதான குற்றச்சாட்டு என்று மூன்று விதமான அழுத்தங்களை பாலேந்திர ஷாவின் அரசு எதிர்கொண்டுள்ளது.

## பிரிட்டனில் இனி 2008-க்கு பின் பிறந்தவர்கள் சிகரெட் வாங்க வாழ்நாள் தடை நிறைவேறியது மசோதா

**நியூயார்க், ஏப்.23:**

2008-ஆம் ஆண்டுக்குப் பிறகு பிறந்தவர்கள் சிகரெட் வாங்க வாழ்நாள் தடையைக் கொண்டுவரும் மசோதா ஒன்று பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. புகைப்பழக்கமில்லா தலைமுறையை உருவாக்க இந்தப் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

பிரிட்டனில் 17 வயது மற்றும் அதற்குக் குறைந்த வயதுடையவர்கள் சிகரெட் வாங்குவதைத் தடை செய்யும் மசோதாவுக்கு பிரிட்டன் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் ஒப்புதல் அளித்துள்ளன. இதன்படி, 2009-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதிக்குக்குப் பிறகு பிறந்தவர்கள் யாரும் (தற்போது 17 வயதானவர்கள்) சிகரெட் வாங்க முடியாது. பிரிட்டனின் இந்த மசோதாவுக்கு 'புகையிலை மற்றும் வேப்ஸ்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.



இது குறித்து சுகாதாரத்துறை அமைச்சர் வெஸ் ஸ்ட்ரீட்டிங் கூறும்போது, "நாட்டின் சுகாதார வரலாற்றில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம். இது புகைப்பழக்கமற்ற முதல் தலைமுறையை உருவாக்க வழிவகுக்கும்" என்றும் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, 2022-ஆம் ஆண்டில், புகைப்பிடித்தலுக்கு எதிராக இத்தகைய சட்டத்தை இயற்றிய முதல் நாடாக நியூசிலாந்து திகழ்ந்தது. இச்சட்டத்தின் மூலம், 2008-க்குப் பிறகு பிறந்தவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டது.

ஆனால், இச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஓராண்டுக்கும் குறைவான காலத்திலேயே, நவம்பர் 2023-ல் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் ரத்து செய்தது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில், 2007-ஆம் ஆண்டு ஜனவரி 1-க்குப் பிறகு பிறந்த எவருக்கும் சிகரெட் விற்பனை செய்வதை மாலத்தீவு தடை செய்தது குறிப்பிடத்தக்கது.

## அமைதிக்கான நோபல் பரிசுக்கு ஷாபாஸ் ஷெரீஃப், அசீம் முனீர் பரிந்துரை!

**இஸ்லாமாபாத், ஏப்.23:**

மத்திய கிழக்கு போரில் அமைதி முயற்சிகளை முன்னெடுத்தற்காக பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப், ராணுவத் தலைமைத் தளபதி அசீம் முனீர் ஆகியோருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க பரிந்துரைத்து, அந்நாட்டின் கைபர் பக்துன்கவா மாகாண சட்டப்பேரவையில் செவ்வாய்க்கிழமை தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

புவிசார் அரசியல் பதற்றங்கள் அதிகரித்து வரும் சூழலில், பாகிஸ்தானின் பொறுப்பான ராஜீய முயற்சிகள் ஒரு பெரும் நெருக்கடியைத் தவிர்த்ததுடன், உலகப் பொருளாதாரத்தின் மீதான அழுத்தத்தைக் குறைக்கவும் உதவியதாகத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

இவ்விவகாரத்தில் தொலைநோக்குப் பார்வையுடன் பிரதமர் ஷெரீஃப் மற்றும் தளபதி முனீர் ஆற்றிய பங்களிப்பைக் கௌரவிக்கும் வகையில், அமைதிக்கான நோபல் பரிசுக்கு இவர்களின் பெயர்களைப் பரிந்துரைப்பதாக தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது. கடந்த 16-ஆம் தேதி, பஞ்சாப் மாகாண சட்டப்பேரவையில் இதேபோன்ற தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஆனால், ராணுவத் தளபதியாக அசீம் முனீர் நியமனத்தைத் தொடக்கம் முதலே எதிர்த்து வரும் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பிடிஐ கட்சி பெரும்பான்மை வகிக்கும் கைபர் பக்துன்கவா பேரவையில் இத்தீர்மானம் நிறைவேறுவது கடினமே எனக் கூறப்படுகிறது.

## கனடா: இந்திய மாணவரை சுட்டுக் கொன்றவருக்கு ஆயுள் சிறை

மனச்சிதைவால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் துப்பாக்கிச்சூடு நடத்தியதால் தண்டனை கூடாது என்று குற்றவாளி சார்பில் முன்வைக்கப்பட்ட வாதம் நிராகரிக்கப்பட்டது. உத்தர பிரதேச மாநிலம் காஜியாபாத்தைச் சேர்ந்த கார்த்திக் வாசுதேவ் (21) கடந்த 2022-ஆம் ஆண்டு ஜனவரியில் மேல்படிப்புக்காக கனடாவின் டொராண்டோ நகருக்குச் சென்றார். அங்கு சென்ற சில மாதங்களில் ரயில் நிலையம் அருகே நடந்து சென்று கொண்டிருந்தபோது கனடாவைச் சேர்ந்த ரிச்சர்ட் எட்வின் அவரை பின்புறமாக சரமாரியாக துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டு தப்பியோடினார். இரு நாள்களில் மேலும் ஒருவரை அவர் இதேபோல சுட்டுக் கொன்றார். கொலை செய்யப்பட்ட இருவருமே கொலையாளிக்கு எவ்விதத்திலும் அறிமுகமானவர்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து, ரிச்சர்ட் எட்வினை காவல் துறையினர் கைது செய்தனர். 4 ஆண்டுகளாக வழக்கு நடைபெற்றுவந்த நிலையில் அவருக்கு ஆயுள் சிறைத் தண்டனை விதித்து டொராண்டோ நீதிமன்றம் தீர்ப்பளித்தது. தனக்கு மனச்சிதைவு பாதிப்பு இருந்ததை காரணம் காட்டி தண்டனை வழங்கக் கூடாது என்று குற்றவாளி தரப்பில் வாதிடப்பட்டது. எனினும், இதை ஏற்க மறுத்த நீதிமன்றம் அவருக்கு ஆயுள் சிறைத் தண்டனை விதித்தது. மேலும், அவர் இடைக்காலமாக வெளியேற பரோல் வழங்கக் கூடாது என்றும் உத்தரவிட்டது.

இது தொடர்பாக கார்த்திக் வாசுதேவின் தந்தை ஜித்தேஷ் வாசுதேவ் கூறுகையில், 'வழக்கின் இறுதிக்கட்ட விசாரணைக்காக நானும், எனது மனைவியும் கனடாவுக்கு வந்தோம். 4 ஆண்டுகால சட்டப் போராட்டத்துக்குப் பிறகு நீதி கிடைத்துள்ளது' என்றார்.

## இந்தியா நோக்கி வந்த கப்பலை சிறைபிடித்த ஈரான்

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28-ந்தேதி தாக்குதல் நடத்தியது. இதில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியானார்கள். இந்த தாக்குதல், ஏறக்குறைய 40 நாட்களாக நீடித்து வந்த நிலையில், கடந்த 8-ந்தேதி 2 வார கால போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இதனால், பதற்றம் சற்று தணிந்தது. இதனை தொடர்ந்து, ஹார்மூஸ் ஜலசந்தியை ஈரான் திறந்தது.

எனினும், அந்த பகுதியை கடந்து செல்லும் கப்பல்கள் தங்களுக்கு கட்டணம் செலுத்த வேண்டும் என ஈரான் அதிரடியாக அறிவித்தது. இது உலக நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இந்த நிலையில், ஈரானின் இஸ்லாமிய புரட்சி காவல் படையினர், ஹார்மூஸ் ஜலசந்தியில் 2 கப்பல்களை சிறைபிடித்து வைத்துள்ளனர். அவற்றில் ஒன்று, இந்தியாவை நோக்கி வந்த கப்பல் ஆகும். எபமினன்டோஸ் என்ற அந்த கப்பல், விதிகளை மீறி விட்டது என ஈரான் தெரிவித்து உள்ளது. இதேபோன்று, எம்.எஸ்.சி. பிரான்சிஸ்கா என்ற கப்பலையும் ஈரான் முடக்கியுள்ளது. இதில் எம்.எஸ்.சி., உலக அளவில் மிக பெரிய கப்பல் நிறுவனங்களில் ஒன்றாகும். இதனால், அந்த பகுதியில் பதற்றம் அதிகரித்து உள்ளது. கடல்சார் பாதுகாப்பை மோசடி செய்யும் வகையிலும், தேவையான அனுமதி இன்றியும் கப்பல்கள் இயக்கப்பட்டு உள்ளன. அதனால், அந்த கப்பல்கள் சிறைபிடிக்கப்பட்டு, ஈரான் கடற்பகுதியை நோக்கி கொண்டு செல்லப்படுகின்றன என அதுபற்றி ஈரானின் இஸ்லாமிய புரட்சி காவல் படை வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கின்றது.

## ஹார்முஸ் ஜலசந்தியில் 2 கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல் - அமைதிப் பேச்சு தொடங்குவதில் சிக்கல்

**தெஹ்ரான், ஏப்.23:**

போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அமெரிக்கா - ஈரானுக்கு இடையிலான பேச்சுவார்த்தைக்கு சிக்கலை ஏற்படுத்தும் வகையில், இன்று ஹார்முஸ் ஜலசந்தியில் இரண்டு கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக பிரிட்டிஷ் ராணுவம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான இடைக்கால போர் நிறுத்தம் நீட்டிக்கப்படுவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார். போர் நிறுத்த நீட்டிப்பு குறித்த ட்ரம்ப்பின் அறிவிப்புக்கு ஈரான் இன்னும் பதிலளிக்கவில்லை. அதேநேரத்தில், உடன்பாடு எட்டப்படாவிட்டால் மீண்டும் சண்டையைத் தொடங்கத் தயாராக இருப்பதாக இரு நாடுகளும் எச்சரித்துள்ளன.

இந்தச் சூழலில், பிரிட்டிஷ்



ராணுவத்தின் கடல்சார் வர்த்தக செயல்பாடுகள் (UKMTO) மையம், ஈரானின் துணை ராணுவப் படையான புரட்சிகர காவலர் படை (IRGC), இன்று காலை 7:55 மணியளவில் ஹார்முஸ் ஜலசந்தியில் ஒரு சரக்கு கப்பலைத் தாக்கி சேதப்படுத்தியதாக தெரிவித்தது.

துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு முன்பு ஈரான் ராணுவம், கப்பலுக்கு எச்சரிக்கை விடுக்கவில்லை என்றும் பிரிட்டிஷ் ராணுவம் கூறியது.

அதிர்ஷ்டவசமாக, இந்தச் சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. மேலும் இந்தத் தாக்குதலால் எந்தச் சேதமும் ஏற்படவில்லை.

இரண்டாவதாக ஒரு சரக்குக் கப்பல் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு கடலில் நிறுத்தப்பட்டதாக பிரிட்டிஷ் ராணுவம் தெரிவித்தது. அந்தக் கப்பலுக்கும் எந்தச் சேதமும் ஏற்படவில்லை என்று அறிவித்துள்ளது.

முன்னதாக, கடந்த 19-ல் ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் ஈரானின் தவுஸ்கா சரக்கு கப்பலை அமெரிக்க கடற்படை கைப்பற்றியது. இதைத் தொடர்ந்து டிபானி என்று பெயரிடப்பட்ட மற்றொரு ஈரானிய எண்ணெய் கப்பலை அமெரிக்க கடற்படை நேற்று கைப்பற்றியது. இதையடுத்து, ஈரானின் சரக்கு, எண்ணெய் கப்பல்களை கைப்பற்றுவது போர் நிறுத்த மீறல் ஆகும் என்று அந்த நாட்டு தலைவர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

கடந்த பிப்ரவரி 28-ம் தேதி முதல் அமெரிக்கா இஸ்ரேல் கூட்டுப் படைகள் ஈரான் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன. ஈரானும் இஸ்ரேல் மற்றும் வளைகுடா பகுதிகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மீது தாக்குதல் நடத்தியது. கடந்த 8-ம் தேதி இருதரப்புக்கு இடையே 2 வாரங்களுக்கு போர் நிறுத்தம் அமல் செய்யப்பட்டது. இதனிடையே கடந்த 11, 12-ம் தேதிகளில் அமெரிக்கா - ஈரான் பிரதிநிதிகள் இடையே பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது.

இதைத் தொடர்ந்து இஸ்லாமாபாத்தில் 2-ம் சுற்று பேச்சுவார்த்தையை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அணு ஆயுதம், ஹார்முஸ் ஜலசந்தி கட்டுப்பாடு, லெபனான் போர் நிறுத்தம் உள்ளிட்ட விவகாரங்களில் இரு தரப்புக்கும் இடையே ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை. இதனால் 2-ம் சுற்று பேச்சுவார்த்தை தள்ளி வைக்கப்பட்டு வருகிறது கவனிக்கதக்கது.

# தமிழக சட்டமன்ற தேர்தல்:

# இன்று

# 234 தொகுதிகளில் வாக்குப்பதிவு








## ‘பிரதமர் மோடியை ‘பயங்கரவாதி’ என கூறிய கார்கே மீது நடவடிக்கை எடுப்பீர்’

## ரூ.1,262 கோடி மதிப்பில் தங்கம், பணம் பறிமுதல்: அர்ச்சனா பட்நாயக்

## சென்னையில் வெய்யில் கொளுத்தும்! எச்சரிக்கை



## அமெரிக்கா - ஈரான் போர் நிறுத்தம் நீட்டிப்பு: ட்ரம்ப் அறிவிப்பு


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை | 23.04.2026 வியாழக்கிழமை | இலவச இ–பேப்பர்